இலவச வெளியீடு: GERMANY , ENGLAND சித்திரை. April. 2015

Free Circulation

# வெற்றிமணி

Vettimaniy

மணி 65


பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A






# யேர்மனியில் இருந்து தமிழ்பரப்பிய மாமலர்

## இனி இவர்போல் எவர் உளர்!



## 19 ஆவது திருத்தச் சட்டமூலத்தில் ....



மீண்டும் மிடுக்குடன் கட்டப்பொம்மன்!

நாள் எல்லாம் தமிழோடு வாழ்ந்த தமிழாலயத் தந்தை இரா.நாகலிங்கம்

எங்கள் இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288 விபரம் பக்கம் 09

ATHAVAN TV ஆதவன் தொலைக் காட்சியின் யேர்மனி முகவர்
கனீன் எலக்ரோனிக்ஸ்
Schevenhofer Weg 24,- 42111 Wuppertal
Tel: 0205 3423 740 விபரம் பக்கம் 26

Gopara Gnanam
Textiles & Jewellery Shop
Tel: 0231/5450028- Mob: 01713306542
Rheinische Str.81-- 44137 Dortmund
மேலதிக விபரம் 6ம் பக்கம்

Ceylon Imbiss Page.32
Tel:0231 7252859

Lucky Fly page.17
0234 239 90 32 Mobile:0179 14 84 892

StaR - Impex
Tel.: 0231/8602696



S.K.Silks & Gold Paraadise

Mr.P.Sritharan.
Proprietor

என்றும் புதியது அழகின் இரகசியம் அது.

தமிழ் புதுவருடத்தை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை!
14.03.2015 முதல் 15.04.2015 வரை
அனைத்து ஆடைவகைகளும் 30 வீதம் முதல் 70 வீதம் வரை கழிவு விலையில்!
எங்கள் இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்



மாபெரும் ராஜமுத்திரை

Tel:0231 9501 647 Adler str 33 - 44137 Dortmund







# இயற்கை வரையும் ஓவியங்களும்
# முதுமையைக் காக்கும் கலைகளும்!

மாதவி



**பட்டமரத்தில் மரமாகிப்போனகாகமும் காகமாகிப்போன மரமும்.**

வானம் என்ற திரையினிலே ஏழு வர்ணங்களை கொண்டு தினமும் அழித்து அழித்து எவ்வளவோ ஓவியங்களை வரைந்துகொண்டு இருக்கின்றாள் இயற்கை அன்னை. அவள் கடற்கரைகளிலும் காட்டுமரங்களிலும் கற்பாறைகளிலும் வடிக்கும் சிற்பங்களுக்கும் ஓவியங் களுக்கும் நிகரே இல்லை. இவ்வாறு 1990 ஆண்டு யேர்மனியில் நடைபெற்ற சித்திர சிறப்பக்கண்காட்சியில் குறிப்பிட்டேன். அதனைப் புதியவடிவம் என்னும் கண்காட்சிமலரிலும் அன்று குறிப்பிட்டு இருந்தேன்.

இன்று அக்கண்காட்சி நடைபெற்று 25 வருடங்கள் நிறைவான நேரத்தில் அன்று சொன்ன இந்த இயற்கை வரையும் ஓவியங்களை படங்களுடன் சற்றுவிரிவாக பகிர்கின்றேன்.

வானத்தில் ஏழு வர்ணத்தை குழைத்து வடிக்கும் ஓவியங்களைக் கூர்ந்துகவனிப்போமானால் இயற்கை யவள் வரைந்த உருவங்கள் எம் கண்முன்னே விரியும். அந்த வானவெளியில் நாம் வாழ்வில் கண்டவை அறிந்தவை என இவற்றை மட்டுமே நாம் இனம் காணமுடியும் வானத்தில் முகில்கூட்டங்கள் கடல் அலைகள்போலவும் அவற்றிடையே கப்பல்போன்ற சிலவடிவங்களில் முகில்களும் முப் பரிமாணத்துடன் ஒரு கப்பல் கடலில் மிதப்பது போன்ற ஒரு காட்சியை இயற்கை ஓவியப்படுத்தியிருக்கும்.
சில நேரங்களில் ஒரு பெண் சேலை காற்றில் பறக்க குடத்துடன் வருவது போலவும் இருக்கும் (கற்பகம் படத்தில் கே.ஆர். விஜயா மன்னவனே அழலாமா கண்ணீரை விடலாமா பாடல்காட்சி மாதிரி. இது இயக்குநருக்கு இயற்கை கொடுத்த கற்பனைத் துருப்புச்சீட்டு) இங்கு முக்கிய மான தொருவிடயம் என்னவெனில் இயற்கையை இரசிக்கும் தன்மை அழகை அனுபவிக்கும் இயல்பு போன்ற கலையுணர்வுகள் வாய்க்கப் பெற்றவர்களாக பார்ப்பவர்களும் இருந்தால் தான், இயற்கை அன்னையின் அற்புதப் படைப்புக்களை அறிந்து திழைக்கமுடியும்.

இத்தகைய ஓர் கலையுணர்வு ஒருவருக்கு இல்லையேல் வானத்தில் உள்ளவை வெறும் மேகக்கூட்டமாகவே தோற்றமளிக்கும்.

இந்த வானவெளியில் இயற்கை நாம் காணாத பல வடிவங்களையும் கலைரசனை மிக்கதாக வடித்துத் தருகின்றன, இவை இயற்கை தரும் புதிய வடிவங் களாகும்.

தென்னை மர ஓலைக்கீற்றுக்கு இடையால் தெரியும் நிலவு, நேரே பார்க்கின்ற நிலவை விட அழகு. இது அழகியற்கோணம். தரும் அற்புதக்கலையாக்கம். பார்ப்பவர் மனமும் அவர்கள் பார்க்கின்ற கோணமும் அழகை மெருகூட்டும்.



**பனைமரத்தில் இருந்து விழுந்துசிதறியும் சிரிக்கும் பனம்பழத்திலும் அழகு!**

இன்று சுற்றுலா என்று விடுமுறைக்காலங்களில் செல்லும் போது கமராக்கள் எல்லோருடைய கைகளிலும் இருக்கும். தம்மை படம் எடுத்து முகப்புத்தகத்தை நிரப்புபவர்களும், இயற்கையையும் இயற்கையின் இரகசிய அழகைப் படம்பிடித்து தமது அழகியற்கோணங்களால் அழகுக்கு அழகு சேர்ப்பவர்களும் உண்டு.

வெளிநாட்டவர் பலரை இச்சுற்றுலாவின்போது பார்த்தால் அவர்கள் தம்மைத்தாமே படம் எடுப்திலும் பார்க்க, இந்த இயற்கையை எடுப்திலேயே மெய்மறந்து இருப்பர். அவர்கள் பூக்களோடும் கதைப்பர்! பூனைகளோடும் பேசுவர்!!. அவர்கள் தமக்குத்தாமே இயற்கை மூலாம் பூசிக்கொள்வர். இயற்கையை இரசிக்கும் ஒருவகைக்கலை அது. இந்தக் கலையுணர்வு வெளிநாட்வர்களுக்குமட்டும் சொந்தமல்ல.

நம்மூதாதையர் பலரைப் பார்த்திருப்பீர்கள். ஆடு, மாடு, கோழி எல்லாவற்றையுமே உயர்திணையாக வைத்துக் கதைப்பார்கள். இவனுக்கு எவ்வளவு குழை போட்டாலும் காணாது. கொஞ்சநேரம் இருபார்ப்போம். பறந்து திரியிறாய் என்று முட்டைபோடும் கோழியுடன் கதைப்பார்கள்.


தொடர்ச்சி 6ம் பக்கம்



## வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
—கவிஞர்.வி.க

ஓசை 223



ஆரம்பம்:1950

ஸ்தாபகர்

அமரர் மு.க.சுப்பிரமணியம்

(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்

“ஓவியக்கலைவேள்”

கலாநிதி

மு.க.சு.சிவகுமாரன் B.F.A.

*Chief Editor:*

**Dr.M.K.S.Sivakumaran B.F.A.**

Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
01575 83 94 325

e-mail: vettimaniy@hotmail.com

Company No: 8876276


**“வெற்றிமணிமொழி”**

தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


பத்திரிகை வடிவம்

சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)

Vettimaniy Ltd
Sanje:07824 61 83 83
vai g (U.K) 00 44 7788 195962



Vettimaniy has no responsibility of the contents of the articles and advertisements


### 19 ஆவது திருத்தச் சட்டமூலத்தில்

# வடக்கு கிழக்கு மாகாணத்திற்குரிய பொலிஸ் ஆணைக் குழுவை நியமிக்கும் சுயாதீன ஆணைக்குழுவும் தவிர்ப்பு!

–அ.நிக்ஸன்–

19 ஆவது திருத்தச் சட்டமூலத்தில் ஜனாதிபதி ஆட்சி முறை நீக்கம் இல்லை. வடக்கு கிழக்கு மாகாணத் திற்குரிய பொலிஸ் ஆணைக் குழுவை நியமிக்கும் சுயாதீன ஆணைக்குழுவும் தவிர்ப்பு-
-அ.நிக்ஸன்-(23.03.2015)

19 ஆவது திருத்தச் சட்ட மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வானது அல்ல. ஆனால் அரச திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்களை சுயாதீனமாக செயற் படுத்தக் கூடிய சில ஏற்பாடுகள் இருப்பதாக கூறப் படுகின்றது. 19 ஆவது திருத்தச் சட்ட மூலத்தில் என்னென்ன விடயங்கள் முழுமையாக உள்ளடங் கியுள்ளன என்பது குறித்து இதுவரை முழுமையாக தெரிவிக்கப்படவில்லை. ஆனாலும் 17 ஆவது திருத்தச்சட்டத்தில் உள்ள விதப்புரைகள் இந்த சட்ட மூலத்தில் சேர்க்கப்படும் என அரசாங்கம் கூறியுள்ளது.
வர்த்தமானியில் மாற்றங்கள்
மூன்று விடயங்கள் இந்த 19 ஆவது திருத்தத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றன. ஒன்று, அரச திணைக் களங்களின் சுயாதீனமான செயற்பாடு- அவற்றில் பொலிஸ் ஆணைக்குழுக்கள் மற்றும் மாகாண பொலிஸ் ஆணைக்குழுக்கள் என்பன முக்கியமானதாகும். இரண்டாவது, நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சி முறை மாற்றியமைக்கப்பட்டு பிரதமர் தலைமை யிலான நாடாளுமன்ற ஆட்சி முறையை கொண்டு வருதல். மூன்றாவது, அரசியலமைப்பில் உள்ள நடை முறைப்படுத்தப்படாத சட்டங்களை மீண்டும் செயற் படவைத்தல். அல்லது புதுப்பித்தல். இந்த மூன்று விடயங்களிலும் பிரதானமானது சுயாதீன ஆணைக் குழுக்கள்தான.
2010ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட 18ஆவது திருத்தம் ஜனாதிபதியின் அதிகாரங்களை அதிகரித்ததுடன் நீதித் துறையின் சுதந்திரமான செயற்பாட்டிற்கும் தடையாக அமைந்தது என்ற குற்றச்சாட்டுக்கள் அப்போது முன்வைக்கப்பட்டன. இந்த நிலையில் புதிய அரசாங்கம் 19 ஆவது திருத்தத்தை கொண்டு வந்து, அந்த குறைபாடுகளை நீக்க முற்படுவது அரசாங்கத்தின் நம்பகத் தன்மையையும் ஜனநாயகத்தின் மீதான மக்களின் நம்பிக்கையும் அதிகரிக்கும் என எதிர்ப்பார்க்கலாம். ஆனால் 19 ஆவது திருத்தத்தின் மூலப் பிரதியில் கூறப்பட்டிருந்த சில விடயங்கள் தற்போது அகற்றப் பட்டுள்ளதாக ஜனநாயகத்துக்கான சட்டத் தரணிகள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

**நிறைவேற்று அதிகாரமுறை**

குறிப்பாக நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சியை முறையை நீக்கி பிரதமர் தலைமையிலான பாராளுமன்ற ஆட்சி முறையை ஏற்படுத்துவது என்ற விடயம் 19 ஆவது திருத்தத்தின் மூலப் பிரதியில் இருந்து நீக்கப்பட்டுள்ளது என்றும் இதனால் ஜனாதிபதி ஆட்சி முறை தொடர்ந்து நீடித்துச் செல்ல 19 ஆவது திருத்தம் வழி வகுக்கும் எனவும் அந்த சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது. புதிய அரசாங்கத்தின் நூறு நாள் வேலைத் திட்டத்தில் ஜனாதிபதி ஆட்சி முறையை இரத்துச் செய்வது என்ற விடயம் முக்கியமானது. இந்த நிலையில் 19 ஆவது திருத்தத்தின் மூலப்பிரதியில் மாற்றங்கள் செய்யப்பட்டதன் பின்னணி தொடர்பாக சந்தேகங்கள் எழுந்துள்ளன.

அதேவேளை 18 ஆவது திருத்தத்தில் கூறப்பட்டுள்ள ஜனாதிபதிக்குரிய அதிகாரங்கள் 19 ஆவது திருத்தத்தில் இரத்துச் செய்யப்படும் என்ற விதப்புரைகள் இருப்பதாக தெரியவில்லை. குறிப்பாக நீதியமைச்சின் செயலாளரை ஜனாதிபதி நியமித்தல். நீதியரசர்களின் நியமனம், மற்றும் பதவி உயர்வு போன்ற விடயங்கள் 18 ஆவது திருத்தத்தில் ஜனாதிபதிக்குரியதாக அல்லது அவர் பெயர் குறித்து நியமிக்கும் குழுவுக்கு உரியதாக கூறப்பட்டுள்ளது. இந்த விடயங்கள் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகார முறைமைக்குள் ஏற்கனவே இருந்தாலும் கூட 18 ஆவது திருத்தத்தில் அந்த விடயங்கள் ஜனாதிபதிக்குரியவை என்று நேரடியாகவே குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஜனாதிபதி அரசாங்கத்தின் தலைவர்**


ஆனால் 19 ஆவது திருத்தத்தில் ஜனாதிபதிக்குரிய அதிகாரங்கள் எதுவும் வரையறை செய்யப்படவில்லை. நாடாளுமன்றத்தின் மேற்பார்வையில் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியின் அதிகாரங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்பதுதான் 19 ஆவது திருத்தத்தின் மூலப்பிரதியில் கூறப்பட்டுள்ளது. அத்துடன் பிரதமர் அரசாங்கத்தின் தலைவராகவும். ஜனாதிபதி நாட்டின் தலைவராகவும் முப்படைகளின் தளபதியாகவும் விளங்க வேண்டும் என்பதும் 19 ஆவது திருத்தத்தின் முக்கிய விடயங்கள். ஆனால் 19 ஆவது திருத்தத்தின் மூலப்பிரதியில் செய்யப்பட்ட மாற்றங்களின் படி ஜனாதிபதி அரசாங்கத்தின் தலைவராக பதவி வகிக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது. ஆக இரண்டு தடவைக்கு மேல் ஒருவர் ஜனாதிபதியாக பதவி வகிக்கலாம் என 18 ஆவது திருத்தத்தில் கூறப்பட்டுள்ள விதப்புரை மாத்திரம் 19 ஆவது திருத்தத்தில் நீக்கப்பட்டுள்ளது.

ஆகவே வர்த்தமானியில் செய்யப்பட்ட இந்த மாற்றத்தின் பிரகாரம் ஜனாதிபதி தொடர்ந்தும் அரசாங்கத்தின் தலைவராக இருந்தால் நாடாளுமன்றத்தில் பிரதமர் மற்றும் அமைச்சரவையின் பொறுப்புகள் யார் வசம் என்ற கேள்வி எழுவது இயல்பானது. நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியின் தலையீடு இருக்கக் கூடாது என்ற பிரதான நோக்கம் 19 ஆவது திருத்தத்தில் இல்லை. இதனால் இந்த சட்டமூலம் எதற்காக யாருக்காக கொண்டுவரப் படுகின்றது என்ற கேள்விகளும் எழுகின்றன. இந்த விடயம் தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்களும் ஏன் அமைதியாக இருக்கின்றனர் என்ற சந்தேகங்களும் எழுகின்றன.

**சுயாதீன ஆணைக்குழுவின் நிலை**

அதேவேளை சுயாதீன ஆணைக்குழுக்களின் நிலை தொடர்பான சந்தேகங்களுக்கும் 19 ஆவது திருத்தத்தில் உரிய பதில் வழங்கப்பட்டுள்ளதாக தெரியவில்லை. 17 ஆவது திருத்தத்தில் 10 பேர் கொண்ட அரசியலமைப்புச் சபை உருவாக்கப்பட்டு அரச திணைக்களங்களை சுயாதீனமாக செயற்படவைப்பதற்கான ஆணைக் குழுக் களை நியமிப்பது என கூறப்பட்டிருந்தது.

தொடர்ச்சி 22 ம் பக்கம்


உலகை வலம்வர
உற்றதுணை நாங்கள்!
Tel: 0231 5896557,
Tel: 0231 5574319
Fax: 0231 5844665
Rhenische Strasse 29
44137 Dortmund.Germany
இந்தியாவுக்கான
விசா பெற்றுத்
தரப்படும்

Century Travels & Tours
email : info@centurytravels.de
Last Minute Tickets:
குறைந்த விலையில்
பயணச்சீட்டுக்கள்
நேரடியாகத்
தொடர்பு கொள்ளுங்கள்!
நேரடித்தொடர்பு:
0231 985 333 27
Number: 017621682149
website : www.centurytravels.de
Mayuran 01772330010
Ram Nishanthan
Dip.T.T.Mgt-IATA/UFTAA Montreal
017621682149


எங்கள் இனிய தமிழ்புத்தாண்டு வாழ்த்துக்கள்

# விவாகரத்தை தடுப்பதற்கான சில எளிய வழிகள்!!!



குடும்பத்தில் அன்பும் பாசமும் இருப்பதை போல, சண்டையும் சச்சரவும் இருக்கவே செய்யும். தம்பதிகளுக்கு இடையே சின்ன சின்ன சண்டைகள் வளர்ந்து புயலாக மாறும் போது, அந்த திருமண பந்தமே முறியும் அளவிற்கு போய் நிற்கக்கூடும். அதுவும் இன்றைய காலக்கட்டத்தில் விவாகரத்து என்பது அதிகமாகிக் கொண்டே போகிறது. அதனால் ஏற்படும் மன வலியையும் தடுக்க ஏராளமான வழிகள் உள்ளன.

திருமண வாழ்க்கையில் சில பிரச்சனைகளை சந்தித்தாலும், அவை உடையாமல் தீர்வு காண வேண்டும். எந்த ஒரு தம்பதியினரானாலும் சரி, ஒரு கட்டத்தில் கருத்து வேறுபாடு ஏற்படுவது வழக்கமான ஒன்று தான். அந்த கருத்து வேறுபாட்டை எப்படி சரி செய்வது என்பதை பார்க்க வேண்டுமே தவிர, விவாகரத்தைப் பற்றி யோசிக்கக் கூடாது. எந்த தம்பதிகள் தங்கள் உறவை பாதுகாக்க சோர்வு இல்லாமல் பாடுபடுகிறார்களோ, அவர்களின் உறவே நிலைத்து நிற்கும். இப்போது திருமண வாழ்க்கையில் நடக்கும் பிரச்சனைகளை சரிசெய்து, விவாகரத்தை தடுக்கும் சில வழிகளைப் பார்க்கலாம்.


கருத்து வேறுபாடு தம்பதிகள் தங்களுக்குள் இருக்கும் கருத்து வேறுபாட்டிற்கான காரணத்தை அல்லது இருவருக்கும் அடிக்கடி சண்டை நடக்கும் காரணத்தை கண்டறிவது மிகவும் முக்கியம். பிரச்சனை எவ்வளவு சிறிதாக இருந்தாலும் சரி, நம் கையை மீறி புயலாக வளரும் முன், பேசி முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும். குறிப்பாக, திருமண வாழ்க்கையில் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை கண்டிப்பாக வேண்டும்.

நேரம் திருமணம் நடந்து 40-50 ஆண்டுகள் கழிந்தும், ஒற்றுமையுடன் வாழும் தம்பதிகளை காண்கிறோம். அப்படிபட்ட தம்பதிகள் ஒற்றுமையுடன் வாழும் இரகசியம் என்னவென்று தெரியுமா? திருமண வாழ்க்கையில் இருவரும் ஒன்றாக போதிய அளவு நேரத்தை செலவிட்டதே அகும். அதனால் தேவையான அளவு நேரத்தை திருமண வாழ்க்கையில் முதலீடு செய்தால், திருமண வாழ்க்கையில் சந்தோஷம் (லாபம்) செழித்து இருக்கும்.

தேவையற்ற பழக்கம் மனைவியை விட்டு அதிக நேரம் பிரிந்து இருக்கிறீர்களா? அதிக நேரம் நண்பர்கள் மேல் கவனம் இருப்பதால், மனைவியை கவனிப்பதில்லையா? இவை எல்லாம் தேவையற்ற பழக்கத்தின் சில உதாரணங்கள். இது உங்கள் உறவில் தெரிந்தோ தெரியாமலோ விரிசலை உண்டாக்கும். எனவே இவ்வகை பழக்கங்களை கண்டறிந்து உடனே தவிர்க்க வேண்டும். இல்லையெனில் திருமணம் பந்தம் உடைந்துவிடும்.

காதல் வாழ்க்கை திருமண வாழ்க்கை சரியான பாதையில் பயணிக்க காதல் மிகவும் அவசியம். திருமணத்திற்கு முன், உங்கள் மனைவியை காதலித்த போது, உங்களிடம் அவர் ரசித்த விஷயங்களை நினைவு கூர்ந்து, அதை போல் மீண்டும் காதலித்து அன்பை வெளிக்காட்டலாம். இது இருவரின் திருமண மன உளைச்சலை நீக்கி, சந்தோஷத்தை உண்டாக்கும்.

குறைகள் யாருமே முழு நிறைவான மனிதராக இருக்க வாய்ப்பில்லை. அதனை புரிந்து கொள்வது மிகவும் முக்கியம். எனவே மனைவியை குறை கூறுவதை நிறுத்தி விட்டு, உங்களிடமும் சில தவறுகள் இருக்கிறது என்பதை புரிந்து கொள்ளுங்கள். அவ்வாறு புரிந்து உங்களிடம் இருக்கும் குறைகளை திருத்துவதற்கு முயற்சி செய்தால், மனைவியும் திருந்திவிடுவார்கள்
மன்னிக்கும் பண்பு மனைவி அல்லது கணவன் செய்யும் தவறை முழு மனதுடன் மன்னிக்கும் பக்குவம் இருக்க வேண்டும். இத்தகைய மன்னிக்கும் பண்புடன் திருமண வாழ்க்கையை நடத்தினால், வாழ்வில் எப்போதும் மகிழ்ச்சி பொங்கும்.



ஸ்ரீ மலையாளம் பகவதி ஜோதிட நிலையம்

100% Satisfaction Guarantee

Specialised in Astro Palmist (Tamil)

காளியம்பாள் வசீகரணம் சக்தி ஜோதிடர் இந்தியாவில் புகழ்பெற்ற ஜோதிடர்
ஜாதகக்குறிப்பு வாஸ்து சாத்திரத்தில் சிறந்த நிபுனர்

P.K.குருசாமி

ஜாதகம் கைரேகைபார்த்து பலன் சொல்வார். கணவன் மனைவி பிரச்சினை-பிரிவு-பிள்ளைகள் பிரச்சினைகள்.காதலர் பிரிவு. திருமணத்தடைகள் வேலை, தொழில் இவற்றில் உள்ள பிரச்சினைகள் தீர்த்துவைப்பார். செய்வினை பில்லி சூனியத்தால் பாதிப்பு உள்ளவர்களுக்கு அவை நீக்கப்படும்.தமிழ் மொழியில் சொல்லப்படும் கேரளா மாந்தீர்கள். குறிப்பு: 48 நாட்கள் மண்டலா அபிசேகம் செய்து, உருவப்படம் தாமரைத்தகடு வழங்கப்படும்.இவற்றைப் பெற்றவர்கள் நல்ல பயன் அடைகின்றார்கள். வீட்டுக்கும் வியாபார பெருக்கத்திற்கும் இத்தகடு உதவும்.

Wilhelm Str.27
59067 Hamm

Tel:
0049 152 1675 8175
0049 152 1025 7807

Dortmund நகரில்.
வெற்றிமணி விழா.
22.08.2015

Sommer Holidays 2015





கோடைக்கால விடுமுறை 2015 முந்துங்கள் குறைந்தவிலையில்
விமானப் பயணச் சீட்டுகள்களைப் பெறுங்கள்

மேலதிக விபரங்களை எமது
இணையத்தளத்தில் கண்டுகொள்ளலாம்.
இன்றைய நாளில் விலைகளையும்
உடனுக்குடன் எமது இணையத்தளத்தில் காணலாம்.

www lucky-fly.de

Tel: 0234 239 90 32 Handy:0179 14 84 892

Lucky Fly Allee Str.38-40 a 44793 Bochum



Wilhelm Str.09
33602 Bielefeld

Lakshmi Jewellery &Silks




பசுமையான மரக்கறிவகைகளும் கடலுணவுப்பொருட்களும்
இவற்றுடன் பலசரக்குப் பொருட்களையும் எம்மிடம்
மலிவாகப்பெற்று பயன் பெறுங்கள்

Asia super markt



தமிழ் புதுவருடத்தை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை!
15.03.2015 முதல் 15.04.2015 வரை
அனைத்து ஆடைகளும்
சிறப்புக் கழிவு விலையில்....

Tel:0521 4283 510
தொலைபேசி: Ruban 0179 72 35 729






# லண்டன் பிக்பென் மணிக்கூட்டுக்கோபுரம்

## இரண்டாம் உலக யுத்தத்தின்போது கோபுரத்தைத் தகர்க்க யேர்மனி பலதடவைகள் முயன்றும் அதுபலிக்கவில்லை!

குரு.அரவிந்தன்

பிரித்தானியாவில் உள்ள லண்டன் நகரம் என்றால் எல்லோருக்கும் ஞாபகம் வருவது பிரபலமான லண்டன் பாலமும், பிக்பென் மணிக்கூட்டுக்கே காபுரமும்தான். லண்டன் தலை நகரில் 315 அடி உயரமான சென். ஸ் ரீபன்ஸ் கோபுரத்தில் உள்ள இந்த பிக்பென் மணிக்கூட்டுக் கோபுரம் வெஸ்ட்மினிஸ்டர் மாளிகையின் வடக்குப் பக்கத்தில் அமைந்திருக்கின்றது.

இதன் காரணமாக இந்தக் கோபுரம் தொடக்கத்தில் 'த கிரேட் வெஸ்ட்மினிஸ்ரர் மணிக்கூட்டுக் கோபுரம்' என்றுஅழைக்கப்பட்டது. இரண்டாம் எலிசபெத் இராணியாக முடிசூட்டப்பட்டதன் அறுபதாவது ஆண்டு வைரவிழா ஞாபகார்த்தமாக பிரிட்டன் முழுவதும் கொண்டாடப்பட்டபோது மகாராணிக்கு கௌரவம் கொடுக்கும்வகையில் லண்டன் நகரில் உள்ளபாராளுமன்ற கட்டடத்தில் இருக்கும் உலகப்புகழ் பெற்ற பிக்பென் கோபுரம், 'எலிசபெத்கோபுரம்' என்று பெயர் மாற்றம்செய்யப்பட்டது.

நாலுபக்கமும் மணிக்கூடு கொண்ட கோபுரங்களில் உலகிலேயே இது இரண்டாவது பெரிய கோபுரமாக இருக்கின்றது.

மினிஸோட்டாவில் மினியாப்போல்ஸ்நகரமண்டப மணிக்கூட்டுக் கோபுரம் முதலிடத்தைப் பெறுகின்றது. இந்த பிக்பென்கோபுரம் 1858ஆம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டது. இந்தக் கோபுரத்தின்150வது ஆண்டு நிறைவு தினம் 31-05-2009ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது. 1834ஆம் ஆண்டு ஒக்ரோபர் 16ஆம் திகதிவெஸ்ட்மினிஸ்டர் மாளிகையின் பெரும் பகுதிதீ விபத்தில் எரிந்து போனதால் திரும்பவும் அந்த மாளிகையைப் புதுப்பித்துக்கட்ட வேண்டியிருந்தது. புதிதாகக் கட்டப்பட்ட மாளிகையில் மணிக்கூட்டுக்கோபுரம் ஒன்றும் இணைக்கப்பட்டது.

பிக்பென் என்ற பெயர் உண்மையிலேயே அந்தக் கோபுரத்தில் இருக்கும்பெரிய மணியின் பெயராகும். அதனால்தான் இந்தக் கோபுரத்திற்கு இந்தப்பெயர் வந்தது. 1858ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கிழக்கு லண்டனில் உள்ளவைற்சப்பல் பெல் நிறுவனத்தில் இந்த மணி தயாரிக்கப்பட்டுக் குதிரைவண்டிலில் கொண்டு வந்து இங்கே பொருத்தப்பட்டது. 1856இல் இது போன்றமணி ஒன்று செய்யப்பட்டாலும் அது விரைவாக உடைந்து போனதால் திரும்பவும் புதிதாகச் செய்யப்பட்டது.

தகரமும், செம்பும் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்த மணி சுமார் 14 தொன் நிறையுள்ளது. அது 7அடி 6அங்குல உயரமும் 9 அடி குறுக்களவும் கொண்டது. இந்த மணிக்கூட்டின்சிறிய முள் 2.7 மீட்டர் நீளமும், 300 கிலோ கிராம் பாரமும் கொண்டது.

நீண்ட முள் 4.2 மீட்டர் நீளமும், 100 கிலோ கிராம் பாரமும் கொண்டது.இதில் பதிக்கப்பட்ட இலக்கங்கள்ஒவ்வொன்றும் இரண்டடி உயரம்கொண்டவை. மணியில் முட்டி மோதிமணியோசையை எழுப்பும் சுத்தியல்போன்ற கருவி சுமார் 200 கிலோகிராம்நிறை கொண்டது. ஒவ்வொரு பக்கமும்உள்ள மணிக்கூடு சுமார் 23 அடிகுறுக்களவு கொண்டதாக இருக்கின்றது.

இந்த மணிக்கூட்டுக் கோபுரம் 334படிகளைக் கொண்டது. 1976ஆம்ஆண்டு மணிக்கூட்டின் இயக்கத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக எட்டு மாதங்கள்வரை நிறுத்தி வைக்கப்பட்டது.1916ஆம் ஆண்டு முதலாம் உலகயுத்தத்தின் போது இந்தக் கோபுரத்தின்பாதுகாப்பிற்காகச் சில மாதங்கள்மணியோசை நிறுத்தப்பட்டு வெளிச்சமும்அணைக்கப்பட்டிருந்தது.

1941ஆம்ஆண்டு இரண்டாம் உலக யுத்தத்தின்போதும் இந்த மணிக்கூட்டுக்கோபுரத்தைத் தகர்க்க ஜெர்மனி பலதடவைகள் முயன்று பார்த்தும் அதுபலிக்கவில்லை. இதன் காரணமாக பிபிசிவானொலி மூலம் இந்தக் கோபுரத்தில் இருந்து வெளிவரும் பிக்பென்னின் மணியோசை உலகெல்லாம் நேரடியாக ஒலிபரப்பப்பட்டது. பிரித்தானியா போரில் வெல்லப்படவில்லை என்ற செய்தியை மறைமுகமாக அறிவிப்பதாக மக்கள் இதன் மூலம் நம்பினார்கள். 1990ல் காலநிலை மாற்றங்கள், இயந்திரக்கோளாறுகள், பறவைகளின் தொந்தரவு போன்ற தவிர்க்க முடியாத சிலகாரணங்களால் ஏற்பட்டதிருத்த வேலைகள் காரணமாக இந்த மணிக்கூட்டை அவ்வப்போது நிறுத்தி வைக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதாம். தினமும் இந்தக் கோபுரத்தில் இருந்து காற்றோடு கலந்து வரும் பிக்பென்னின் மணியோசையைக் கேட்டுப் பழக்கப்பட்டுப்போன பழமை விரும்பிகளான சில லண்டன் நகரவாசிகள் ஏதாவது காரணத்தால் அவர்களது தினசரி வாழ்க்கையோடு ஒன்றிப்போன மணியோசை கேட்கவில்லை என்றால் மிகவும் பதற்றமடைந்து விடுகிறார்களாம். நன்றி : தமிழர்தகவல்: கனடா

## நன்றி நவில்கின்றோம்



யேர்மனியில் 23.03.2015 நடைபெற்ற
எங்கள் திருமணவைபவத்திலும்
விருந்துபசாரத்திலும் கலந்து
சிறப்பித்து எம்மை வாழ்த்திய
அன்பு உள்ளங்களுக்கு
எங்கள் இதயம் கனிந்த நன்றிகள்

அன்புடன்
**சஞ்ஜயன் – கன்னிகா**
**தம்பதிகள்**

மணமகன் பெற்றோர்: திரு.திருமதி இ.பகீரதன் சந்திரவதனி
USA (தாயகம்: உடையார்வளவு உரும்பிராய் இலங்கை)
மணமகள் பெற்றோர்: திரு.திருமதி ச.ஜெகதீஸ்வரன்
உரிமையாளர்: O.T.S Dortmund Germany



# இயற்கை வரையும் ஓவியங்களும்

2ம் பக்கத் தொடர்ச்சி....

தினமும் பிள்ளைகளுடன் எம்மைப்போல் நச்சரிக்காமல், கைகளில் காம்பிச்சத்தகத்தைவைத்து அழகிய பெட்டிகளை பனைக்குருத்து ஓலையில் பின்னிக்கொண்டு இருப்பர். தாத்தா பாய்பின்னுவர். அந்தப்பாயில் எத்தனை பெட்டிகளுக்கு ஒருக்கால் வர்ணம்தீட்டிய ஓலை வரவேண்டும் என்று கணக்குப்பார்த்து கலைசமைப்பார். கலை மனிதனை இயற்கையுடன் ஒன்றிப்போகவைக்கிறது. அதனால் அன்று வயதானவர்கள் பிள்ளைகளுடன் உறவைக் கலையாது காத்தனர். அதற்கு கலையே பெரிதும் கைகொடுத்தது.



**வலைக்குள் சிக்கிய இலையின் கலை அழகு**

கடற்கரையில் கடல் அரிப்புக்குள்ளாகிய எத்தனையோ கற்கள் பல பல வடிவங்களில் இருக்கும். அதில் செம்மறி ஆட்டுக்குட்டியும் இருக்கும். கயல்மீன்களும் துடிக்கும். அதனை இனம் கண்டு ஓர் அழகிய பீடத்தில் பொருத்திவிட்டால் கலைக்கு விலை இல்லை என்பது தெரியும்.

கற்பாறைக்குள் மனிதன், மீன்வலைக்குள் கலைகள், ஏன் மாடு சூப்பிப்போட்டு விட்ட பனம்பழத்திலும் அழகு! பனைமரத்தில் இருந்து விழுந்துசிதறியும் சிரிக்கும் பனம்பழத்திலும் அழகு! இப்படி எத்தனை எத்தனை ஓவியங்கள் இயல்பாக நயமாகக் கிடக்கின்றன. நல்ல பகுதியை மட்டும் வெட்டி எடுத்து மாட்டும் இடத்தில் மாட்டினால் (அந்தக்கலை புரிந்தால்) நீங்களும் பிக்காசோதான்.

தனிமையைப் போக்கவல்லது கலை.ஏன் வாக நெரிச்சல் என்று 2 மணிநேரம் வாகனத்தை பெரும்தெருவில் நிற்பாட்டிவிட்டு, நிற்கும் பலர், தலையைப்பிச்சுக்கொண்டு அங்கும் இங்கும் நடப்பதை அவதானித்திருப்பீர்கள். சிலர் மட்டும் பின் டிக்கியைத்திறந்துவிட்டு அதில் அழகாக அமர்ந்து எதனையோ வாசித்துக்கொண்டோ அல்லது அந்த இடத்தின் அழகினை இரசித்துக்கொண்டோ நிற்பதைக்காணலாம். அதில் தமக்குகிடைத்த அருமையான நேரம் இது என்று தம்பிள்ளைகளுடன் கைகோர்த்து நடந்து மகிழ்வதையும் காணலாம். எமக்கு இயற்கையே இறைவன். உற்று நோக்கினால் அற்புதமான அற்புதன் லீலைகள் புரியும்.

நீங்கள் இயற்கையை இரசிக்கத் தொடங்கிவிட்டால் உங்கள் இதயத்தில் நோய் தீண்டாது. இதய நோய் உள்ளவர்கள் பலருக்கு பரிசோதனைக்காக 24 மணித்தியாலமும் இதயத்தின் செயற்பாட்டினை அளவிடும் இயந்திரம் பூட்டிவிடுவார்கள். பின்னர் அதனை வாசித்து எந்த எந்த நேரத்தில் இதயத்தின் செயற்பாடு சீராகவும் சீரற்றும் இருந்தது என டாக்டர்கள் பார்ப்பார்கள்.

பெரும்பாலானவர்களுக்கு வெளியில் இயற்கையை இரசித்து நின்றவேளையிலும் குழந்தைகளுடன் மனம்விட்டு மகிழ்ந்த நேரத்திலும். பூமாலை கட்டும் வேளையிலும், இந்த இதயம் எவ்வளவு சீராக இருந்தது என்பது புரிகின்றது. மனம் லயித்து நிற்கும் போதும் மனம் கலைகளுடன் கலக்கும்போதும் உள்ளம் அழகுபெறுகின்றது. ஒரு கலைஞனால் அல்லது கலையுணர்வு உள்ளவர்களால் மட்டுமே உடம்பின் உட்சுவரை இலகுவாக தூய்மைப்படுத்த முடியும். அதாவது மனதுக்கு வெள்ளையடிக்கும் கலை தெரியும்.



**கிட்டப் பார்த்தால் கிழுவை மொக்கு.**
**எட்டி நின்று பார்த்தால் சொட்டும் கலையழகு!**

இங்கு இயற்கையில் கண்ட சில அற்புத ஓவியங்களை உங்கள் பார்வைக்குத் தருகின்றேன். இவை நான் இரசித்து எடுத்த இயற்கை ஓவியங்கள். நீங்களும் ஓவியராகலாம். இயற்கையை இரசிக்கக் கற்றுக்கொண்டால்.

முக்கியகுறிப்பு: படங்கள் எவையும் கூகுளில் கொள்ளையடிக் கவில்லை.தாயகமண்ணில் கிழக்கிலும் வடக்கிலும் என்னைக்கொள்ளை கொண்டவை: படங்கள் நானே எடுத்தவை. நன்றி: தமிழர்தகவல் 2015 ஆண்டுமலர்.



எங்கள் இனிய தமிழ்புத்தாண்டு வாழ்த்துக்கள்

# தமிழர் மரபுத் திங்கள் - சித்திரை

**முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்**



சித்திரைத் திங்கள் தமிழர் வாழ்வியலில் ஒரு மகிழ்வான காலமாகும். இளவெயில் காலம். சித்திரையில் ஒரு சிறு மாரியும் பெய்யும். காற்றோடு கூடிய இச்சிறு மாரிக் காலத்தைக் கிராமப் புறங்களிலே 'சித்திரைக் குழப்பம்' என்றும் குறிப்பிடுவர். பழந்தமிழர் கொடுமையான வெப்பகாலத்தை வேனிற்காலமென வழங்கினர். இப்போது 'வேனில்' என்ற சொல் வழக்கிழந்து வருகிறது. அதற்குப் பதிலாகக் 'கோடை' என்றசொல்லே பெருவழக்கு ஆகிவிட்டது. எனினும் சித்திரைத் திங்கள் தமிழர் வாழ்வியலில் ஏற்பட்ட பண்பாட்டு மாற்றங்களைச் சுட்டும் நடைமுறைகளைக் கொண்ட சிறப்புத் திங்களாகவும் விளங்குகிறது.

சித்திரைத் திங்களை ஓராண்டின் தொடக்கத் திங்களாகக் கொண்ட ஒரு காலக் கணக்கும் தமிழரது பண்பாட்டில் பிற்காலத்தில் இணைந்துள்ளது. ஆனால் பழந்தமிழ் இலக்கியங்களில் அதற்கான சான்றுகளைக் காணமுடியவில்லை. பஞ்சாங்கம் என்னும் கணிப்பீட்டு நூலின் பயன்பாடு சித்திரைத் திங்கள் முதல்நாளைப் புத்தாண்டின் தொடக்க நாளாக அறிமுகம் செய்துள்ளது. இக் கணக்குப் பங்குனித் திங்களை ஆண்டின் நிறைவுத் திங்களாக ஆக்கியுள்ளது. சித்திரைப் புத்தாண் டிலே அதிகாலையில் மருத்துநீர் வைத்து நீராடும் நடைமுறை கைக்கொள்ளப்படுகிறது. புத்தாண்டுப் பிறப்பில் புனித நீராடல் செய்யும் மரபு பேணப்படுகிறது.

இத்திங்களில் இயற்கையின் தோற்றம் மிகவும் எழிலாக இருக்கும். வானம் சித்திரம் போல வண்ணம் பூசி நிற்கும். மரஞ்செடி கொடிகளெல்லாம் செழித்துப் பூத்துக் குலுங்கும். முக்கனி வளம் நிறைந்திருக்கும். தானிய விளைபொருட்கள் வீடுவந்து சேரும். அதனால் கோவில்களிலே பொங்கல், மடைபரவல், நேர்த்திகள் சிறப்பாக நடைபெறும். 'சித்திரைக் கஞ்சி வார்த்தல்' நடைமுறை சிறப்பாக இடம்பெறும். அன்றையதினம் சித்திரகுப்தன் கதை படிக்கப்படும். இத்திங்களில் வரும் நிறைமதிநாள் சிறப்பாக இறந்த தாய்மாரை நினைவுகூர்ந்து விரதமிருந்து அன்னக்கொடை வழங்கும் நடைமுறையாக இன்று வரையும் தொடர்கிறது. 'சித்திரா பூரணை விரதம்' எனச்சிறப்பான பெயரும் வழங்கப்படுகிறது. பண்டைய காலத்து நடைமுறையான இயற்கையை வழிபடும் நடைமுறையும் சித்திரைத் திங்களில் இன்னமும் ஈழத்திலே பின்பற்றப்படுகிறது. முற்றத்திலே பொங்கல் செய்து சூரியனுக்குப் படையலிட்டு வழிபடுவர். 'தைப்பொங்கல்' போல 'சித்திரைப்பொங்கல்' என்னும் சிறப்புப் பெயரும் இன்னமும் வழக்கிலுண்டு.

சித்திரம் என்ற சொல்லுக்கு அழகிய தோற்றப்பாடு என்ற பொருளும் உண்டு. சித்திரைத் திங்களில் பல்வேறு மலர்கள் மலர்ந்திருப்பதால் எங்கும் எழிலான தோற்றம் நிறைந்திருக்கும். இக் காலத்தில் பல இடங்களில் மலர்க் கண்காட்சிகள் நடைபெறும். பண்டைய இலக்கியங்களில் வேனில் காலத்தில் மலர்ப் பொழில்களிலே மக்கள் பொழுது போக்கியதாகக் குறிப்புகளுண்டு. இள வேனில் காலம் பற்றிய அகப்பாடல்களில் இது பற்றிய விரவான தகவல்கள் உள. ஜப்பானியக் காதல் பாடல்களிலும் வேனிற் காலத்தைப் பற்றிய பல பாடல்கள் உள்ளன. இருமொழிப் பாடல்களி லும் காதலரது உணர்வுகள் வேனிற் காலத் தோற்றத்தோடு இணைத்துப் பாடப்பட்டிருப்பது ஓர் அக வாழ்வியல் மரபின் ஒற்றுமையான பண்பாட்டை தெளிவாய் விளக்கிக் காட்டுகிறது. எடுத்துக்காட்டாக இருமொழிப் பாடல்களையும் காணலாம்.

ஐங்குறுநூறு என்னும் தமிழ் அகப்பாடல் தொகுப்பில் பின்வரும் பாடல் வேனிற்காலத்தில் காதலனைப் பிரிந்திருக்கும் காதலியின் உணர்வுநிலையை வருமாறு சொற்சித்திரமாக்கியுள்ளது.

“அவரோ வாரார் தான்வந் தன்றே
குயிற்பெடை இன்குரல் அகவ
அயிர்க்கேழ் நுண்ணறல் நுடங்கும் பொழுதே” (பாடல்: 341)

என்னுடைய காதலன் இன்னமும் வரவில்லை. ஆனால் அவன் தான் வந்துவிடுவேன் என்று குறிப்பிட்டுச் சொன்ன காலம் வந்துவிட்டது. அதை இனிய குரல்கொடுக்கும் குயிலின் குரல் உணர்த்துகிறது. வேனிற்காலம் வருவதைப் பறவைகளின் ஒலியால் அறியும் பண்டைக்காலமது. அவள் காலம் வந்துவிட்டதை அறிகிறாள். இருள் சூழும் மாலைப் பொழுது அவளுக்கு நாளின் கடப்பை உணர்த்துகிறது. குயிலின் பருவகாலக் குரல் அவளுக்குக் காலத்தின் கடப்பைக் காட்டுகிறது. காதலன் பிரிவால் மேலும் துன்பம் தொடர்கிறது. இப்புலமை மரபை மன்யோசு என்னும் பண்டைய ஜப்பானிய மொழி இலக்கியப் பாடல் ஒன்றும் சொற்சித்திரமாகப் புனைந்துள்ளது. அப்பாடல் வருமாறு.

“தாழ்ந்தே வீழு
வேனிலுமே வந்ததால்
மூங்கிலின் முன்னே
சிறகை அடித்திட்டே
உகுவிசு நரலும். (மன்யோசு: 1830)

வேனிற்காலம் வந்ததை தாழ்ந்து வீழ்கின்ற தளிர்கள் உணர்த்திநிற்கின்றன. மேலும் மூங்கில் தோப்பில் சிறகை அடித்துக்கொண்டு 'உகுவிசு' என்னும் பறவை இனிய ஒலியை எழுப்பியவாறு பறந்து சென்றுகொண்டிருக்கிறது. இப்பாடலிலும் வேனிற்காலம் வந்துவிட்டதைப் பறவையின் குரலால் காதலி அறிகிறாள். ஆனால் அவள் காதலனோ இன்னமும் வரவில்லை. அதனால் அவள் பிரிவுத் துன்பமும் தொடர்கிறது.

இருமொழிப் பாடல்களிலும் காலம் வேனிற் காலந்தான். பறவைகள்தான் வேறுபட்டவை. எனினும் புலமை மரபு ஒன்றே. வேனில் காலம் காதலர் இணைந்திருக்கும் காலம் என்பதையும் இரு மொழிப் பாடல்களும் விளக்கியுள்ளன.

சித்திரைத் திங்கள் கலைகள்அரங்கேறும் காலமாகவும் தமிழரிடையே செயற்படுகிறது. இசை தொடர்பான நடனம், கூத்து போன்ற நிகழ்வுகள் மேடையேற்றப்படும். விளைபொருள் வீடு வந்து சேர்ந்தமையால் மக்களுக்கு ஓய்வும் கிடைத்தது. அதனால் விளையாட்டுகள் கலைநிகழ்ச்சிகளிலே பங்குகொள்ள முடிந்தது. கிராமப் புறங்களிலே சித்திரைத் திங்கள் முதல்நாள் இரவு விடியும் வரை கூத்தாடும் வழக்கம் இன்னமும் நடைமுறையிலுள்ளது. இன்னும் கும்மி, கோலாட்டம், குரவை போன்ற கலை நிகழ்வுகளும் நடைபெறும். 'போர்த்தேங்காய் அடித்தல்' என்னும் விளையாட்டு பந்தயம் கட்டி நடைபெறும். தெங்கின் விளைபொருள் வளம் பேணும் நடைமுறையாக இன்றும் நிலவுகிறது. மேலைத்தேய விளையாட்டான துடுப்பாட்டம் தமிழரிடையே வந்து சேருவதற்கு முன்னர் இத்தகைய விளையாட்டே பெருவழக்காயிருந்தது. இதேபோல சித்திரைத் திங்கள் முதல் நாளன்று 'சேவற் சண்டை' என்னும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. வலிய சேவல்களை வளர்த்து சண்டையிடப் பழக்குவர். பின்னர் அதை இன்னொரு சேவலொடு சண்டைபோட வைப்பர். இரு தரப்பினரும் பணம் கட்டிப் பந்தயம் வைப்பர்.அவர்களின் வெற்றியைச் சேவலே தீர்மானிக்கும். மேலைத் தேசத்தவர் வருகையால் குதிரைப் பந்தயம் அறிமுகமானது. ஆனால் மரபான சேவற்பந்தயம் சித்திரைத் திங்கள் முதல் நாளில் இன்னமும் தொடர்கிறது.

தொடர்ச்சி 8 ம் பக்கம்...

**Nandy's Catering & Partyservice**
உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும் சுடச்சுட சுவைகுன்றாது
உங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய, ஐரோப்பிய உணவுவகைகளை
தயாரித்து நாம் வழங்குகின்றோம்!
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை!
உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டப நடுப்பகுதிச் சோடனைகள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளனர்.
NANDY'S CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf
Mobil 0173-7424955
Tel:0211 76 91 974
www.Nandys.de
e.mail:info@nandys.de

# அம்மாவும் மகளும், ஒரே மேடையில் அரங்கேற்றம்.



தர்ஷனா நாட்டியப்பள்ளி வழங்கிய ”தீ அண்ட் தை” நாட்டிய அரங்கேற்ற நிகழ்ச்சி சென்னையில் மார்ச் 14ம் தியதி, டி.என்.ராஜரத்தினம் பிள்ளை அரங்கில் வைத்து நடைபெற்றது.

இந்த விழாவின் சிறப்பு என்னவென்றால் ஸ்டெல்லா கிறிஸ்டி பாய் எனும் நாட்டிய மாணவியும், அவரது மகள் ரெய்னா ஷானன் எனும் நாட்டிய மாணவியும் ஒரே மேடையில் அரங்கேறியது தான். கணினி மென்பொருள் நிறுவனம் ஒன்றில் மேலதிகாரியாகப் பணிபுரியும் ஸ்டெல்லா கிறிஸ்டி பாய் முப்பத்து ஏழு வயதான பெண்மணி. அவரது மகள் ரெய்னா ஷானன், பத்து வயது நிரம்பிய, ஐந்தாவது வகுப்பு படிக்கும் சிறுமி. ஆனாலும் வயது வித்தியாசம் தெரியாத வகையில் இருவரும் போட்டி போட்டுக்கொண்டு சகோதரிகள் போல நடனத்தை வெளிப்படுத்தியது பார்வையாளர்களைப் பெருமளவு கவர்ந்தது.

தந்தை.வின்செண்ட் சின்னதுரை, பத்திரிகையாளர் சர்ச்சில் பாண்டியன், கலை இலக்கிய விமர்சகர் இந்திரன் மற்றும் ஆச்சார்ய சூடாமணி ராதிகா சுரஜித் ஆகியோர் தலைமை வகித்தனர். நடனத்தின் நேர்த்தியில் அவர்கள் பாராட்டு மழை பொழிந்தனர்.

வழக்கமான பரதநாட்டிய அரங்கேற்ற அடிப்படையில் இல்லாமல் இது முழுக்க முழுக்க கிறிஸ்தவ நம்பிக்கையின் அடிப்படையில் அமைக்கப்பட்டிருந்தது. உலகின் படைப்பு, தாவீது மன்னனின் வாழ்க்கை, இயேசுவின் பிறப்பு, மரணம், உயிர்ப்பு எனும் நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு அதன் மையம் அமைக்கப்பட்டிருந்தது. வர்ணம் பகுதியின் பாடல்களை “சேவியர்“ அவர்கள் எழுதியிருந்தார். வேணுகோபால் அவர்கள் பாட, கண்ணன் வயலின் இசைக்க, ரமேஷ் அவர்கள் புல்லாங்குழல் இசைக்க, சேவியர் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்க அரங்கேற்றம் அரங்கையே அதிர வைத்தது.

இந்த அரங்கேற்ற நிகழ்ச்சியை முழுக்க முழுக்க வடிவமைத்து, நடனம் அமைத்து, பயிற்சி கொடுத்து பிரமிக்க வைத்தவர் மாஸ்டர். செல்வகுமார் அவர்கள். குமாரி. நடிகை ஷோபனா அவர்களின் மாணவரான அவர், உளவியலில் முதுகலைப் பட்டம் பெற்றவர் என்பதும், லண்டன் டி.பி.பி நிறுவன வீடியோக்களில் (அண்டங்கள் யாவும் பாடல்) நடனமாடியிருக்கிறார் என்பதும் சிறப்புச் செய்தியாகும்.

அம்மாவும், மகளும் போட்டி போட்டு நாட்டியமாடிய நடன நிகழ்ச்சி பார்வையாளர்களையும், சிறப்பு விருந்தினர்களையும் வியப்பில் ஆழ்த்தியது. புதுமையான நிகழ்ச்சியை அமைத்த ஸ்டெல்லா, ரெய்னா மற்றும் மாஸ்டர் செல்வகுமாரை வெற்றிமணி நெஞ்சார வாழ்த்துகிறது.

## கவிதையும், ஓவியமுமாய்



**இவர்கள் சகோதரிகளல்ல.**

**வெற்றிமணியின் நேசத்துக்குரிய எழுத்தாளர் சேவியரின் துணைவியும், மகளுமே!**

**இவர்கள். கவிதையும், ஓவியமுமாய் கலை விருந்து படைப்பவர்கள்**

**தாயும் மகளும் என்பது வியப்பூட்டுகிறது.**

**நாட்டியப் பாதங்களுக்கு வாழ்த்துகள்.**


## தமிழர் மரபுத் திங்கள் - சித்திரை

இன்று சித்திரைத் திங்கள் ஆங்கிலப்பண்பாட்டு நிலையில் ஒரு விசித்திரமான செயற்பாட்டை பெற்றுள்ளது. சித்திரைத் திங்கள் (ஆங்கில ஏப்ரில்) முதல்நாள் 'முட்டாள் தினம்' ஆக நினைவு கூரப்படுகிறது. அந்த நாளில் யாரையாவது முட்டாளாக்குவது மிகப் பெரியதொரு ஆற்றலாகக் கருதப்படுகிறது. அந்த ஆற்றலுக்குப் பல்வேறு ஊடகங்களும் இன்று துணையாகிவிட்டன. ஒருவனை முட்டாளாக்கி அநுபவிக்கும் சிறுமையான மகிழ்ச்சியை உலகமே அநுமதித்திருப்பதும் விந்தைதான். இளைய தலைமுறை இப்பண்பாட்டையே பின்பற்றுகிறது. சித்திரைத் திங்கள் வருகைக்கு முன்னதாக முட்டாளாக்கும் முயற்சிகளில் முனைப்பாக ஈடுபடுகிறது. மனிதனை மனிதனே முட்டாளாக்கும் மரபு மீளாய்வு செய்யப்படவேண்டியது.

அதற்குத் தமிழரின் முன்னைய பண்பட்ட மரபான வாழ்வியல் பற்றிய செய்திகளை அறியவேண்டும்.
மரபுநிலையில் நம் முன்னோர் கையளித்துச் சென்ற பண்பாட்டுநடைமுறைகள் இயற்கையால் உணர்த்தப்பட்ட பருவங்களின் தோற்றத்தையும் மாற்றத்தையும் நிறைவையும் அடித்தளமாகக் கொண்டவை. இயற்கையின் பருவத்திற்கேற்ற விளைபொருட்களின் வரவை முன்னிறுத்தி செயற் பாடுகள் திட்டமிடப்பட்டன. அவை மனித வாழ்வை மிக எளிமையான வாழ்வாக வாழத் துணைநின்றன. ஒரு சிறிய செய்தி. சித்திரைத் திங்களில் பனையின் கள் பருகலாம். அத
னை ஒரு பொது மகன் குரல் பின்வருமாறு பேச வைக்கிறது: “சித்திரைக் கள்ளு என்னைச் சிரித்துச் சிரித்துப் பேச வைக்குது”. இந்த மகிழ்வான இனிய குரலை தமிழர் மரபுத் திங்கள் சித்திரையில் மட்டுமே கேட்டு மகிழலாம்.



# தமிழாலயத் தந்தை இரா.நாகலிங்கம் - யேர்மனி






**சிவப்பிரியன்**

யேர்மனியில் தமிழ்க் கல்வி வளர நிலைபெற அயாராது உழைத்தவர், உழைப்பவர் திரு.இரா. நாகலிங்கம் அவர்கள்.

தாயகத்தில் வசாவிளானைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரது வாழ்க்கைத் துணைவி ஆயிலியம் நாகலிங்கம் அவர்கள் இணுவில் ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவ் ஆசிரியத் தம்பதிகளின் தமிழ்ப் பணிகள் தமிழ் மக்கள் மனதில் என்றும் நிலைத்திருக்கும்.

திரு.இரா.நகாலிங்கம் அவர்கள் தாயகத்தில் இறுதியாக உரும்பிராய் சைவத்தமிழ் பாடசாலையிலும் திருமதி ஆயிலியம் நாகலிங்கம் அவர்கள் இணுவில் அமெரிக்கன் மிசன் தமிழ்பாடசாலையிலும் ஆசிரியர்களாகப் பணியாற்றினர்.

1979 ஆண்டு தாயத்தில் இருந்து யேர்மனி வந்த திரு. இரா. நாகலிங்கம் அவர்கள் ஆரம்பத்தில் கல்புறோன் நகரிலும் பின் திருமதி நாகலிங்கம் அவர்கள் 1985 ஆண்டு காகன் நகர் வந்ததும் அன்றில் இருந்து காகன் நகரிலும் வாழ்ந்து வருகின்றனர். அங்கு வாழ்ந்தாலும் அவர்கள் தங்கள் தமிழ்ப்பணியினை யேர்மனி முழுவதும் பரவாலாக ஆற்றி வருகின்றனர்.

1990 இல் உலகத் தமிழ் இயக்கத்தின் கல்விப் பணிப் பொறுப்பாளராகத் தன் பணியினை ஆரம்பித்து குறுகிய காலத்துள் 30 தமிழாலயங்களை நிறுவி, இன்று 130 தமிழாலயமாக 7000 மாணவர்களையும், 650, ஆசிரியர்களையும் 130 நிர்வாகிகளையும் 350 நிர்வாக உதவியாளர்களையும் கொண்ட பெருவிருட்சமாக வளர்ந்து நிற்கின்றது. மாணவர்களும், ஆசிரியர்களும், பெற்றோரும்,தமிழ் மொழிமீது கொண்ட பற்றாலும் சேவை உள்ளத் தாலும், தமிழாலயம் என்னும் பெருவிருட்சத்தை உருவாக்க முடிந்தது. இன்று “தமிழாலயத்தந்தை” என்று இரா.நாகலிங்கம் அவர்களை நெஞ்சில் நிறுத்தி வாழ்த்துகின்றனர்.

ஒரு சேவையைத் தேவையறிந்து
ஒரு முறை செய்ய லாம். ஓர் ஆண்டு செய்யலாம். ஈராண்டு செய்யலாம்.

பதினெட்டு ஆண்டுகள் செய்வது கடினம், அதுவும் அன்று ஆரம்பித்தபோது இருந்த அதே மகிழ்வோடு உற்சாகத்தோடு இன்றும் பணியாற்றுவது என்பது தமிழர்களுக்கு ஓர் வியக்கத்தக்க நல் விருந்தாக அமைகின்றது.

இன்று இங்கு கல்வி பயின்றமாணவர்கள் பலர் தமிழாலயங்களில் ஆசிரியர்களாகப் பணியாற்றகின்றனர்.

யேர்மன் பாடசாலைகளில் யேர்மன் மொழிக்கு குறைவான புள்ளிகள் எடுக்கும் மாணவர்களுக்கு தமிழ்மொழியில் அதாவது தாய்மொழியில் தமிழாலயங்களில் கிடைக்கும் புள்ளிகளையும் ஒப்பீடு செய்து அவர்களை வகுப்பேற்றம் செய்கின்றனர். இது யேர்மனியில் தமிழ்மொழிக்கு கிடைத்த கௌரவமாகக்கொள்ளலாம்.

தாய்மொழி தெரியாதவர்கள், முதலில் தம் பண்பாட்டினை இழக்கின்றனர். இது தமிழ் மொழிக்கு மட்டுமல்ல தமிழினத்திற்கு மட்டுமல்ல உலகத்தில் ஒவ்வொரு இனமும் தங்கள் தாய்மொழியை இழக்கின்றபோது அவர்களது பண்பாட்டினையும் சேர்த்தே இழப்பதை பல ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. இதனாற்தான் இன்று பல பண்பாட்டுச்சீர்கேடுகள் ஏற்படுகின்றன.

இதனை உணர்ந்த திரு நாகலிங்கம் அவர்கள் இன்று வரை சலிக்காது தமிழ்தொண்டு புரிந்து வருகின்றார். இவரது ஒவ்வொரு முயற்சிக்கும் பின்னின்று உதவுவது அவரது துணைவியார் திருமதி ஆயிலியம் நாகலிங்கம் அவர்கள். அவரது துணையில்லை என்றால் இவ்வளவு சேவைகளை இவரால் தனித்துச் செய்திருக்கமுடியாது என்பது திண்ணம். தேசியத்தலைவரின் பாராட்டுதலை நேரில் பெற்றுக்கொண்ட ஒரு ஆசிரிய சிற்பி இவர்.

இவரோடு வெற்றிமணி வாசகர்களுக்காக உரையாடியபோது சொன்ன சில தகவல்களை இங்கே தருகின்றோம்.

அன்று போதிய புத்தகங்கள் இல்லை.அதனால் தாயகத்தில் இருந்து புத்தகத்தின் ஒவ்வொரு பக்கமாக கடிதத்தில் எடுத்து அவற்றை இங்கு புத்தகமாக பதித்தோம்.

முதலில் தமிழாலயம் என்ற பெயரில் 1990 ஆண்டு யூச்சன் நகரில் முதலாவது தமிழாலயம் அமரர் திரு.சுரேந்திரகுமார் தலைமையில் என்னால் திறந்து வைக்கப்பட்டது.

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் யேர்மன் பொறுப்பாளராக சேவையாற்றுகின்றேன்.

இன்று தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் நடத்தும் பொதுப்பரீட்சையில் ஐரோப்பாவில் அதிகூடிய மாணவர்கள் பங்குபற்றும் நாடாக இன்று யேர்மனி திகழ்கின்றது. அதாவது 7000 மாணவர்கள் பங்குகொள்கின்றனர்.

கல்விப்பணி சம்பந்தமாக தாயகம், நோர்வே, இங்கிலாந்து பிரான்ஸ் ஆகியநாடுகளுக்கு சென்று வந்துள்ளேன்.

**தமிழாலயத் தந்தை இரா.நாகலிங்கம் ஐயா அவர்களின்அகவை 80 இன் போது வெற்றமணி அன்னாரை நேர்கண்டு ஆவணி 2007 ஆண்டு வெற்றிமணி இதழில் வெளியிட்ட கட்டுரையை மீண்டும் அவர் நினைவாக பிரசுரம் செய்கின்றோம்.**

திருமதி ஆயிலியம் நாகலிங்கம் அவர்கள் 1986 தொடக்கம் காகன் பாடசாலையின் ஆசிரியப் பணியுடன், நிர்வாகியாகவும் செயற்பட்டு வருகின்றார். 1986 ல் திரு,திருமதி நாகலிங் கத்தால் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்பாடசாலை 1990 ல் தமிழ்க் கல்விக்கழகத்துடன் தமிழாலயமாக இணைக்கப்பட்டு இன்று 17 வது அகவை நிறைவையும் தமிழப் பாடசாலை ஆரம்பித்த 21 வது நினைவு நாளையும் 18.08.2007 இல் கொண்டாடுகின்றது.

காகனைவிட அயல் நகரங்களான கற்றிங்கன், கசிலிங்கவசன், என்னப்பெற்றால், விற்றன், ஆகிய பாடசாலைகளிலும் தமது பணியை 10 ஆண்டுகள் வரை நிறைவு செய்துள்ளார். இவர் யேர்மனியில் கல்விப்பணி ஆரம்பமான காலத்திலிருந்து தனது துணைவரின் சேவைக்குப் பக்கபலமாக இருந்து வந்ததுடன், தேர்வுக்குழுவிலும் அங்கம் வகித்துள்ளார். தற்பொழுது யேர்மனி தேர்வுப் பொறுப்பையும் ஏற்று செயற்படுத்துகின்றார்.

ஆரம்பகாலங்களில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவியபோது வாரத்தில் 7 நாட்களும் அயல் நகரத் தமிழாலயங்களில் இருவரும் பணிசெய்துள்ளனர்.

கின்னஸ் புத்தகத்தில் சாதனையே நோக்காக பல வித்தியாசமான நிகழ்வுகளைச்செய்து சாதனை படைக்கும் இக் காலத்தில், இவர்கள் படைக்கும் சாதனைகளையும் மறந்து, சேவையே பெரு நோக்காகக் கொண்டுவாழ்கின்றனர்.

அதனால் தமிழ்மக்களின் இதயப் புத்தகத்தில் இவர்களது சேவை நிலையாகப் பதியப்படுகின்றது.

இன்று தமிழ்போல் இளமையுடன் இருக்கும் திரு,திருமதி நாகலிங்கம் அவர்கள் முத்தான பெருவாழ்வு கண்டு முத்தமிழ் போற்ற வாழ்கவென வெற்றிமணி உலகத்தமிழ் வாசகர் சார்பில் வாழ்த்துகின்றது. வாழ்க தமிழின் முத்துக்கள்

வாழும்போதே வாழ்த்தப் பழகுவோம்!




**T.T.S.Brothers GmbH&Co.KG**

உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்-ஆடை அணிகலன்கள் மற்றும் உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து தேவைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

உங்கள் உறவுகளுக்கு
துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!
MoneyGram Transfert d'argent

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288

Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829

Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184

Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846

அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்

கதை சொல்ல ஓர் கதை...



## சிறுவர் அரங்கம்

# விளையாட்டுகளின் போட்டி

மீரா. குகன்

அன்று ஜேர்மன் நாட்டிலுள்ள தமிழ் பாடசாலை ஒன்று ஒரே உற்சாகத்துடன் ஆரவாரப்பட்டுக் கொண்டிருந்தது . அவர்களது வருடாந்த விளையாட்டுப் போட்டி வெகு விமரிசையாக நடப்பதற்கு ஆயத்தம் நடந்து கொண்டிருந்ததே அதன் காரணமாகும். விசேடமாக லண்டன் நகரின் தமிழ் பாடசாலையின் துடுப்பாட்ட (கிரிக்கெட்) அணியொன்று இத்தமிழ் பாடசாலையின் அணியுடன் போட்டியில் பங்குபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை இன்றைய தினத்தை மேலும் சிறப்பாகியது . ஜேர்மன் நாட்டில் இத் துடுப்பாட்ட விளையாட்டானது அவ்வளவாக விளையாடப்பதுவது இல்லை. என்றாலும் தமிழ் பாடசாலை ஆசிரியர்கள் தமது மாணவர்களுக்கு அவ்விளையாட்டை பயிற்றுவித்து லண்டன் தமிழ் பாடசாலைக்கு எதிரணியாக விளையாட ஆயத்தம் செய்திருந்தனர் .

லண்டன் தமிழ் பாடசாலை மாணவர் அணியும் விளையாட்டு அரங்கத்துக்கு ஆயத்தமாக வந்திறங்கினர் . இதே அரங்கில் வழமைப் போன்று கால்பந்தாட்டம் விளையாடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும் முதன் முறையாக விளையாடப்படும் துடுப்பாட்ட விளையாட்டை பார்ப்பதற்கே எல்லோரும் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்தமை கால்பந்தாட்ட விளையாட்டிற்கு கொஞ்சம் ஏமாற்றத்தைக் கொடுத்தது . ஒவ்வொரு வருடாந்த போட்டியின் போதும் இறுதியில் சிறப்பம்சமாக கால்பந்தாட்ட போட்டியையே ஒழுங்கமைப்பாளர் ஏற்பாடு செய்திருப்பார் . இதனால் காலபந்தாட்டம் தனக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவத்தினால் மிகவும் மகிழ்ச்சியும் அதனுடன் சேர்ந்து கொஞ்சம் ஆகங்காரமும் கொண்டிருந்தது . ஆனால் இன்று எல்லோரும் தன்னை அலற்சியப்படுத்திவிட்டு துடுப்பாட்ட விளையாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்தது கால்பந்தாட்டத்தை கவலையில் ஆழ்த்தியது . மறு நிமிடமே தன் மனதை சமாதானப்படுத்திக் கொண்டு „என்ன தான் எமது ஆசிரியர்கள் மாணவர்களுக்கு பயிற்சி கொடுத்திருந்தாலும் அவர்கள் விரும்பி விளையாடும் விளையாட்டு கால்பந்தாட்டமே. துடுப்பாட்ட விளையாட்டு இங்கு வந்து அவமானப்பட்டு திரும்பப்போகிறது" என்று தனக்குள்ளே சிரித்தது . காலபந்தாட்டின் ஏளனச் சிரிப்பை பார்த்த துடுப்பாட்ட விளையாட்டு „உங்களை உயர்வாக கருதி பெருமை படவேண்டாம். துடுப்பாட்ட விளையாட்டு ஜேர்மன் நாட்டு மாணவருக்கு புதிது என்பதனால் என்னைத் தான் எல்லோரும் விரும்பிப் பார்க்கப் போகிறார்கள் . இங்குள்ள ஆசிரியர்கள் தமது தாயகத்தில் இளவயதில் விளையாடி மகிழ்ந்த விளையாட்டும் நான் தான் . நீங்கள் இல்லை . என்னைப்பற்றிய பெருமைகள் பல உண்டு . நான் ஒரு விளையாட்டின் போது தொடர்ந்து மூன்று நாட்களும் விளையாடக் கூடியவன் . நீங்களோ ஒரு விளையாட்டுக்கு பொதுவாக இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் கால்பந்தாட்ட அணிகள் விளையாட முடியாது . மற்றும் கால்பந்தாட்ட அணியில் ஒரு பந்தை வைத்துக்கொண்டு அதை மற்றவரிடமிருந்து தட்டிப் பறிக்க முயலுகிறீர்கள். உங்களால் என்னைபோன்று ஒவ்வொரு தனி நபரின் திறமையை எடுத்துக்காட்ட முடியுமா ? துடுப்பாட்டட்டில் ஒவ்வொரு விளையாட்டு வீரரும் தமது முழுத்திறமையையும் பந்தை அடிப்பதிலோ அல்லது பந்து வீச்சிலோ காட்ட போதுமான அவகாசம் கொடுக்கப்படுகிறது. உங்கள் விளையாட்டை மிக விரைவாக விளையாடி முடிக்க வேண்டும். நான் அப்படியில்லை. ஆகவே நான் தான் சிறந்தவன்இ துடுப்பாட்டம் விளையாட்டு மார்பை தட்டிக்கொண்டது . கால்பந்தாட்டம் உடனே கோபத்துடன் இடைமறித்து „என்ன நீங்கள் இப்படிச் சொல்கிறீர்கள் ! நான் தான் மிகச் சிறந்த விளையாட்டு . எனக்கு தான் விசிறிகள் அதிகம் . உலகம் முழுவதும் கால்பந்தாட்டம் விளையாடுவதற்கே பலரும் ஆர்வம் காட்டுகிறார்கள். மற்றும் நாம் அணியாக சேர்ந்து விளையாடி ஒவ்வொருவருக்கிடையில் ஒற்றுமை இ விட்டுகொடுக்கும் தன்மை போன்ற நற்பண்புகளை வளர்க்கிறேன். ஆகவே நான் தான் சிறந்த விளையாட்டு என்று கூறிக்கொண்டது. இரு விளயாட்டுகளும் தங்களுக்குள் மோதிக்கொள்கையில் இவர்களை பொருட்படுத்தாது அங்கு கூடியிருந்த மாணவ மாணவிகள் ஒரே குதூகலிப்பிலும் கேளிக்கையிலும் ஈடுப்பட்டுக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு இறுதியில் எந்த அணி எந்த விளையாட்டில் வெற்றி பெற்றது என்ற எண்ணமே இருக்கவில்லை . அன்று நடைபெற்ற கால்பந்தாட்ட போட்டியில் ஜேர்மன் அணி வெற்றிப் பெற்றனர் . துடுப்பாட்ட விளையாட்டில் லண்டன் அணி வெற்றிப்பெற்றது . அவர்கள் தமது வெற்றி தோல்வியை கொஞ்சமும் பொருட்படுத்தாது போட்டிகள் முடிவடைந்த பின்னர் மிகுந்த மகிழ்ச்சியுடன் ஒவ்வொருவரும் கை குலுக்கி விட்டு தோள் மேல் கைப் போட்டுக்கொண்டு சந்தோஷமாக பேசிச் சிரிக்க தொடங்கிவிட்டனர் . இவர்களின் சந்தோஷத்தைப் பார்த்த இப்போட்டிக்கு ஒழுங்கு செய்த ஆசிரியர் தனது சக ஆசிரியரிடம் இ நாம் இம்முறை லண்டன் தமிழ் பாடசாலை மாணவரை போட்டி என்ற பெயரில் அழைத்தது எவ்வளவு நல்லதாக போய்விட்டது . வெற்றி தோல்வி என்பது முக்கியமில்லை . பாருங்கள் எவ்வளவு சந்தோஷமாக மாணவர்கள் சேர்ந்து விளையாடுகிறார்கள் . ஒவ்வொரு விளையாட்டும் உருவாக்கப்பட்டிருப்பது உடற்பயிற்சிக்கும் மற்றும் மகிழ்ச்சிக்குமே ஒழிய வேறொன்றும் இல்லை . ஆகவே இன்றைய நாள் இனிதாக நிறைவு பெற்றது . ஆசிரியர் மனநிறைவுடன் கூறி முடித்தார் . தான் பெரிது நீ பெரிது என்று ஆணவத்துடன் சண்டை செய்து கொண்டிருந்த துடுப்பாட்ட விளையாட்டும் கால் பந்தாட்டமும் ஆசிரியர்களின் உரையாடலைக் கேட்டு வெட்கி தலைக் குனிந்தனர் .




அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்

# தாயே சேய்க்கும் சேயானாள்!





கனக்ஸ்

மெலானி போய்வின் தன் மகள் பிளேவினைக் கொஞ்சும்போது...

தன்பிள்ளைக்காக சொத்துச் சேகரித்து வைப்பார்கள், நகை நட்டுக்கள் கூட சேர்த்து வைப்பார்கள். இதோ ஒரு வித்தியாசமான தாய்.


அந்த அம்மையார் கனடாவின் மொன்றியால் நகரைச் சேர்ந்த சட்டத்தரணி மெலானி போய்வின் (Melanie Boivin). இவரது மகள் பிளேவிக்கு ( Flavie) இப்போ 7 வயது. அந்தப் பெண்ணுக்கு ஒரு பரம்பரை அமைப்பு சம்பந்தமான நோய். இது பரம்பரை அமைப்பு சம்பந்தப்பட் நோய் என்பதனால் அதற்கு மருத்துவம் இல்லை.

அந்நோய் ரேனேர்ஸ் சின்டிறோம் (Turner's Syndrome) என அழைக்கப் படுகிறது.

எமது உடற்கலங்களிலே உள்ள நிறமூர்த்தங்கள் சோடி சோடியாகக் காணப்படுகின்றன என்பது நீங்கள் அறிந்ததே. ஆனால் ஒவ்வொரு கலத்திலேயும் உள்ள நிறமூர்த்தங்களில் 22 சோடி நிறமூர்த்தங்கள் சாதாரணமான உடல் இயல்புகள் சம்பந்தப்பட்டவையாக உள்ள போது ஏனைய இரண்டும் கொஞ்சம் வேறுபட்ட தொழிலைச் செய்கின்றன. அவையேதான் பிறக்கப் போகின்ற குழந்தை ஆணா பெண்ணா எனத் தீர்மானிப்பவை. ஆகவே அவை இரண்டையும் இலிங்க நிறமூர்த்தங்கள் அல்லது அயன் மூர்த்தங்கள் ( Sex Chromosome or Allosome) என அழைப்பார்கள்.

ஏனைய நிறமூர்த்தங்கள் தன்மூர்த்தங்கள் ( Autosome or Somatic Chromosome) எனப்படுகின்றன.

அயன் மூர்த்தங்கள் இரண்டும் ஒரே மாதிரியாக இருந்தால் அக்குழந்தை பெண்ணாகவும் ( XX) அவை இரண்டும் வித்தியாசமானவையாக இருந்தால் குழந்தை ஆணாகவும் (XY) விருத்தியுறும் என்பது ஊறறிந்த விசயம். எனவே விபரமாகச் சொல்ல வேண்டியதில்லை.




மேலே உள்ள படங்கள் இரண்டினையும் பாருங்கள். முதலாவது படம் ஒரு பெண்ணின் உடற்கலத்தில் உள்ள நிறமூர்த்தங்களையும், இரண்டாவது படம் ஒரு ஆணின் உடற்கலத்தில் உள்ள நிறமூர்த்தங்களையும் காண்பிக்கின்றன.

இரண்டு படங்களிலேயும் 22 சோடி தன்மூர்த்தங்கள் நான்கு வரிசையில் காணப்படுகின்ற போது, நான்காவது வரிரையின் கடைசியில் இருப்பதே இலிங்க நிறமூர்த்தம் ஆகும். இவையே இலிங்க நிறமூர்த்தங்கள். பெண்ணிலே பார்த்தீர்களானால் இலிங்க நிறமூர்த்தங்கள் இரண்டும் ஒரே மாதிரியானவையாகக் காணப்படுகின்றன. ஆனால் ஆணிலோ இந்த இரண்டு இலிங்க நிறமூர்த்தங்களில் ஒன்று பெரிதாகவும் மற்றையது குறுகியதாகவும் காணப்படுகின்றன. ஆகவே ஆணில் இரண்டு இலிங்க நிறமூர்த்தங்களும் ஒன்றில் இருந்து ஒன்று வேறுபட்டுள்ளன. எனவே தான் பெண்ணின் இலிங்க நிறமூர்த்தங்களை XX என்றும் ஆணினதை XY எனவும் குறிப்பிடுகிறோம்.

இது விளங்கினால் மேற்கொண்டு அடுத்த பந்தியை வாசியங்கள். விளங்கவில்லையா கவலையை விட்டு அதற்கு அடுத்த பந்திக்குப் பாயுங்கள்.

( பாவி! இது கூட விளக்கமாகச் சொல்லத் தெரியாத நீ எப்படித்தான் இத்தனை மாணவர்களை மருத்துவக் கல்லூரிக்கு அனுப்பி வைத்தாயோ? )




பிளேவியின் உடற்கலத்தினைச் சோதித்துப் பார்த்தபோது அங்கே ஒரு X நிறமூர்த்தம் மாத்திரமே இருந்தது. இத்தகைய நிலை பொதுவாக 2500 பெண்களில் ஒருவருக்குத் தான் வருவது வழக்கமாம். பிளேவியில் ஒரு X நிமூர்த்தம் உள்ளது. அது பெண்மைக்குரியது.

அருகே உள்ள படத்தில் உடற்கலத்தின் நிறமூர்த்தப் படம் உள்ளது. இலிங்க நிறமூர்த்தத்தில் ஒன்றினைச் சுற்றி சதுரம் போட்டு அதன் கீழே கேள்வி அடையாளமிடப் பட்டுள்ளது. இந்த நிறமூர்த்தம் சிதைந்து விட பிளேவியில் ஒரு X நிமூர்த்தம் மாத்திரமே உள்ளது.

இதனால் அக்குழந்தை பெண் குழந்தையாக இருந்தபோதும், ஒரு பெண்ணிற்கு வேண்டிய எல்லா உறுப்புகளும் விருத்தியுறமாட்டா.

அதில் சூலகமும் ஒன்று. ஆனால் கருப்பை சூலகக்கான் போன்றவை விருத்தியுற்றிருக்கும்.

சூலகம் இல்லாமையால் அது சுரக்கின்ற ஓமோன்களும் சுரக்கப்படமாட்டாது. ஈஸ்திரோஜன் எனப் படும் இந்த ஓமோன்களே பூப்படைதலுக்கும் இரண்டாம் நிலைப் பாலியல் இயல்புகளுக்கும் காரணமாகின்றன. ஆகவே இப்பெண் இயற்கையாகப் பூப்படையமாட்டாள்.

ஆனால் பூப்படையும் வயதினை அடைந்ததும் ஓமோன்கள் செலுத்தி அப் பெண்ணினைப் பூப்படைய வைக்கலாம். மகாபாரதம் படித்தவர்களுக்கு இது பற்றிச் சொல்லத் தேவையில்லை. பாண்டவர்கள் பதினான்கு வருடம் வனவாசம் செய்த பின்னர் ஒரு வருடம் அஞ்ஞாத வாசம் செய்தனர் அல்லவா. அப்போது அவர்களை எவராயினும் இனங்காணமுடியாத அளவிற்கு அவர்கள் தமது உடலமைப்பிலே மாற்றங்கள் செய்தனர். அருச்சுனன் இந்த ரேனேர்ஸ் சின்டிறோம் உடையவராக தன்னை மாற்றிக் கொண்டார். அங்கே அவர் பேடி என அழைக்கப் பட்டார்.

பிளேவியின் தாயாருக்குத் தன் மகளின் கவலைக்குரிய நிலை நன்கு புரிந்துள்ளமையால் அவர் தனது பிள்ளைக்கு உதவ முன்வந்துள்ளார்.

தனது பிள்ளைக்காக தனது முட்டைகளில் ஒன்றல்ல இரண்டல்ல 21னை உறைய வைத்துச் சேமித்து வைத்துள்ளார்.

பிளேவிக்குத் திருமண மானால் அவருக்கு சொந்தமாகப் பிள்ளை பிறக்கும் சாத்தியமில்லை. கணவனுடைய விந்தினை வேறொருவருடைய முட்டைக்குக் கருக்கட்டி அதனை பிளேவி தனது கருப்பையில் பதித்து பிள்ளை பெற்றெடுக்கலாம். பிளேவி அங்கே ஒரு வெறும் ஈன்றாள் (Surrogate) ஆகவே செயற்படுவாள். யாரிடம் முட்டைக்குப் போவாள்?

தாயன்பு என்பது இது தானோ?

முன்னெச்சரிக்கையாக 21 முட்டைகளைச் சேகரித்து வைத்துள்ளார் மெலானி போய்வின். இப்படியாக தாய் பிள்ளைக்காக தனது முட்டைகளைச் சேமித்து வைப்புது இதுவே உலகில் முதலாவது முறை என்கிறார்கள்.

இச் செய்கை ஒரு சர்ச்சைக்கு வழிவகுக்கிறது. பிளேவி பெறப் போகும் பிள்ளை நிச்சயமாக அவரது பிள்ளை இல்லை. அவரது கணவனின் விந்து வினால் கருக்கட்டப் பட்டமையால் அதனை அவரது கணவரின் பிள்ளையாகக் கருதலாம்.

அப்படியாயின் அவரது மாற்றாந்தாய்ப் பிள்ளை. இன்னொரு வழியில் பார்க்கும் பொழுது அப்பிள்ளை பிளேவியின் தாயினது முட்டையில் இருந்து உருவானது என்பதால் அது அவரது உடன்பிறப்பு? எது சரி. இப்போ முறைகளை பற்றி முறையிடுவது முறையல்லவே!!!






# ஜெர்மனியில் பொது இடத்தில் சிறுநீர் கழித்தால் முகத்தில் பீய்ச்சியடிக்கும் நவீன சுவர் அமைக்கப்பட்டுள்ளது.



ஜெர்மனியில் பொது இடத்தில் சிறுநீர் கழித்தால் முகத்தில் பீய்ச்சியடிக்கும் நவீன சுவர் அமைக்கப்பட்டுள்ளது.
யாழ்பாணம் பஸ் நிலையத்தில் இருந்து றீகல் தியேடர் செல்லும் ஒழுங்கை மூத்திர ஒழுங்கை என்று முன்பு சொல்வது உண்டு. அந்த ஒழுங்கைக்கு பீய்ச்சியடிக்கும் நவீன சுவர் அமைத்துவிடலாம் போல் தோன்றுகிறதா? தொடர்ந்து படியுங்கள்!
பொது இடங்களில் உள்ள சுவர்களில் சிலர் சிறுநீர் கழித்து சுற்றுப்புற சூழலை கெடுக்கின்றனர். துர்நாற்றத்தால் அப்பகுதியை பாழடிக்கின்றனர். அவற்றில் இருந்து விமோசனம் பெற ஜெர்மனியில் அதிநவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்தியுள்ளனர்.
அங்குள்ள ஹாம்பிரிக் நகரில் செயிண்ட் பாலி இரவு விடுதி பகுதியில் உள்ள வீடுகளின் சுவர்களில் சிறுநீர் கழித்து நாறடித்து வருகின்றனர். இதை தடுக்க விடுதி நிர்வாகம் தனது கட்டிட சுவர்களில் தண்ணீரை திரும்ப பீய்ச்சியடிக்கும் தன்மை கொண்ட அதிநவீன சூப்பர் பெயிண்டை அடித்துள்ளனர்.
அதன் அருகில், ஒரு எச்சரிக்கை பலகையும் வைக்கப்பட்டுள்ளது. அதில் 'இங்கு சிறுநீர் கழிக்காதீர். அது மீண்டும் உங்களிடமே திரும்பி வரும்' என எழுதப்பட்டுள்ளது. இதே பெயிண்டை அந்த விடுதியை சுற்றியுள்ள குடியிருப்புவாசிகளும் தங்கள் சுவர்களில் அடித்துள்ளனர்.
தொழில் நுட்பம் வாய்ந்த இந்த பெயிண்டை அமெரிக்க கம்பெனி கடந்த 2012ம் ஆண்டு கண்டுபிடித்தது.

# இப்படி எல்லாம் இருந்தால் அஜீத்தை யாருக்கு தான் பிடிக்காது!



அஜீத்தை அனைவரும் கொண்டாட பல காரணங்கள் உள்ளது. ஒரு காலத்தில் அஜீத்தை அவரது ரசிகர்கள் மட்டும் தான் தல, தல என தலையில் வைத்து கொண்டாடினர்.

ஆனால் தற்போதோ திரை உலகினர், பிற நடிகர்களின் ரசிகர்களுக்கு கூட தல மீது தனி மரியாதையும், அன்பும் உள்ளது. இப்படி அனைவருக்கும் அஜீத்தை பிடித்துப் போக காரணம் இல்லாமல் இல்லை.

அவற்றில் திரை உலகினரே வியந்து சொல்லும் சில காரணங்கள் இதோ,

வேலையாட்கள் அஜீத் தனது வீட்டில் வேலை பார்க்கும் பணியாளர்களிடம் அன்புடன் நடந்து கொள்வார். அவர்கள் தங்க வீடு கட்டிக் கொடுத்துள்ளார். மேலும் அவர்கள் தங்கள் வீட்டில் இருந்து வேலைக்கு வந்து செல்ல வாகன வசதி செய்து கொடுத்துள்ளார்.

ஊக்குவிப்பு சக நடிகர், நடிகைகளை ஊக்குவிக்க தவறாதவர் அஜீத். அதே போன்று யார் சிறப்பாக நடித்தாலும் அவர்களை அவர் பாராட்ட மறப்பதும் இல்லை.
விருந்தாளிகள் அஜீத் தனது வீட்டுக்கு யார் வந்தாலும் தனது கையால் தான் காபி கொடுப்பார். வீட்டுக்கு வந்தவர்களுக்கு முதலில் சாப்பிட ஏதாவது கொடுத்துவிட்டு தான் பேசுவார்.
அடக்கம் அடக்கம், அன்புடன் நடந்து கொள்வது, தான் ஒரு சினிமா நடிகன் என்ற பந்தா இல்லாமல் பொதுமக்களில் ஒருவராகவே நடந்து கொள்வது... இப்படி எல்லாம் இருந்தால் ஒரு பெரிய நடிகரை யாருக்கு தான் பிடிக்காமல் இருக்கும்!
வாசல் வரை அஜீத் தனது வீட்டுக்கு வரும் விருந்தாளிகளை நன்கு உபசரித்து அவர்கள் கிளம்பும்போது வாசல் வரை வந்து வழியனுப்பி வைப்பார்.



அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்

# நமக்கு தெரியாமலே, நம்மோடு தினமும் உறவாடும் விஷத்தன்மையுள்ள இரசாயனங்கள்!

பிளாஸ்டிக்கில் இருக்கும் பைசெப்∴னால்-ஏ (Bisphenol-A (BPA) எனும் இராசாயக் கலவை யினால், நமது உடலுக்கு மிகவும் தேவையானது நாளமில்லா சுரப்பிகள் பாதிப் படைகிறது. நாம் பிளாஸ்டிக் பாத்திரங்களில் உணவு உட்கொள்வ தனால் நமது உடலில் உள்ள நாளமில்லா சுரப்பிகள் பாதிக்கப்படையக் காரணம் என கூறப்படுகிறது. மற்றும் இது பெண்களுக்கு ஈஸ்ட்ரோஜன் அளவை பாதிக்கிறது, அவர்களுக்கு மார்பக புற்றுநோய் ஏற்பட ஒரு காரணமாகவும் திகழ்கிறது. இந்நிலையில் ஆரோக்கியமான சமையலுக்கு கைகொடுக்கும் மண்பாண்டக் கலையும் நம் மண்ணில் அழிவுறுகின்றது.



## தாய்மண்ணில் அழிவடைந்து வரும் மட்பாண்டக்கலை

மனிதன் அழிந்துபோகக்கூடிவன் ஆனால் அவனால் படைக்கப்படும் படைப்புக்கள் காலந் தோறும் நிலைத்து நிற்கக்கூடியது. ஆனால் தற்போது அவையும் அழிந்து போகும் நிலையே காணப்படுகின்றன. நவீன தொழில்நுட்பயுகமாகிய இக்காலத்தில் ஒவ்வொரு மனிதனும் தத்தமது வாழ்க்கையில் மிக வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றான் இதனடிப்படையில் மனித னின் பொருளாதாரமே அவனின் உணவு சுகாதாரம் மற்றும் தொழில் வாய்ப்புடன் கூடிய ஆரோக்கி யத்தை தீர்மானிக்கின்றது.

பொருளாதார மட்டம் அதிகரிக்கும் போது குடிசனங்களின் வாழ்வாதார நிலையில் ஏற்படும் மாற்றமானது நகரமயமாக்கலை சுட்டிநிற்கின்றது. சில்வர், ஈயம் போன்றவற்றினாலான சமையல் பாவனைப் பொருற்கள் அதிகரித்த பின்னர் மட்பாத்திரங்களின் நிலை பின்நோக்கி செல் கின்றது என்றே சொல்லலாம்.

தற்போதைய காலத்தில் மட்பாண்டங் களின் நிலை எவ்வாறு மாற்றமடைந் துள்ளது என அறிந்துகொள்ள மட்பாண்ட தொழில் நடைபெறும் ஒரு இடத்திற்கு சென்றேன். ஆடியபாதம் வீதி கல்வியங்காடு பகுதியில் மட்பாண்ட தொழில் செய்து வரும் பழனிமுருகையா ராஜேந்திரம் என்பவருடன் சிறிது நேரம் உரையாடினேன். நவீன தொழில்நுட்ப உலகில் பெரும்பாண்மையான மக்கள் சில்வர், ஈயம் போன்ற வற்றினாலான சமையல் பாவனைப் பொருற்களுக்கு மாறிவிட்ட நிலையில் தற்பொழுது உங்களால் இத்தொழிலை எவ்வாறு தொடாந்து செய்யமுடிகிறது? என வினாவியபோது

எனக்கு இது பரம்பரை பரம்பரையாக செய்து வரும் தொழில் அப்பா தாத்தா சொய்யும் போது நானும் பழகினதுதான். இப்ப 20 வருடமாக நான் இத்தொழிலை செய்து வருகின்றேன். மழை காலத்தில் எம்மால் இத்தொழிலை செய்ய முடிவதில்லை மனைவி லலிதாம்பிகை தான் என் இத்தொழிலுக்கு வலதுகை என்று சொல்ல வேண்டும் எனக்கு மூன்று பிள்ளைகள் இருக் கின்றார்கள். அவர்கள் படிக்கிறார்கள் வீட்டில் நிற்கும் நேரங்களில் எனக்கு உதவி செய்வார்கள். எனது அப்பா தாத்தா இத்தொழிலை செய்யும் போது நாங்கள் எப்படி ஒற்றுமையாய் செய்தோமோ அதே போல் இன்று எனது பிள்ளைகளும் படிப்பு நேரத்தை தவிர தாராளமாக ஒத்துழைப்பு தருகின்றனர்.

எம் தொழில் அருகி வர காரணம் நாகரீக வளர்ச்சி மட்டுமல்ல போட்டி பொறாமையும் தான் போட்டி என்பது எல்லா தொழிலிலும் இருக்கும் ஆனால் பொறாமை என்பது முன்னேற்றத்தை தடுப்பது மட்டுமல்ல தானும் முன்னேறாமல் தடுப்பது தான் இதை யாரும் புரிந்து கொள்வதில்லை.

பிள்ளைகள் விட்டுவிடுங்கள் என்று பல தடவை சொல்லி விட்டார்கள். எனக்கு இத்தொழில் பழகிவிட்டது அத்துடன் இவ் மட்பாண்ட தொழிலுக்கு யாழ்மாவட்டத்தில் நான் தலைவராக இருக்கிறேன் அதனால் விட முடியவில்லை தாங்கள் படிக்கும் வரை தான் இத்தொழில் செய்ய அனுமதி என்று சொல்லி விட்டார்கள் எனக்கும் அவர்களின் விருப்பம் தானே முக்கியம். எனக்கு பின் இத்தொழிலை செய்ய யாரும் இல்லை என்ற கவலை எனக்கு இருக்கத்தான் செய்கின்றது

செலவுக்கு ஏற்ற வருமாணம் இல்லா விட்டாலும் இது எமது குலத்தொழில் விட முடியாது முன்னைய மாதிரி இல்ல இப்ப சரியான போட்டி முக்கியமான விசேட தினங்களில தான் எமக்கு வருமாணம் வரும் அதுவும் இப்ப குறைவு என்டு தான் சொல்லனும். காலம் எவ்வளவு தான் முன்னேறி போனாலும் மட்பாண்டங்களை பாவிப் பவர்கள் சில பேர் இருக்கத்தான் செய்கிறார்கள்.

எமக்கு ஒரு தொழில் சாசனம் இருக்கு. யாழ்ப் பாணம் மண்பாண்ட கலைஞர் கூட்டுறவு சங்கத்தின் தலைவராக இருக்கிறேன் எமது சங்கத்தில் 25 குடும்பங்கள் இத்தொழில் செய்வதாக பதிவு செய்திருக்கிறார்கள் ஆனாலும் 15 குடும்பங்கள் தான் இத்தொழிலை செய்து வருகின்றனர். ஏனைய குடும்பங்களுக்கு இத் தொழிலை தொடர்வதற்கு ஆட்கள் இல்லை வயது கூடினவர்கள் அல்லது பிள்ளைகள் வெளிநாட்டில் தான் வாழ்ந்து வருகின்றனர்.


எம் தொழில் குறைவடைந்து வருவது வேதனை யை தருகின்றது இருந்தாலும் நாமும் என்ன செய்ய இன்றைய கால ஓட்டத்திற்கு ஏற்ப ஓடித்தான் ஆகவேண்டும். நாங்கள் மூன்று பேர்தான் இங்கு வேலை செய்கின்றோம். அதனால் எமக்கு மட்பாண்டம் 700 செய்து முடிக்க 15 நாட்கள்தேவைப்படுகின்றது. எமக்கு மிக முக்கியமான மூலப்பொருள் மண் ஓட்டிசுட்டான், கண்டாவளை, நெடுங்கேளி, முருங்கை, மல்லாவி போன்ற இடங்களில் இருந்து தான் மண் வருகின்றது அடுத்தது பொச்சுமட்டை அது நாம் எமக்கு தேவையான அளவு தொகையாகவே வாங்குவோம்.

பாணை, டபிள்அடுப்பு, ஒற்றைக்கல்அடுப்பு, கும்பபாணை, கொள்ளிசட்டி, கூசா, பூச்சாடி, பூவாஸ், கண்பாணை, குத்துவிளக்கு, கறிமுடி, சட்டிவகை, மூக்குச்சட்டி, காத்திகைதீபம், விளையாட்டு பொருட்கள், எள்ளெண்ணைச்சட்டி போன்றன எம்மால் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன என்றார்.

இவருடன் இவ் மட்பாண்டபொருட்களின் உற்பத்தி அழிவடைந்து விடப்போகிறது என எண்ணும் போது மிகவும் கவலையாகத்தான் இருக்கிறது. மட்பாண்டங்களில் சமைத்து உண்பது உடல் ஆரோக்கியத்துக்கு சிறப்பானது என மருத்து வர்கள் தெரிவிக்கின்றனர் ஆனால் எமது சமூகம் வெள்ளி, ஈயம் போன்றவற்றினால் உருவான சமையல் பொருட்கள் மற்றும் ஏனைய பொருட் களின் பாவனைக்கு எப்பவோ மாறிவிட்டது.

பழமை என்பதை நாம் எப்பொழுதும் கட்டிக் காப்பாற்றுவது என்பது மிகவும் அவசியமான தொண்றாகும். பழமை எமது உடல் ஆரோக் கியத்துக்கும் கலாசாரத்திக்கும் சமூதாய ஆரோக் கியத்துக்கும் அடிப்படை என்பதை நாம் மறந்து விட்டோம். மட்பாண்டப்பொருட்களைப் போன்று எத்தனையோ பழமைகளை தொலைத்து வருகி றோம் என்பதை இப்பொழுது யாரும் நினைகக் கூட நேரமில்லை.

நன்றி: நானிலம் டொட்.கொம்


Essen மாநகரில் புதிய உதயம்

**Oviyan textiles**

ஓவியன் ஆடைகள் உலகம்

Öffnungszeiten 11.00-19.00 Uhr

Tel:0201 330 99 464

அழகிய பட்டுச்சேலைகள் பாட்டிசாறிகள் பெரியவர் சிறுமிகளுக்கான அழகிய பஞ்சாபிகள்,இமிற்ரேசன் நகைகள் அனைத்தையும் மலிவாகவும் தரமாகவும் பெற நாடுங்கள்,ஓவியன் ஆடைகள் உலகம்!

Handy 0177 73 98 346 / 0157 5721 7563

Ihn.Balasundaram
brobert@aol.nl

எசன் நகர பிரதான புகையிரத நிலையித்தில் (Hbf) இருந்து 5 நிமிட நடைத்தூரம்

Baedecker Str.11
45128 Essen




# கூழாயினும் கூடிக்குடி!

## நம்ம ஒடியல் கூழை ஒருமுறை குடித்துத்தான் பாருங்களேன்

உண்ணும் உணவாக இருக்கட்டும் இல்லை உணர்வுக்கு மகிழ்வூட்டும் எந்த நிகழ்வாக இருக்கட்டும் பலர் கூடிமகிழ்வது பரவசத்தைக்கொடுப்பதாக அமையும்.

நல்லதை பயனுள்ளதை பலர் ஒன்றுகூடி அனுபவித்தனர் அன்று. இன்று இடம்பெயாந்த இடைக்காலத்தில் நாம் தெலைந்தவையில் முக்கியமானது இந்த ஒன்று கூடால்தான். ஒரு பெரிய பலாப்பழம் கீறுவதாக இருந்தாலும் கிராமத்தில் பலர் கூடிமகிழ்வார். கிராமங்களில் ஒடியல் கூழ் ஒரு சாதாரண உணவு. அதனைக்கூட கூழாயினும் கொடுத்துக்குடி கூடிக்குடி என்பார்கள்.

என்னமோ ஏதோ இன்று குடி மட்டுமே கூடிக்குடிக்கின்றனர். இந்தக்குடி இல்லை என்றால் கூடி உண்ணும் முறையும் அற்றுப்போகும் அபாயமே உள்ளது.

யாழ்ப்பாணப் பாரம்பரிய உணவுப் பழக்கவழக்கங்களில் ஒடியல் கூழ் மிகவும் முக்கியமான உணவாகும். ஒடியல் கூழ் என்பது பனங்கிழங்கை நன்றாகக் காயவைத்துக் கிடைக்கும் ஒடியலை மாவாக திரித்து எடுக்கப்பட்ட மாவைக் (ஒடியல் மா) கொண்டு தயாரிக்கப்படும் உணவாகும். கூழ் பதம் வருவதற்கும், பிரத்தியேகமான கூழ் வாசனைக்கும் ஒடியல் மா கட்டாயான மூலப் பொருனாகும்.

### ஒடியல் கூழ் செய்யும் முறை:

தேவையான பொருட்கள்: ஒடியல் மா 1/2 கிலோ
மீன் 1 கிலோ (வகை வகையான சிறு மீன்கள். முள் குறைந்த மீன்களாக இருப்பது நல்லது) நண்டு 6 துண்டுகள் (இவை கூட மிகச் சிறிய நண்டுகளாக இருந்தால் நல்லது) இறால் 1/4 கிலோ சின்ன சின்ன கணவாய்கள்.



நெத்தலி மீன் கருவாடு 100 கிராம்
பயிற்றங்காய் 250 கிராம்
(1 அங்குல நீள துண்டுகள்)
பலாக்கொட்டைகள் 25 (கோது நீக்கி பாதியாக வெட்டியது)
ஒரு பிடி கீரை, அல்லது கீரை வகைகள்
ஒரு பிடி அரிசி 50 கிராம். பச்சை மிளகாய் 10 இரண்டாக பிளந்தது செத்தல் மிளகாய் 15 அரைத்தது பழப்புளி 100 கிராம் உப்பு சுவைக்கேற்ப

### யாழ்ப்பாணத்து ஒடியல் கூழ் :

யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் கூழ்களின் தன்மை மாறுபடும். அதாவது கூழில் சேர்க்கப்படும். பொருட்கள் நீங்கள் கூழ் வைப்பதற்காக தேவைப்படும் பொருள்கள் 1 கி.கிராம் மாவுக்கு, இரண்டு லிட்டர் தண்ணிர் தேவைப்படி சரியான அளவில் இரண்டும் இருந்தால்தான் கூழ் சரியான பதத்துக்கு வரும்.

**செய்முறை:**

முதலில் ஒடியல் மாவை ஒரு சிரு பாத்திரத்தில் கொஞ்சம் நீர் விட்டு ஊறவிடவும். நீரில் மிதக்கும் தும்புகளை அகற்றி மாவை நன்றாக நீரில் கரைக்கவும். 2மணி நேரமாவது ஒடியல் மா ஊற வேண்டும். செத்தல் மிளகாய் எனப்படும் காய்ந்த மிளகாயை நீர் தெளித்து அம்மியில் நன்றாக விழுது போல் அரைக்கவும். காரம் அதிகமாக இருக்க வேண்டுமானல் 3 அல்லது 4 காய்ந்த மிளகாய் சேர்த்து அரைக்கவும். பழப் புளியை ஒரு சிறிய பாத்திரத்தில் நீர் விட்டு அதிகம் நீர்த்தன்மையில்லாமல் கரைத்து வைக்கவும். இன்னொரு பெரிய பாத்திரத்தில் சரியான அளவு நீர் விட்டு கொதிக்க வைக்கவும். (கூழில் நிறைய பொருட்கள் போடுவதால் அவை நன்றாக வேகுமளவுக்கு தண்ணீர் அதிகமாய் இருக்க வேண்டும். அதே போல் பாத்திரமும் பெரிதாக இருந்தால் தான் பொருட்கள் அடி பிடிக்காமல் பதமாக இருக்கும்.) அதனுள் கழுவிய அரிசி, பயற்றங்காய், பலாக்கொட்டைகள், மீன்துண்டுகள், மீன்தலைகள், நண்டு, இறால், நெத்தலி கருவாடு, கீரை ஆகியவற்றை போட்டு நன்றாக அவிய விடவும்.


நன்றாக அவிந்ததும் ஒடியல் மா (நீரை வடித்துவிட்டு கரைசலான ஒடியல் மாவை மட்டும் எடுக்கவும்.) அரைத்து வைத்துள்ள மிளகாய் விழுது, கரைத்த புளி என்பவற்றைப் போட்டு கலந்து சுவைக்கேற்ப உப்புச் சேர்த்து குறைந்த நெருப்பில் வைத்து கூழ் தடிப்பானதும் சூடாக பரிமாறவும்.

### ஒடியல் கூழ் அருந்தும் முறை:

ஒடியல் கூழ் அருந்துவதில் சில நுட்பங்கள் இருக்கின்றன, ஒரு சாதாரண பாத்திரத்தில் ஒடியல் கூழை விட்டு குடித்தால் அதன் சரியான சுவை தெரியாது, அதனால் பனை ஓலையில் பிளா தயாரித்து அதில் கூழ் குடிக்கும்போது அதிக சுவயைத் தரும். அடுத்ததாக உறவினர் நண்பர்களோடு சேர்ந்து, அதாவது பலருடன் சேர்ந்து கூழ் குடிக்கும் போது அதன் உணர்வுகள் புரியும். கூழ் குடித்து அரை மணி நேரத்துக்கு முன் நீர் அருந்தல் ஆகாது. கூழ் குடிக்கும் போது பேச கூடாது, காரணம் கூழில் உள்ள மீன் முற்கள் தொண்டை பகுதியில் தைக்கக்கூடும், சிறு குழந்தைகள் கூழ் குடிக்கும் போது அதிக கவனம் எடுக்கவும், காரணம்: கூழின் கார தன்மை, மற்றும் கூழில் இருக்கும் மீன் முள்ளுகள். கூழ் எப்பொழுதும் அதிக சூடாகவே குடிக்க வேண்டும்.



# ஆயிரம் ஆயிரமாய் திரண்டு வந்து தமிழாலயத் தந்தைக்கு மாணவர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்கள் பொதுமக்கள் அஞ்சலி!



யேர்மனியின்
எல்லாபாகங்களிலும்
வாழும் தமிழ்
மாணவர்கள்
தமிழை பேசும் வாசிக்கும்
எழுதும் ஆற்றலோடு
இருக்க
முப்பது ஆண்டுகளுக்கும்
அதிகமாக தொடர்ந்து
பணியாற்றி
வெற்றிகண்ட இந்த
உத்தமருக்கு வெற்றிமணி
சிரம்தாழ்த்தி
அஞ்சலிசெய்கிறது..



யேர்மனியில் நம் இளம் சந்ததியினருக்கு தமிழ் ஊட்ட நூற்றுக்கணக்கான தமிழாலயங்கள் உருவாக உழைத்தவர் தமிழாலயத் தந்தை இரா.நாகலிங்கம் ஐயா அவர்கள்!













இதுவரை யேர்மனியில் காணத ஒரு உருக்கமான,பெரும் திரளான மக்கள் கூடிய நிகழ்வு


படங்கள் Kones Foto







KERVEN GmbH www.chitramtv.eu
FRANCE
www.chitramtv.eu ஐரோப்பாவில் அமோக விற்பனையில்...
chitramTV
தொடர்புகளுக்கு: 0049 173 8048459 0033 753 586 729
TAMIL HINDI TELUGU MALAYALAM
நான்கு மொழிகளில் 118 சனல்கள் ஒரே ரிசீவரில்
Renewal Available
NEW BOX
KERVIN GMBH



# உயிர்த்தெழவே மரித்தவர்

சேவியர்

## ”தப்பிதல்களின் தலைவன்”

### மரணத்திலிருந்து தப்பிக்க ஹாரியாலும் முடியாது ! ”

ஹாரி கௌடினி என்றொரு மனிதர் இருந்தார். 1874 ல் பிறந்த இவர், தனது வாழ்நாளில் உலகப் பிரசித்தம். ”தப்பிதல்களின் தலைவன்” என்று இவரை அழைத்தார்கள். என்னை நீங்கள் எப்படி வேண்டுமானாலும் கட்டலாம், பூட்டலாம், மாட்டி வைக்கலாம், அடைத்து வைக்கலாம் அனைத்திலும் இருந்து தப்பிப்பேன், என பொதுவில் சவால் விடுவார். இவருடைய சவாலை ஏற்றுக்கொண்டு பலரும் பல விதங்களில் இவரைப் பூட்டி வைக்க நினைத்தார்கள். முடியவில்லை. பல்லாயிரம் பேருக்கு முன்னால் வைத்தே, சவால்களை வெற்றியுடன் முடிப்பார்.

ஒரு முறை இவருக்காகவே ஸ்பெஷலாக 5 வருடங்கள் கஷ்டப்பட்டு ஒரு புதுவகை பூட்டைக் கண்டுபிடித்து அவரைப் பூட்டியது, லண்டன் ”டெய்லி மிரர்” செய்தி நிறுவனம். அதிலிருந்தும் தப்பினார். உலகமே அவரை வியந்து பார்த்தது .சங்கிலிகளால் பூட்டினால் தப்பினார். சவப்பெட்டியில் அடைத்து புதைத்தால் வெளியே வந்தார். பால் கேனுக்குள் திணித்துப் பூட்டினால், வெளியே வந்தார். உயர் மட்ட பாதுகாப்புடைய சிறையில் போட்டபோதும் தப்பினார் !

கடைசியாகஅக்டோபர் 31, 1926ல் மரணம் அவரைப் பூட்டியது. சாகும் முன் மனைவியிடம் சொன்னார். இதிலிருந்து தப்பிக்கும் வழி ஏதேனும் இருந்தால் நான் நிச்சயம் வருவேன். வந்து உன்னைச் சந்திப்பேன். நமது திருமண நாளில் உன்னை எப்படியும் வந்து சந்திப்பேன், காத்திரு ! என்றார். மனைவி மெழுகுதிரியும், இதயமும் உருக காத்திருந்தாள். திருமண நாள் வந்தது. ஹாரி வரவில்லை. அடுத்த வருடம் திருமண நாள் வந்தது, ஹாரி வரவில்லை. வருடங்கள் கடந்தன. பத்துவருடங்கள் சென்றபின் அவருடைய மனைவி தனது டைரியில் இப்படி எழுதினாள். ”மரணத்திலிருந்து தப்பிக்க ஹாரியாலும் முடியாது ! ”

மரணத்திலிருந்து தப்பிக்க யாராலும் முடியாது, ஒரே ஒருவர் தான் தப்பித்திருக்கிறார். அவருடைய உயிர்ப்பைத் தான் ஈஸ்டர் என அழைக்கிறோம்.

ஆதிமனிதன் ஆதாமை கடவுள் தமது சாயலாகப் படைத்து தமது ஆவியை ஊதி மனிதனாக்கினார். அவனையும், ஏவாளையும் ஏதேன் தோட்டத்தில் தங்க வைத்த இறைவன் ஒரே ஒரு கட்டளையை அவர்களுக்குக் கொடுத்தார். தோட்டத்தில் இருக்கும் எந்த மரத்தின் கனியை வேண்டுமானாலும் சாப்பிடுங்கள். ஆனால் தோட்டத்தின் நடுவில் இருக்கும் “நன்மை தீமை அறியும்“ மரத்தின் கனியை மட்டும் சாப்பிட வேண்டாம்.

எப்போதுமே மறுக்கப்படுபவை தான் வசீகரமாய் தோன்றும். வேண்டாம் என தடுப்பது தான் மீறுதலை போதிக்கும். ஆதாம் ஏவாளும் அப்படியே செய்தார்கள். கட்டளையை மறுதலித்தார்கள், பாவத்தை அரவணைத்தார்கள். ஏதேன் அவர்களுக்கு இல்லாமல் போயிற்று. துரத்தப்பட்டார்கள்.

காலங்கள் கடந்தன. ஆதாமின் பாவம் தலைமுறைகள் தோறும் தொடர்ந்தது. தனி மனித பாவத்தைக் கழுவ பலியிடுதல் வழக்கமாய் இருந்தது. இப்போது மனுக்குலத்தை மீட்க கடவுளே பலியாய் வரவேண்டிய சூழல். காரணம், கடவுள் ஒருவரே முடிவிலி !

இயேசு மனித அவதாரமாய் வந்தார். மனிதன் பாவமற்ற வாழ்க்கையை எப்படி வாழவேண்டும் என்பதை தனது வாழ்வினால் நடத்திக் காட்டினார். மீட்புக்கான அன்பின் போதனையை நிகழ்த்தினார். பின்னர் அன்பின் உயர் நிலையை கல்வாரியில் நிறைவேற்றிக் காட்டினார். மரணத்தின் விளிம்பிலும், தன்னை சிலுவையில் அறைந்தவர்களை மன்னித்தார். மரணத்தின் குகைக்குள் பயணித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்.

அவரது உயிர்ப்பே ஈஸ்டர். உயிர்ப்பு இல்லாமல் கிறிஸ்தவம் இல்லை. ஹாரியைப் போல இயேசுவும் கல்லறைக்குள் அடங்கியிருந்தால், கிறிஸ்தவம் இன்று இல்லை. நற்செய்தி இல்லை. பாவத்தையும் மரணத்தையும், ஆண்டவர் வென்று விட்டார் என்பதற்கான ஆதாரம் இல்லை. மீட்பு இல்லை. ”கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்” என்கிறது பைபிள்.

மறுபடியும் முளைத்து எழாத சூரியனை யாரும் வெளிச்சத்தின் நாயகனாகப் பார்க்க முடியாது. மரணத்தோடு முற்றுப்புள்ளியாகியிருந்தால் இயேசு ஒரு மனிதனாகவே வந்து மனிதனாய் மறைந்த ஒரு தத்துவஞானியாகியிருப்பார். உயிர்ப்பு என்பது ஒரு அனுபவம். கிறிஸ்தவ அனுபவத்தில் உயிர்ப்பு என்பது பாவ வாழ்க்கையை விட்டு விட்டு புதிய வாழ்க்கைக்குள் நுழைவது. அதாவது பழைய மனிதனை மரணிக்க வைத்து விட்டு புதிய மனிதனை உயிர்ப்பிக்க வைப்பது.

பாவம் என்பதை அறவே வெறுக்கும் ஒரு புதிய வாழ்வையே உயிர்ப்பு பிரதிபலிக்க வேண்டும். தெரியாமல் சகதியில் விழுந்து விட்டால் தன்னைத் தானே நக்கி நக்கி தூய்மைப்படுத்தும் பூனையைப் போல பாவத்தை கழுவ நம்மிடம் துடிப்பு இருக்க வேண்டும். சகதியில் விழுந்து விட்டால் சுகம் என்று அதிலேயே புரளும் பன்றிகளைப் போன்ற பழைய வாழ்க்கை அழிய வேண்டும்.

உலையில் இட்ட ஆமை முதலில் தண்ணீரில் நீந்தி விளையாடும். வெப்பம் கொஞ்சம் கொஞ்சமாய் அதிகரிக்க அதிகரிக்க அதன் உற்சாகம் அதிகமாகும். பின்னர் தண்ணீ கொதி நிலைக்குப் போகும் போது தான் தப்பிக்கவே முடியாது எனும் உண்மை அதற்கு உறைக்கும். ஆனால் அதன் பின் சாவைத் தவிர எதுவும் அதற்கு இல்லை. பாவமும் அப்படியே. முதலில் சுகமாய் தோன்றும். பின்னர் அதிலேயே திளைக்கத் தோன்றும். தப்பிக்காவிட்டால் பாவத்தில் மூழ்கி ஆன்மா மரணமடையும்.

இயேசுவின் உயிர்ப்பு அனுபவத்தில் பங்குகொள்ள வேண்டுமெனில் மூன்று விஷயங்கள் நமக்குத் தேவை.

1. முதலாவது தேவை சிலுவையை சுமத்தல் !

சிலுவையைச் சுமக்காமல் இயேசுவின் வழியில் நடக்க முடியாது. இயேசுவின் வழியில் நடக்காமல் இயேசுவின் உயிர்ப்பைச் சந்திக்க முடியாது. சிலுவை என்பது நமது உடல் சார்ந்த சிக்கல்கள் அல்ல. அது நமது பாவம் சார்ந்தது. நமது உலக ஆசைகளை வெறுப்பதே உண்மையான சிலுவை சுமத்தல். ”தன்னலம் துறந்தால்” மட்டுமே அதைச் சுமக்க முடியும்.

கண்கள் நம்மை பாவத்தில் விழத் தூண்டினால், பிடுங்கி எறிய வேண்டும். கைகள் பாவத்தைச் செய்யத் தூண்டினால் வெட்டி விட வேண்டும் என்கிறார் இயேசு. அது தான் நாம் தினமும் சுமக்க வேண்டிய சிலுவை. அதுவே தன்னை வெறுத்து, தன் சிலுவையை சுமக்கும் நிலமை.

தொடர்ச்சி 20ம் பக்கம்....



அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்



# தமிழரும், பண்டிகையும்

தமிழரையும் விழாக்களையும் பிரிக்க முடியாது. பண்டைக்காலத்திலேயே அவன் விழாக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தே வாழ்ந்திருக்கிறான். விழாக்கள் உறவு சிறக்கவும், மகிழ்வு பெருகவும், உற்சாகம் கரைபுரளவும் கொண்டாடப்பட்டன. விழாக்கள் பற்றிய குறிப்பு புறநானூறுலேயே காணப்படுகிறது.



சிலப்பதிகாரத்தில் இந்திர விழா பற்றிய குறிப்பு உண்டு. இது பொங்கலில் ஒரு பாகமாய் இருக்கலாம் என தமிழறிஞர்கள் கருதுகின்றனர். பழையன கழிதலும் புதியன புகுதலுமாய் போகியில் தொடங்கி, புத்தரிசிப் பொங்கலிட்டு, மஞ்சள், கரும்பு, முற்றத்தில் மண்பானை என பொங்கலிட்டது தமிழர் மரபு.

கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்
புல்லாளே ஆய மகள்.
என ஜல்லிக்கட்டின் பூர்வீகம் தமிழரின் விழாக்களில் தான் இருக்கிறது.

தமிழர் விழாக்கள் விவசாயத்தைப் போற்றுதல், இயற்கையைப் போற்றுதல், விருந்தோம்பல் போதித்தல், வீரத்தைப் பேசுதல் என பல விதங்களில் அமைந்திருந்ததாக தமிழர் மரபு கூறுகிறது.

வீடுகளில் கூட்டுக் குடும்பமாய் கும்மாளமடிப்பது, எல்லோருமாய்ச் சேர்ந்து விருந்து உண்பது, புத்தாடை உடுத்து புது சோறு சமைத்து விருந்தினர்க்கும் கொடுத்து மகிழ்வது என உறவுகளை வலுப்படுத்துவதாகவே அமைந்தன தமிழர் விழாக்கள்.

ஈரத்திலும், வீரத்திலும் இருந்த தமிழர் விழாக்கள் இன்று தடுமாறி, தடம்மாறி, தனது அர்த்தத்தை இழந்து வெறும் சடங்காகவும், பத்தோடு பதினொன்றாக வெறும் அடையாளமாகவும், அலுவலகத்துக்கு விடப்படும் ஒரு விடுமுறை நாளாகவும் சுருங்கி விட்டது.

விழாக்கள் என்றாலே தள்ளுபடியில் பொருட்கள் வாங்க கடைவீதியின் வியர்வை நெரிசலில் விழுவது என்றாகி விட்டது. இன்றைய நவீன தொழில்நுட்பம் அந்த தள்ளு முள்ளு நெரிசலைக் கொஞ்சம் இலகுவாக்கியிருக்கிறது. ஸ்மார்ட் போன்களின் தொடு திரைகளைச் செல்லமாய் வருடி வருடி, பொருட்களை வாங்கிக் கொள்கின்றனர் இளைய தலை முறையினர். எந்த விழாவில் அதிக தள்ளுபடி கிடைக்குமோ அந்த விழாக்களுக்கு அதிக மவுசு கிடைக்கிறது. ஷாப்பிங் போகமாட்டேன் என்று சொல்லும் மக்களும், திரையரங்குகளை நோக்கி ஓடுகின்றனர். பொங்கலுக்கு புதுப்படம் ரிலீஸ், தமிழ்ப் புத்தாண்டில் பெரிய ஹீரோ படம் ரிலீஸ் என முன்பதிவு செய்து கொண்டு தங்கள் விழா தினத்தை திரையரங்கின் திரை முகத்தில் விழித்துக் கொண்டிருக்கிறான் தமிழன்.






சேவியர்

திரையரங்குகளுக்கு ஓட தயங்கும் மனிதர்களைக் கட்டிப் போட இருக்கவே இருக்கிறது, ”உலகத் தொலைக்காட்சிகளிலேயே முதல் முறையாக.. திரைக்கு வந்து சில மணி நேரங்களே ஆன.. புத்தம் புதிய திரைப்படம்” எனும் வசீகர அழைப்புகள். அல்லது சமந்தாவும், கரும்பும் எனும் தலைப்பில் இரண்டு உரையாடல் நிகழ்ச்சிகள். தமிழர் தினங்களிலும் ஆங்கிலமே தொலைக்காட்சிகளில் அதிகம் பேசப்படும் என்பது வேறு விஷயம்.

இங்கெல்லாம் ஓடாத மக்களை வலைவிரிக்க மதுக்கடைகள், பார்களும் வழி மேல் விழி வைத்துக் காத்திருக்கின்றன. விழா நாட்களில் குடித்துக் களிப்பவர்கள் விழாமல் நடக்கவே பிரம்ம பிரயர்த்தனம் செய்கின்றனர்.

ஒரு காலத்தில் அர்த்தமும், ஆனந்தமும், அழகும் மிளிர்ந்த தமிழர் விழாக்கள் இன்றைக்கு வெறும் நுகர்வோர் தினமாகவும், கேளிக்கை தினமாகவும், விடுமுறை தினமாகவும் உருமாறிவிட்டது வேதனை !




இழந்து விட்ட அர்த்தத்தை மீண்டெடுக்க வேண்டியது தமிழரின் கடமை. அதற்கு மூன்று விஷயங்களை மனதில் கொள்வோம்.

தமிழர் விழாக்களில் குடும்ப உறவுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்போம். பெற்றோர், பிள்ளைகள், உறவினர்கள் என சேர்ந்தே உணவருந்துவோம், பேசிச் சிரித்திருப்போம் என உறுதியெடுப்போம்.

தமிழர் விழாக்களில் பிறருக்கு உதவிகள் செய்வோம். அன்னதானம் ஆனாலும் சரி, பகிர்தல் ஆனாலும் சரி. விழா நாட்கள் மனதில் நேசத்தையும், பிறருதவிப் பணிகளின் ஆர்வத்தையும் நிரப்புவோம் என உறுதியெடுப்போம்.

தமிழர் விழாக்களில் தமிழையும், தமிழர் பண்பாட்டையும், தமிழர் வரலாற்றையும் நினைவு கூர்வோம்
என உறுதியெடுப்போம்.



எல்லா பயணங்களும் ஒரு புள்ளியின்
நீளல்களே.
முதல் சுவடை எடுத்து முற்றத்தில்
வைக்காதவரை எந்தப் பயணமும்
துவங்குவதில்லை.
எனவே விழாக்களை உண்மை
விழாக்களாக மாற்ற சரியான திசையில்
முதல் சுவடை எடுத்து வைப்போம்.

அடுத்த தலைமுறைக்கு வழியை
ஆயத்தம் செய்வோம்.
காய்கள் நிச்சயம் கனியாகும்

**விதைகள் இங்கே வினியோகம்.**






# நமோ நமோ தாயே நம் ஸ்ரீ லங்கா!

**இந்தியாவில் ஆறரை கோடி தமிழ் மக்கள் வாழ்கின்றனர். ஆனால், அங்கு தமிழில் தேசிய கீதம் பாடப்படுவதில்லை!**





இலங்கையின் தேசிய கீதம் இளமையில் நாம் பாடசாலையில் பாடியது நினைவிருக்கிறதா! தமிழில் அர்த்தம் புரிந்து பாடிய பாடலை 2010 அரத்தம் புரியாத கிந்திப்பாடலைபாடும் நம்மவர் போல் பாடவைத்தது மகிந்த அரசு. இல்லை அர்தம் புரிந்து பாடுங்கள் அதற்கு அனுமதி என்றது இன்றைய இலங்கையின் புதிய அரசு. இந்நிலையில்

இலங்கையில் தமிழில் தேசிய கீதம் பாடுவதற்கு ஆளும் சுதந்திர கட்சி கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இலங்கையில் 1951-ம் ஆண்டில் இருந்து தமிழ் மொழியிலும் தேசிய கீதம் இசைக்கப்பட்டு வந்தது. இதற்கு கடந்த 2010-ம் ஆண்டு ராஜபக்சே அரசு தடை விதித்தது.

தற்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் தமிழிலும் தேசிய கீதத்தை பாட அதிபர் மைத்ரிபால சிறிசேன ஒப்புதல் அளித்தார்.

இந்த முடிவுக்கு ஆளும் இலங்கை சுதந்திர கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரும், அரசியலுக்குள் நுழைவதற்கு முன்னர் இலங்கை ராணுவத்தின் மூத்த கமாண்டராக பதவி வகித்தவருமான சரத் வீரசேகரா எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள அவர், நமது அரசியலமைப்பு சட்டத்தின்படி, தேசிய கீதம் நாட்டின் தாய்மொழியில்தான் இருக்க வேண்டும் என தெளிவாக கூறப்பட்டுள்ளது. மைத்ரிபாலவின் இந்த முடிவு வெறும் 20 லட்சம் தமிழரர திருப்திபடுத்தும் செயலாகும்.

இந்தியாவில் ஆறரை கோடி தமிழ் மக்கள் வாழ்கின்றனர். ஆனால், அங்கு தமிழில் தேசிய கீதம் பாடப்படுவதில்லை என்றார். அதே நேரத்தில் தமிழில் தேசிய கீதம் பாடுவதை அனுமதிப்பதில் தவறில்லை என முன்னாள் மொழிகள் துறை அமைச்சர் வாசுதேவ நானயக்காராவும் ஆதரவு தெரிவித் துள்ளார்.















அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்








# சிங்கப்பூரின் தந்தை லீ குவான் இயூ பிரதமரானபோது சிங்கப்பூரை இலங்கைபோல் ஆக்குவேன் என்று சூழுரைத்தார்!

சிங்கப்பூரின் தந்தை என்று வர்ணிக்கப்படும் லீ குவான் இயூ பிரதமரானபோது சிங்கப்பூரை இலங்கைபோல் ஆக்கிக்காட்டுவேன் என்று சூழுரைத்தார். அச்சமயம் இலங்கை நிர்வாகம் அதிகமான இலங்கைத் தமிழரைக் கொண்டிருந்ததை மறுக்கமுடியாது. இன்று இலங்கையை சிங்கப்பூரை போல் மாற்றுவேன் என்று சூழுரைக்கும் காலமாகிவிட்டது.

காலமான சிங்கப்பூர் தலைவர் லீ குவான் யூவுக்கு உலகத்தமிழர்கள், தமிழக தலைவர்களும் பல அமைப்பினரும் அஞ்சலி செலுத்துகின்றனர். வெளி நாட்டுத் தலைவருக்கு இங்கே இந்த அளவுக்கு இரங்கல் தெரிவிப்பது அபூர்வம். சிங்கப்பூர் ஒரு நாடு என்று சொல்ல முடியாது. அவ்வளவு சிறியது. நகரம்தான். சிட்டி ஸ்டேட் என்கிறார்கள். சென்னையைவிட அளவில் சற்று பெரிது. ஜனத்தொகையில் பாதிதான். வானளாவிய கட்டிடங்கள். பிரமாண்டமான துறைமுகம். மிகப்பெரிய விமான நிலையம். சுத்தமான சாலைகள். தடங்கல் இல்லாத போக்குவரத்து. இதெல்லாம் சிங்கப்பூரின் பெயர் சொன்னதும் நினைவில் கடந்து போகும் விஷயங்கள்.

இவற்றைவிட முக்கியமானது உண்டு. சிங்கப்பூரில் குற்றங்கள் மிக மிக குறைவு. எந்த சட்டத்தையும் எந்த விதையையும் அங்குள்ள மக்கள் மீறுவதில்லை. லஞ்சம் இல்லை. ஊழல் கிடையாது. அரசு நிர்வாக எந்திரத்தின் சக்கரங்கள் அணுவினாடி தடுமாறாமல் துல்லியமாக சுழல்கின்றன.இந்த ஒழுங்கையும் கட்டுப்பாடையும் உலகில் வேறு எந்த நாட்டிலும் காண முடியாது.

சர்வாதிகார மன்னர் ஆளும் நாடானாலும் சரி, ராணுவ ஆட்சி நடக்கும் நாடானாலும் சரி. எனவே பாடப் புத்தக நாடு என்றார்கள். ஏனைய நாடுகள் கனவு மட்டுமே காணக் கூடிய சமூக ஒழுங்கை முழுமையாக நிலைநாட்டியவர் என்பது லீ குவான் யூவுக்கு சூடப்படும் மிகப்பெரிய புகழாரம்.

நாடும் மக்களும் எவ்வாறு இருக்க வேண்டும் என்று கனவு கண்ட பல தலைவர்களை உலக வரலாறு பதிவு செய்திருக்கிறது. அவர்களில் ஒருவர்கூட கனவு நனவாவதை காண உயிரோடு இருந்ததில்லை. நேருவைக் காட்டிலும் எடுத்துக்காட்டு நமக்கு தேவையில்லை. லீ மட்டுமே விதிவிலக்கு. அதனால்தான் உலகமே அவரை கொண்டாடுகிறது. அல்லது அப்படி நமக்கு தோன்றுகிறது.

இந்த மகத்தான சாதனையை சாத்தியமாக்க லீ கொடுத்த விலை என்ன? ஏழ்மையும் முரண்பாடுகளும் மலிந்திருந்த சிங்கப்பூரை உலகின் வளமான நாடாக மாற்றினார் லீ.

தனது நாட்டுக்கு அவர் செய்ததை, ”மக்களுக்கு எதுவும் தெரியாது. நல்லது கெட்டது புரியாது. அவர்களுக்கு எது வேண்டும் எது கூடாது என்பதை நாம்தான் (அதாவது அரசாங்கம். அதாவது பிரதமர்) சொல்லிக் கொடுக்க வேண்டும்.

”எதிர்க்கட்சிகள் இந்த மக்களைவிட மேலென்று கருத முடியாது. சாத்தியம் இல்லாத, நடைமுறைக்கு ஒத்துவராத விஷயங்களை பிடித்து தொங்கிக் கொண்டிருப்பார்கள். அரசாங்கம் நல்லது செய்ய விடாமல் தடுப்பதுதான் அவர்களின் ஒரே வேலை. ”ஊடகங்கள் மக்களின் மூளையை மழுங்கடிக்கும் சாதனங்கள். தனக்கு எல்லாமே தெரியும் என்று நினைத்துக் கொண்டிருக்கும் மக்குகள் அதில் நிறைந்திருக்கிறார்கள். மக்களை முட்டாளாக்கி பணம் பண்ணுவது ஊடக முதலாளிகளின் வர்த்தக மந்திரம். ”ஒரு நாட்டில் வாழும் அனைத்து மக்களும் ஒருவர் பேசுவது அடுத்தவருக்கு புரியும் வகையில் ஒரே மொழியில் பேச வேண்டும். அதுவே அந்த நாட்டின் முதல் மொழியாக இருக்க வேண்டும்.

அவரவர் தாய்மொழியை அடுத்ததாக வைத்துக் கொள்ளலாம்.“ ”பிறப்பால் வரும் ஏற்றத் தாழ்வுகளை யாராலும் நீக்க முடியாது. உலகில் சில இனங்கள் மற்ற இனங்களை காட்டிலும் மேலானவை என்பது அறிவியல் உண்மை. எல்லோரையும் ஒன்றாக பாவிக்க வேண்டும் என்பது எதார்த்த நிலைக்கு மாறானது“.

பயிர் வளராது என்று தெரிந்த நிலத்தில் குழி தோண்டி விதை ஊன்றி நீர் ஊற்றி காத்திருப்பது கால விரயம் தவிர வேறில்லை”. -இப்படிப்பட்ட தீர்க்கமான சிந்தனைகளுக்கு சொந்தக்காரராக வாழ்ந்தவர் லீ. இங்கிலாந்தில் படித்தபோது எல்லோரையும்போல கம்யூனிச சித்தாந்தத்தால் கவரப்பட்டு, சொந்த நாட்டில் தொழிற்சங்க வாதியாக உழைப்பாளிகளின் வழக்குரைஞராக முதல் அடி எடுத்து வைத்த லீ வெகு விரைவிலேயே முதலாளித்துவ இலக்குகளுக்கு புது வடிவம் கொடுத்து பாதை மாறிய நிகழ்வு ஆசிய அரசியலின் திருப்புமுனை.

உலகில் மிக அதிக காலம் பிரதமர் பதவியில் இருந்தவர் லீ. இன்றுள்ள பல தலைவர்களுக்கும் இறந்துபோன பல நாட்டு தலைவர்களுக்கும் ஆசானாக விளங்கியவர்.

இந்தியாவை மிக நெருக்கமாக கவனித்தவர். தமிழர்கள் அறிவாளிகள் என சான்றளித்தவர். ஆனால் பயனற்ற விஷயங்களில் கவனத்தை சிதற விடுவதால் அறிவின் பலனை அனுபவிக்க முடியாதவர்கள் என்றும் கணித்தவர்.





Nimal வீடியோ அன் போட்டோ
Professional Video Movie
கலை விழாக்கள்...
உங்கள் இல்லத்தில் நிகழும் மங்கல நிகழ்வுகள்
எதுவானாலும் மனதோடு நிற்க
நமது ஒளிப்பதிவு கைகொடுக்கும்...
சிறந்த முறையில் உங்கள் மங்கல விழாக்களை
வீடியோ மற்றும் புகைப்படம் எடுக்க எம்மை
நாடுங்கள்
தொடர்புகளுக்கு: கபிலன்
Tel: 0152 33 83 29 55
Tel:01776794261

Akchaya Digital Photography& Decoration
Weddings,Puberty ceremony.Reception,Birthday,Aranketam,Registration
உங்கள் திருமணநாள் பிறந்தநாள்,மற்றும் ஏனைய நிகழ்வுகளுக்கும்
மண்டபம் மணவறை சோடினை,நாதஸ்வரம் பூமாலைகள் கேக் சிற்றுண்டி
குடிபானங்கள் உணவுவகைகள்,மேக்கப் வாகன ஒழுங்கு மற்றும்
ஐயர், அனைத்து தேவைகளையும் செய்து தருகின்றோம்.
Contakt:E.Akilan. 02641 91 68 98 Mobi: 0163 39 40 474









அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்




# நான் ஓர் அகதி

நான் சமீபத்து அகதி.

நண்பன் 16 வருட அதிதி, பொறியியலாளன், (கொழுத்த) மனைவி சீதனம்.

ஒருநாள் சந்தித்துக் கொண்டோம்.

வாடகை வீட்டிலா இருக்கிறாய்?
காசு தருகின்றேன். வீட்டை வாங்கு.
கொஞ்ச வட்டிதான்.

வீடு வாங்கினேன்.

காலம் மாறியது.

வட்டி ஏறியது. வேலை நின்றது.

மகனுக்கு வருத்தம், காசைத் தா மனமறியப் பொய் சொன்னான்.

அற விலைக்கு வீட்டை விற்று தன் பணத்தை எடுத்தான்.

மீண்டும் வாடகை வீட்டில் நான்.

# உயிர்த்தெழவே மரித்தவர்

16ம் பக்கத் தொடர்ச்சி


ஆசைகள் அலைக்கழிக்கையில் மனக் கட்டுப்பாடு எனும் சிலுவையைச் சுமக்க வேண்டும். கோபம் நமது மூக்கில் ஏறி அமர்கையில் கோபம் தாண்டும் சிலுவை சுமக்க வேண்டும். இப்படி, இயேசு வெறுத்த அத்தனை விஷயங்களையும் நாமும் வெறுத்து, அதனால் வரும் இடர்கள் எனும் சிலுவையை "நாள்தோறும்" சுமக்க வேண்டும் என்பது மிக முக்கியம்.

2. இரண்டாவது தேவை சிலுவையில் அறையப்படுதல்

கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்படுதல் என்பது பழைய வாழ்க்கையைச் சிலுவையில் அறைந்து விட்டு புதுப் பிறப்பு எடுப்பது. பழைய மனிதனைக் களைந்துவிட்டு புதிய மனிதனை அணிந்து கொள்ளச் சொல்லும் இறை வார்த்தை அது ! ஆதாமின் வாழ்க்கை பாவத்தின் முள்கிரீடத்தை தலைமுறை தலைமுறையாய் நமது தலையில் சூட்டுகிறது. அந்தப் பாவத்தின் சாபத்தை இயேசுவின் சிலுவை அழிக்கிறது. நமது பழைய மனிதன் சிலுவையில் அறை யப்பட்டுவிட்டான். இனிமேல் புது மனிதனாய் நாம் வாழவேண்டும் என்பதே பைபிள் சொல்லும் வாழ்க்கை.

3. மூன்றாவது தேவை இயேசுவோடு உயிர்த்தல். சிலுவையில் அறையப்பட்டு அப்படியே இறந்து போய்விடுவதில் அர்த்தமில்லை. பழைய பாவங் களை அழித்து விட்டு நமது வாழ்க்கையை அதைவிடப் புதிய பாவங்களுக்குள் நுழைப்பது என்பது மீண்டும் நாம் புதைத்த மனிதனைத் தோண்டி எடுத்து அணிந்து கொள்வது போல.

பேயை விரட்டிவிட்டால் வீட்டைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். இல்லையேல் அதைவிடக் கொடிய ஏழு பேய்கள் வந்து தங்கி வீட்டை சல்லடையாக்கிவிடும். எனவே தான் சிலுவையில் அறையப்பட்டபின் அவரோடு உயிர்த்தெழுதலும் அவசியமாகிறது ! பாவங்கள் அகற்றப்பட்ட இதயத்தை இறைவனின் வார்த்தைகளாலும் வாழ்க்கையாலும் நிரப்ப வேண்டும். அதுவே இயேசுவோடு உயிர்த்தலின் அடையாளம்.



உயிர்த்த இயேசுவின் அனுபவத்தில் இணைவது என்பதும், இயேசுவுக்காய் வாழ்வோம் என்பதும் துறவற வாழ்க்கையல்ல.

வாழும் இடத்தில், பணி செய்யும் இடத்தில் இயேசுவின் அன்பைப் பிரதிபலிப்பதே.

நமது வெளிப்படையான வாழ்விலும், தனிப்பட்ட வாழ்விலும், மறைவான வாழ்விலும் எப்போதும் இயேசுவைப் போல வாழ்வதே ! .

அனைவருக்கும் உயிர்த்த இயேசுவின் பெயரால் நல்வாழ்த்துகள்.





மீண்டும் கட்டப்பொம்மன்...

# சாகா வரம் பெற்றவர்கள் இவர்கள்!

அரச படங்கள் பக்திப்படங்கள் இன்று எவ்வளவு தான் தொழிலநுட்பம் முன்னேறி இருந்தாலும் அன்று எடுத்து வெற்றியீட்டிய படங்களுக்கு ஈடாக எதுவும் இப்போது வருவதில்லை.
இப்போது உள்ள தெமாழில் நுட்பத்தை அளவிற்கு அதிகமாகப்பாவித்து இயல்புத்தன்மையைத் தகர்ப்பதும், காட்சிகள் மாஜாஜாலக் காட்சிக் போல் இருப்பதும் அதீததொழில் நுட்பத்தின் விபரீதம் என்று கூடச்சொல்லலாம்.

கர்ணன் ஆயிரத்தில் ஒருவன் திருவிளையாடல் கப்பலோட்டிய தமிழன் இவையாவும் பிரமாண்ட மான காவியங்களாகும். இவற்றை பில்லா,நான் அவனில்லை, போன்று மீண்டும் எடுக்க முடியாது. வீரபாண்டியகட்டப்பொம்மனாக சிவாஜி கணே சனையும் ஆயிரத்தில் ஒருவனாக மக்கள் திலகத்தையும் நீக்கிவிட்டு பார்க்கமுடியாதபடி நீக்கமற இருப்பவர்கள் அவர்கள். எனவே வீரபாண்டிய கட்டப்பொம்மன் பாத்திரத்தில் இப் போது நடிக்க எவரும் இல்லை. (கமலகாசன் மட்டும் பொருத்தமாக இருப்பினும் கட்டப்பொம் மனாக சிவாஜி மட்டுமே வீற்றிருக்கிறார்.) அப்படி ஒருவர் நடித்தாலும் அவரது நிழலாக சிவாஜியே இருப்பார்.


எனவே கர்ணன் படத்தின் வெற்றியைத் தொடர்ந்து பழைய படங்கள் தூசிதட்டப்பட்டு டியிட்டல் தொழில் நுட்பத்திற்கு மாற்றப்பட்டு மீண்டும் திரைக்கு வருகின்றது. அவ்வாறு அடுத்து வருவது வீரபாண்டிய கட்டப்பொம்மன் படம்.

இப்படத்தில் "நாற்று நட்டாயா நம்குலப் பெண்களுக்கு மஞ்சள் அரைத்துப் பணிவிடை செய்தாயா? மாமனா மச்சானா"

இந்த வசனத்தைப் பேசாத எந்த ஒரு நடிகர் அன்றும் இல்லை இன்றும் இல்லை. ஒரு நடிகனை இனங்காண பேசவைக்கும் வசனங்கள் அவை.

சிவாஜி கணேசன் நடித்து, பி.ஆர்.பந்துலு இயக்கிட மா.பொ.சிவஞானத்தின் வசனத்தில் 1959-ம் வருடம் வெளிவந்த வரலாற்று சிறப்பு மிகுந்த படம், 'வீரபாண்டிய கட்டபொம்மன்.' 56 வருடங களுக்குப்பின் இந்த படம், 'சினிமாஸ் கோப்'பில் புதிய தொழில்நுட்பங்களுடன் புதுப்பிக்கப்பட்டு இருக்கிறது. இதன் 'டிரைலர்' வெளியீட்டு விழா, சென்னை சத்யம் தியேட்டரில் அண்மையில் நடந்தது.
இந்த விழாவில், கவிஞர் வைரமுத்து கலந்து கொண்டு பேசியதாவது:-

"வீரபாண்டிய கட்டபொம்மன் என்ற வரலாற்று கலைப்படத்தின் பெருமையை புரிந்து கொள்ள வேண்டுமென்றால், நிகழ்கால திரையுலகம் குறித்த தகவல் அறிவு வாய்த்திருக்க வேண்டும். இன்று வெள்ளிக்கிழமை வெளியாகும் ஒரு திரைப்படம் மூன்றாம் காட்சியில் நிலைத்திருந்தால், ஆஹா என்கிறார்கள். சனி, ஞாயிறு நீடித்தால், அபாரம் என்கிறார்கள். திங்கட்கிழமையும் மாற்றப்படாமல் இருந்தால், வெற்றிப்படம் என்கிறார்கள்.



இப்படிப்பட்ட ஒரு திரைச்சூழலில் ஒரு படம், 56 ஆண்டுகளுக்கு பிறகு புதிய தொழில்நுட்பத்தோடு தமிழர் வீட்டு கதவுகளை மீண்டும் தட்டுகிற தென்றால், வீரபாண்டிய கட்டபொம்மனின் புகழையும், சிவாஜி கணேசனின் பெருமையையும் உணர்ந்து கொள்ளலாம்.

தமிழ் திரை வரலாற்றின் நெடுங்கணக்கில் எத்தனையோ கதாநாயகர்கள் வந்து போயிருக் கிறார்கள். ஆனால், ஆண்மையை ஆர்ப்பரிக்கும் தமிழ் குரல் சிவாஜிகணேசனைப்போல் வேறு எவருக்கும் வாய்த்ததில்லை. அவரை, 'சிம்மக் குரலோன்' என்று அழைத்தார்கள். சிங்கத்தின் கர்ஜனைக்கு கூட ஒரே தொனிதான் உண்டு. ஆனால், நூறு குரலில் பேசிய சிம்மம், சிவாஜிகணேசன்.

மறைந்த பிறகும் ஒளியாக, ஒலியாக, உருவமாக, அசைவாக வாழ்ந்து கொண்டே இருப்பதால், நடிகர்கள் சாகா வரம் பெற்றவர்கள். பொதுவாக நடிகர்கள் ஒப்பனையை அணிந்து கொண்டு நடிப்பார்கள். ஆனால், சிவாஜியோ ஒப்பனையை அணிந்து கொண்ட பிறகு பாத்திரத்துக்குள் புகுந்து கொண்டு நடித்தவர்.

இந்த வீரபாண்டிய கட்டபொம்மன் விழாவில் இளைய நடிகர்களுக்கும், இந்தியாவுக்கும் ஒரு சேதி இருக்கிறது. பத்து ஆண்டுகளுக்குப் பிறகு திரையிட்டுப் பார்ப்பதற்கு இளைய நடிகர்களுக்கு எத்தனை படங்கள் தேறும்? என்ற கேள்வியை வீரபாண்டிய கட்டபொம்மன் எழுப்புகிறது.

அன்னிய முதலீடுகள் எந்த நாளும் இந்தியாவுக்கு ஆபத்து என்பதைத்தான் கட்டபொம்மன் வரலாறு நமக்கு போதிக்கிறது. இன்னொரு சுதந்திர போருக்கு இந்தியா தள்ளப்பட்டு விடக்கூடாது. இதைத்தான் வீரபாண்டிய கட்டபொம்மன் நிகழ் காலத்தின் கன்னத்தில் அறைந்து சொல் கிறான்."
இவ்வாறு கவிஞர் வைரமுத்து பேசினார்.
இதோ அந்த வீரபாண்டிய கட்டப்பொம்மனின் மீள் வருகைபற்றிய செய்தி....

முதன்முதலில் சிவாஜி நாடக மன்றம் மூலமாக இத்திரைக்காவியத்தை 116 தடவைக்கு மேல் நாடகமாக அரங்கேற்றம் செய்து அதன் மூலம் வசூலான தொகையை கொண்டு பல பள்ளி களுக்கும், கல்லூரிகளுக்கும், மருத்து வமனை களுக்கும் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நன்கொடையாக அளித்தார்.

தொடர்ச்சி 22ம் பக்கம்.

KSR BRIDAL ARTIST

தங்கத்தில் வைரம் பதித்ததுபோல் உங்கள் அழகுக்கு அழகூட்ட எம்மை நாடுங்கள்.மணப்பெண் அலங்காரம். மாலைகள் மற்றும் பூச்செண்டுகள் அனைத்தும் ஓர் இடத்தில்.

**Make up**......
Bridal, wedding, puperty, party
Christian Make up......
**Threading** Eye brow Face.....
**Facial**...........

**hair style**
**hair straightening**
**hair curls**

Video & Foto
E-mail : **kajas.makeup@hotmail.de**
facebook : **KSR Bridal Artist**
**KSR BRidal**
**Tel:02323 39 88 470**

contact : **015236649870**



## 19 ஆவது திருத்தச் சட்டமூலத்தில் ஜனாதிபதி ஆட்சி

3 பக்கத் தொடர்ச்சி...

அத்துடன் பொலிஸ் ஆணைக்குழுக்கள் நியமன விடயத்தில் மாகாணங்களுக்கான தனியான பொலிஸ் ஆணைக் குழுக்களை நியமிப்பது என்ற விடயமும் பிரதானமாக காணப்பட்டது.

ஆனால் 18 ஆவது திருத்தத்தில் இந்த விடயங்கள் முற்று முழுதாக இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பாக 2010ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் உரையாற்றிய சுமந்திரன் 17ஆவது திருத்தத்தில் கூறப்பட்டிருந்த மாகாணங்களுக்கான பொலிஸ் ஆணைக்குழுக்களை நியமிப்பதற்கான மாகாண சபைகளுக் குரிய அதிகாரங்களும் 18 ஆவது திருத்தத்தின் மூலம் இரத்துச் செய்யப்பட்டமை வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு பாதிப்பு என கூறியிருந்தார்.

ஆகவே 19 ஆவது திருத்தத்தை நிறைவேற்ற முன்னர் இந்த விடயங்கள் தொடர்பாக புதிய அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். இந்த திருத்தம் இனப்பிரச்சினைக்கு தீர்வாக இல்லாது விட்டாலும் கூட இவ்வாறான சுயாதீன ஆணைக்குழுக்களை நியமித்தல் எனற் விடயங்களின் மூலமாக குறைந்த பட்சமேனும் வடக்கு கிழக்கில் இராணுவ நிர்வாகம் இல்லாத அரச ஆட்சி ஒன்றை ஏற்படுத்த அல்லது வடக்கு கிழக்கு மாகாண சபைகளை சுதந்திரமாக செயற்பட வைப்பதற்கு வசதியாக அமையும்.

### ஆதரவான தமிழ்க்கட்சிகள்

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு, மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி, மற்றும் முஸ்லிம் கட்சிகள்தான் ஆட்சி மாற்றத்துக்கு காரணம். ஆகவே 19 ஆவது திருத்தத்தின் மூலம் ஏனைய சட்டங்களை மீள புதுப்பித்தல் என்ற தலைப்பில் 13 ஆவது திருத்தத்தில் இருந்து பிடுங்கி எடுக்கப்பட்ட மற்றும் 13இல் இருந்து இன்னமும் நடை முறைப் படுத்தப்படாமல் உள்ள சட்ட விதிகளை செயற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

குறிப்பாக மாகாணங்களுக்குரிய காணி, பொலிஸ் அதிகாரங்களை செயற்படுத்த 19 ஆவது திருத்தத்தின் மூலம் ஏற்பாடு செய்ய முடியும் என சட்ட அறிஞர் ஒருவர் கூறியிருக் கின்றார்.

## மீண்டும் கட்டபொம்மன்...

21 பக்கத் தொடர்ச்சி...

16-05-1959ஆம் ஆண்டு தென்னகமெங்கும் திரையிடப்படுவதற்கு 6 நாட்கள் முன்னரே 10-05-1959ஆம் நாளன்று இங்கிலாந்து நாட்டின் தலைநகரம் லண்டனில் சிறப்புக் காட்சியாக திரையிடப்பட்டது. இச்சிறப்புக் காட்சியில் லண்டன் வாழ் தமிழ் மக்கள் கலந்துகொண்டு களிப்புற்றனர். விழாவிற்கு தலைமை ஏற்றவர் பண்டிட் ஜவஹர்லால் நேருவின் சகோதரியும் நம் நாட்டின் முதல் பெண் வெளிநாட்டு தூதுவர் என்ற சிறப்பு பெற்ற திருமதி. விஜயலட்சுமி பண்டிட் ஆவார்.

வீரபாண்டிய கட்டபொம்மன் படத்தில் ஒரு காட்சி


1960ஆம் ஆண்டு எகிப்து நாட்டின் தலைநகரம் கெய்ரோவில் நடைபெற்ற ஆசிய ஆப்பிரிக்கத் திரைப்படவிழாவில் ஆசியாவின் சிறந்த நடிகர் என்ற பட்டத்தை சிவாஜி கணேசன் பெற்றார். மேலும் சிறந்த இசை, சிறந்த திரைப்படம் என மூன்று உயரிய விருதுகளை வாங்கி தமிழகத்திற்கு பெருமை சேர்த்தார்.


இரு பெரிய கண்டங்கள் உள்ளடக்கிய விழாவில் விருது வாங்கிய முதல் தமிழ்த் திரைப்படமாகவும், முதல் இந்தியப் திரைப்படமாகவும், முதல ஆசியத் திரைப்படமாகவும் வீரபாண்டிய கட்டபொம்மன் திகழ்கிறது.

தற்போது வீரபாண்டிய கட்டபொம்மன் திரைப்படம், சாய் கணேஷ் பிலிம்ஸ் பி.ஸ்ரீனிவாசலு வழங்க புதிய தொழில்நுட்ப உதவியுடன் மீண்டும் நம் கண்களுக்கும் காதுகளுக்கும் விருந்தாக விரைவில் திரையில் வெளிவரவுள்ளது.











# Teen Age பதின்ம வயதுகளில் தூக்கம்

டாக்டர் எம்.கே.முருகானந்தன்

## மருத்துவ குறுந் தகவல்

தூக்கம் அனைவருக்கும் அவசியமானது. பச்சிளம் பாலகர் முதல் பல் விழுந்த தாத்தாக்கள் வரை எல்லோருக்குமே போதுமான தூக்கம் இல்லாவிடத்து பிரச்சனைகள் எழும் அதே போல பள்ளிக்கூடம், விளையாட்டு, ரியூசன், நண்பர்கள் கூட்டு என பொழுது பூராவும் ஓடித் திரியும் பதின்ம வயதினருக்கும் மிக மிக அவசியமாகும்.



மனதை ஒரு முகப்படுத்துவது சிரமமாகலாம். இதனால் பாடங்களை செவிமடுப்பது, கற்பது, முக்கிய விடயங்களையும் பாடங்களையும் நினைவில் நிறுத்துவது, சிக்கல்களைத் தீர்ப்பது போன்றவை சிரமமாகலாம்.

முறையற்றதும் அடாத்தாததுமான செயற்பாடுகளில் அவர்கள் ஈடுபடலாம்.

ஆரோக்கியமற்ற உணவு முறைகளை கடைப்பிடிப்பதும் அதனால் எடை அதிகரித்து உடல் குண்டாகலாம்.

அடிக்கடி கோப்பி குடிப்பதில் ஆரம்பித்து புகைத்தல், மதுபானம் போதைப் பழக்கங்கள் என தவறான வழிகளில் செல்வதற்கான சாத்தியங்கள் அதிகம்.



தூக்கத் தியக்கத்தால் உபகரணங்களை தவறாகக் கையாள்வது, வாகனம் ஓட்டுவதில் பிரச்சனை போன்றவை ஏற்படலாம்.

## முகப்பருக்கள் தோன்றுவது அதிகமாகலாம்.

பதின்ம வயதினருக்கு பொதுவாக 9 மணிநேரத் தூக்கம் வேண்டும் என தூக்கம் தொடர்பான அறிஞர்கள் கூறுகிறார்கள். ஆகக் குறைந்தது 8 ½ நேரத் தூக்கமாவது வேண்டும். ஆயினும் பல பிள்ளைகளுக்கு இது கிடைப்பதில்லை.

எமது உடலின் உள்க் கடிகாரம் எனப்படும் உசைஉயனயைெ சாலவாஅள யின்படி குழந்தைகள் பொதுவாக இரவு 8-9 மணிக்கு தூங்கச் செல்வார்கள். ஆயினும் பதின்ம வயதில் தூக்கம் வருவதற்கு இரவு 11 மணி செல்லலாம் என்பதை பெற்றோர்கள் கவனத்தில் எடுக்க வேண்டும். அதன் பின் 8-9 மணி நேர நிம்மதியான தூக்கம் அவர்களுக்குக் கிடைக்கச் வழி செய்யுங்கள்.

11 -12 மணி படி படி என நச்சரித்து மீண்டும் 4 மணிக்கு எழுப்பி 'காலையில் படித்தால்தான் நினைவிருக்கும்" என்று சொல்லாதீர்கள். மண்டை ஓட்டிற்குள் எதுவும் மிஞ்சாது. பூச்சியம்தான் பரீட்சையில் கிட்டும்.

போதுமான தூக்கத்தைக் கொடுங்கள்



# ஆல்ப்ஸ் மலையில் விழுந்து நொறுங்கிய ஜெர்மன் விமானம்!

## 16 மாணவர்கள் உட்பட 150 பேர் பலி







நம்மவர்கள் அதிகம் பயணம் செய்யும் விமானங்கள் இரண்டு: ஒன்று ஈசியெற் (Easy Jet) அடுத்து யேர்மன் விங்ஸ் (Germany wings) இதனை தமிழர் விமானம் என்றும் சொல்வதுண்டு. கிட்டமுட்ட மூளாய் - பருத்தித்துறை தட்டிவான் போல் சிறியவிமானம் சிறிய கட்டணம். ஆனால் பலமான பாதுகாப்பு. இருந்தும் தட்டுப்பட்டு வீழ்ந்துவிட்டது!

அது என்ன கொஞ்சத் தூரம் கொஞ்சநேரப் பயணம்தானே! கண்மூடி விழிக்கமுன்னம் விமானம் இறங்கிவிடும், என்று நாம் சொல்லிச்சொல்லி அடிக்கடி பறக்கும் விமானம் இது.

இப்போது புரிகிறது எவ்வளவு தூரம் என்பதும் நேரம் என்பதும் முக்கியமல்ல எவ்வளவு உயரம் என்பதே அதிமுக்கியம்.

ஸ்பெயினிலிருந்து 150 பயணிகள் மற்றும் 6 விமான நிறுவன ஊழியர்களுடன் சென்று கொண்டிருந்த ஏ320 ஏர்பஸ் விமானம், பிரான்சின் ஆல்ப்ஸ் மலையில் விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானது. இதில் விமானத்தில் இருந்த 148 பேரும் உயிரிழந்தனர். ஸ்பெயினின் பார்சிலோனா நகரில் இருந்து ஜெர்மனியின் Dusseldorf நகருக்கு இந்த விமானம் கிளம்பியது. பிரான்ஸ் நாட்டில் அது ஆல்ப்ஸ் மலைத் தொடரின் தென் பகுதியின் மீது பறந்து

கொண்டிருந்தபோது, Alpes de Hautes Provence என்ற இடத்தில் விமானம் விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானது. நைஸ் நகருக்கு 100 மைல் தொலைவில் விமானம் விழுந்துள்ளது.

ஆல்ப்ஸ் மலையானது மொராக்கோ முதல் ஸ்லோவேனியா வரை பரந்து விரிந்துள்ள பெரிய மலைத் தொடராகும். இதில் பிரான்சிஸ் உள்ள ஆல்ப்ஸ் மலைத் தொடரில்தான் விமானம் விழுந்துள்ளது. விபத்தில் சிக்கிய விமானம் பிரபலமான லூப்தான்ஸா நிறுவனத்தின் துணை நிறுவனமான ஜெர்மன் விங்ஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான 4யு 9525 என்ற விமானமாகும். இந்த விமான நிறுவனம் நம்ம ஊர் பஸ் போல குறைந்த கட்டண விமானமாகும். பிரெஞ்சு அதிபர் பிரான்காய்ஸ் ஹோலன்ட் விமான விபத்தை அதிகாரப் பூர்வமாக அறிவித்துள்ளார்.

விபத்து குறித்து அவர் கூறுகையில், விபத்தில் சிக்கிய யாரும் உயிர் பிழைத்திருக்க வாய்ப்பில்லை. விபத்து நடந்த இடத்தை அடைவதும் கடினமானது என்றார்.

அந்த விமானத்தில் 174 பேர் வரை பயணிக்க முடியும். இருப்பினும் விபத்தில் சிக்கிய விமானத்தில் 150 பயணிகளும், 6 ஊழியர்களும் இருந்துள்ளனர். 16 பாடசாலை மாணவர்களும் இந்தவிபத்தில் பலியாகினர்.

விமானம் பார்சிலோனாவிலிருந்து கிளம்பிய 80 நிமிடங்களில் ரேடாரின் கண்ணிலிருந்து தப்பியுள்ளது. .அதன் பின்னர் அது என்ன ஆனது என்று தெரியாமல் இருந்தது. இந்த நிலையில்தான் அது ஆல்ப்ஸ் மலையில் விழுந்து விபத்துக்குள்ளானது தெரிய வந்தது. கடல்மட்டத்தில் இருந்து 2000 மீற்றர் உயரத்தில் இந்த விபத்து நடந்துள்ளது.

## மோதியதா மோதப்பட்டதா?

விமானத்தின் கருப்பு பெட்டி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதில் விமானி அறையில் நடந்த பேச்சுவார்த்தை பதிவாகியுள்ளது. அதன்படி விமானம் விபத்துக்குள்ளாகும் முன்பு விமானி ஒருவர் விமானியின் அறையில் இருந்து வெளியே சென்றுள்ளார்.

இது குறித்து விசாரணை அதிகாரி ஒருவர் கூறுகையில், வெளியே சென்ற விமானி மீண்டும் அறைக்குள் நுழைய கதவை லேசாக தட்டியுள்ளார். ஆனால் பதில் இல்லை. பின்னர் கதவை வேகமாக தட்டியுள்ளார். அப்போதும் பதில் இல்லை. அறைக்குள் இருந்த விமானி பதிலே அளிக்கவில்லை. அதில் இருந்து விமானம் விழுந்து நொறுங்கியது வரை வேறு எந்த சப்தமும் பதிவாகவில்லை. அறைக்குள் இருந்த விமானி ஏன் கதவை திறந்துவிடவில்லை என்பது குழப்பமாக உள்ளது.

விமானி எதற்காக அறையை விட்டு வெளியே சென்றார் என்றும் தெரியவில்லை என்றார். இருப்பினும் இந்த விமான விபத்திற்கு தீவிரவாதிகள் காரணமாக இருக்க முடியாது என்று பிரான்ஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். விமானத்தின் கேப்டன் 10 ஆண்டுகள் அனுபவம் வாய்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

உங்கள் தாய் மொழியில்....
HK Hammacher
வாகனச் சாரதி பயிற்சி நிலையம்



ஆங்கிலம், யேர்மன், பிரஞ், துருக்கி மொழிகளில் வகுப்புக்கள் உண்டு. பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள் கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்து கற்பிக்கப்படும்.
தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651
MPU ASF ASP இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!




ஆதிவாசி லீடர் கனக துர்க்கா பூஜாரி
பண்டித் லட்சுமன் ராஜ்
கருமாரி அம்மன் துணை
முகத்தைப் பார்த்து உங்கள் எதிர்காலத்தை கணிப்பார்
அத்தோடு கை ரேகையும் பார்க்கப்படும்
FACE READING
வியாபாரங்கள் - எதிரிகள் - உடல்நிலை - வேலை - குழந்தையின்மை
திருமணம் - பணம் - குடிபோதை - காதல் - விவாகரத்து
வழக்குகள் - கண்திருஷ்டி - குடும்ப ஒற்றுமை - படிப்பு
வாகனப் பொருத்தம் - மற்றும் பல... பிரச்சனைகளுக்கு தீர்வு காணலாம்
மந்திரம், தந்திரம், காத்துக்கறுப்பு, பிடைபிசாசு என்ன இருந்தாலும் நிவாரணம் செய்து கொடுக்கப்படும்
பேசும் மொழிகள்: தமிழ்
வாரத்தில் 7 நாட்களும் 10:00 முதல் 20:00 மணி வரை சந்திக்கலாம்
private & confidential




TP-0049(0)23133897290
Adlerstr.30,44137 Dortmund-Germany
0152 1201 63 56 // 0152 1394 6833

நீங்கள் புதிய மனை அமைக்கவோ, கடன் பெறவோ, எதுவானாலும் உடனடி உதவி எங்களிடம் உண்டு
சுபா(Schufa) தடங்கல் இருந்தாலும் உங்கள் புதிய முயற்சிக்கு நாங்கள் இருக்கின்றோம்!
தற்போதைய வீட்டுக்கடனை அல்லது (தனிநபர்)கடனை குறைந்த வட்டிக்கு மாற்றுதல்
"Umschuldung"



வீட்டுக்கடன் 1,6% வட்டிவீதத்திலிருந்து
உங்கள் சொந்த வீட்டை புதிய தரத்திற்கு மாற்ற விரும்பினால், 60.000€ வரை உடனடி கடன் உதவி!
தொடர்புகளுக்கு:
gothab Finance
Rheinische Str. 72, 44137 Dortmund
0231/53375365
0231/13029415
0231/10876361
0152/53961138
Th. Gobinath



# வண்டுகளை நம் எண்ணப்படி இயக்கலாம்!

பறவைகள் வானில் பறந்து வசந்த கீதம் இசைக்கின்றன. வண்டுகள், பூச்சிகள் அந்தரத் தில் மிதந்து ஆனந் தத்தில் ரீங்காரமிடுகின்றன. அவைகள், நாம் இந்த உலகை காணாத கோணத்தில் கண்டு ரசிக் கின்றன.

மனிதன் பறவைபோல பறக்க விரும்பியதன் விளைவாகவே விமானம் உருவாக்கினான். நாம் ஆறறிவுடன் மேம்பட்டு இருந்தாலும், இதுபோன்ற சின்னச்சின்ன உயிரினங்களின் பின்னால் பயணித்து அறிந்து கொண்ட விஷயங்கள்தாம் அதிகம்.

பெர்கிலி நகரில் இயங்கும் கலிபோர்னியா பல்கலைக் கழக கிளை மற்றும் சிங்கப்பூர் நான்யாங் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் ஆகியவற்றின் விஞ்ஞானிகள் குழு. தற்போது வண்டுகளை பின்தொடர்ந்து புதிய ஆராய்ச்சியில் ஈடுபடுகிறார்கள். அவர்கள் வண்டுகளின் எண்ணத்தை கட்டுப்படுத்தி அவற்றை தங்கள் விருப்பப்படி இயங்க வைக்கும் முயற்சியில் ஈடுபட்டு உள்ளனர். அதில் குறிப்பிடத்தக்க வெற்றியும் கண்டுள்ளனர்.

நுண்ணிய எலக்ட்ரானிக் கருவி ஒன்றை, பெரிய அளவுடைய வண்டுகளின் முதுகில் பொருத்தி இந்த ஆய்வை மேற்கொண்டனர். இதன் மூலம் அவை எங்கிருக்கிறது என்பதை அறிந்து கொள்ள முடியும். அத்துடன் அவற்றை நாம் இருக்கும் இடத்திற்கு வரவழைக்க இந்த எலக்ட்ரானிக் கருவியின் வழியே கட்டளை கொடுக்க முடியும்.

அந்த நுண்கருவியில் மைக்ரோ கண்ட்ரோலர், வயர் இணைப்பற்ற டிரான்ஸ்மிட்டர், ரிசீவர், 3.9 வோல்ட் மைக்ரோ பேட்டரி ஆகியவை இணைக்கப்பட்டு உள்ளன. 6 இழை வடிவிலான மின்கடத்திகள், வண்டின் உடலில் தசைப் பகுதியுடன் இணைக்கப்பட்டிருக்கும்.

இந்த கட்டுப்பாட்டுக் கருவிக்கு நாம் அனுப்பும் கட்டளைகள் மின்கடத்திகள் வழியாக வண்டுகளின் உடலுக்கு கடத்தப்பட்டு அவற்றை நமது கட்டளைக்கு கட்டுப்பட்டு செயல்பட வைக்கிறது. இதன் மூலம் பறக்கும் வண்டுகளை நிற்கச் செய்யவும், இடது- வலது என நாம் விரும்பும் திசையில் திரும்ப வைக்கவும், பறக்கச் செய்யவும் கட்டளை கொடுக்க முடியும்.

இந்த ஆராய்ச்சியில் குறிப்பிடத்தக்க வெற்றி கிடைத்துள்ளது. எனவே இதே தொழில்நுட்பத்தின் மூலம் பூச்சியியல் ஆராய்ச்சிகள் முன்னேற்றம் காணும். வண்டுகள் மற்றும் பிற உயிரினங்களின் வாழ்விடங்கள், வாழ்க்கை முறைகளை துல்லியமாக தெரிந்து கொள்ள முடியும்.

“இவை மட்டுமல்லாமல், நிலநடுக்கம், புயல் போன்ற பேரிடர் காலங்களில் மீட்பு பணிகளுக்கு இந்த தொழில்நுட்பம் பெரிதும் கைகொடுக்கும். சிறிய பிளவுகள், துளைகளின் வழியே வண்டுகளை அனுப்பி, விபத்தில் சிக்கியிருப்பவர் களின் நிலையை அறிந்து மீட்புப்பணி மேற்கொள்ள உதவும்“ என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

வேவு பார்த்தல் போன்ற எதிர்மறை பணிகளுக்கு வண்டு களை பயன்படுத்தாதவரை இது வரவேற்கப்பட வேண்டிய ஆராய்ச்சிதான்!

நன்றி:தினத்தந்தி

# சிங்கப்பூரில் தமிழை ஆட்சிமொழியாக அறிவித்தவர்!


## சிங்கப்பூர் முதல் பிரதமர் லீ குவான் யூ மரணம்...



சிங்கப்பூர் தேசத்தை நிறுவிய, லீ குவான் யூ மரணத்துக்கு நாம் தமிழர் கட்சி இரங்கல் அறிக்கை வெளியிட்டிருக்கிறது. இதில், செந்தமிழன் சீமான் கூறியிருப்பதாவது:

“சிங்கப்பூரின் தந்தை“ எனப் போற்றப்படும் லீ குவான் யூ அவர்களின் மரணச் செய்தி 23.03.2015 பிற மனிதர்களை நேசிக்கும் மனிதநேய மாந்தர்கள் ஒவ்வொருவரின் இதயத்தையும் இடியாகத் தாக்கி இருக்கிறது. உலக நாடுகளுக்கே முன்மாதிரி தலைவனாக விளங்கிய லீ குவான் யூ தமிழர்களின் மனங்களிலும் நீக்கமற இடம் பிடித்தவர். தமிழைச் சொந்த மொழியாகக் கொண்ட தமிழர் நிலத்திலேயே தமிழ் ஆட்சிமொழியாக அறிவிக்கப்படாத நிலையில், சிங்கப்பூர் தேசத்தில் தமிழை ஆட்சி மொழியாக அறிவித்த பெருமகன் லீ குவான் யூ அவர்கள். 31 ஆண்டுகளாக சிங்கப்பூரில் ஆகச்சிறந்த ஆட்சி புரிந்த லீ குவான் யூ அவர்கள் தமிழர்களின் நலனுக்கான அத்தனை ஆக்கபூர்வங்களையும் செய்துகாட்டியவர். சிங்கப்பூரில் தமிழை ஆட்சிமொழியாக அறிவித்தபோது மலையாளிகள் எங்கள் மலையாள மொழிக்கும் அத்தகைய அங்கீகாரத்தை வழங்க வேண்டும் என வற்புறுத்தினார்கள். அதற்கு, “சிங்கப்பூர் என்கிற தேசம் அமைய போராடியவர்கள் தமிழர்கள். அதற்கான நன்றிக்கடனாகவே நான் தமிழை ஆட்சி மொழியாக்கி இருக்கிறேன்“ என வெளிப்படையாகச் சொல்லி தமிழர்களின் இதயங்களை ஆட்கொண்டவர் லீ குவான் யூ அவர்கள். ஈழப் போராட்டத்திலும் தமிழர்களின் பக்கம் நின்று அமைதிக்கும் தீர்வுக்கும் வலியுறுத்தியவர். ஆங்கிலேயப் பிடியில் இருந்து விடுதலை பெற மட்டும் அல்லாமல், மலேஷியாவிலிருந்து சிங்கப்பூரை தனித்துப் பெறவும் போராடி வெற்றிகண்டவர் லீ குவான் யூ அவர்கள். எவரோடும் தனிப்பட்ட பகைமை பாராட்டாமல் அதே நேரம் நமக்கான உரிமைக்குப் போராடும் நேர்மையையும் சக்தியையும் நிரூபித்து உலகுக்கே முன்னுதாரணமாக விளங்கிய லீ குவான் யூ அவர்களின் மறைவுக்கு உலகத் தமிழர்களின் சார்பாக நாம் தமிழர் கட்சி வீர வணக்கம் செலுத்துகிறது. தமிழுக்காகவும் தமிழர் நலனுக்காகவும் வேறுபாடுகள் கடந்து போராடிய இந்தத் தலைவனை வாழும் காலம் வரை நம் இதயத்தில் தூக்கிச் சுமப்பதே தமிழர்கள் ஒவ்வொருவரும் அவருக்குச் செய்யும் உண்மையான வீர வணக்கமாக இருக்கும்.

Kaneen electronics
15வதுஆண்டு நிறைவை முன்னிட்டு சகல
மலிவு விற்பனை!
Internet-sat,Receiver,Camera-Alam
கருவிகள் மாபெரும் மலிவு விற்பனை
அனைத்து தொலைக்காட்சியில் உங்கள் விளம்பரங்கள் இடம்பெறவேண்டுமா! மற்றும் உங்கள் கலைநிகழ்ச்சிகள் பெருவிழாக்கள் திருவிழாக்கள் ஒளிபரப்பவேண்டுமா!எம்மை நாடுங்கள்.
Tel: 02053 423 740 Fax: 2053 423 741
Schevenhoferweg-24
42111 Wuppertal
Mobil: 0172 2931266- info@ kaneenelectronics.de
www.kaneenelectronics.de

VTM MiniMarkt und Kiosk
துரித பணமாற்றுச் சேவை!

Ria MONEY TRANSFER
இலங்கை, இந்தியா உட்பட உலகின் எந்தப்பாகஙளுக்கும்
அதிகூடியவீதத்தில் பணப்பரிமாற்றம் செய்ய இன்றே நாடுங்கள்
NSB,BOC,HNB போன்ற வங்கிகளில்
நேரடியாகவும் மற்றும் அனைத்து
வங்கிக்கணக்குகளுக்கும் பணமாற்றம் செய்யலாம்.
மாபெரும் மலிவு விற்பனை!
உலருணவுப் பொருட்கள்
கடலுணவுப்பொருட்கள்
உடன் மரக்கறி வகைகள்

Neudorferstr 173
47057 Duisburg
inh:Pon.Vijayakumar
Tel 0203/98418781
E.mail :- vtm2012@hotmail.de

அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்

# கனடா உதயன் 9ஆவது சர்வதேச விருது விழா 2015



கனடா உதயன் 9ஆவது சர்வதேச விருது விழாவினை மார்ச் 8, 2015இல் மார்க்கம் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றுள்ளது. இந்த விழாவின் முக்கியமான நோக்கம் திறமைக்கு வணக்கம் செய்யவேண்டும் என்ற பத்திரிகை ஆசிரியரின் பற்றுறுதி காரணமாகும்.இதனால்தான் கனடா, தமிழ்நாடு, தாயகம், ஐரோப்பா என விசாலமடைந்து அங்கிருந்து பல்வேறு கலைஞர்களும், அறிஞர்களும் இங்கு அழைக்கப் பட்டனர். இவ்வாறு இதுவரை இங்கு வந்த வெற்றியாளர்களின் பட்டியல் மிக நீளமானது.

### உதயன் சிறப்பு விருது ஐரோப்பா! கல்லாறு சதீஷ் பெற்றார்!.

ஐரோப்பாவின் சுவிஸ்நாட்டிலிருந்து விருது பெற வருகை தந்தவர் கல்லாறு சதீஷ். இவரைப்பற்றிய அறிமுக விளக்க உரையை திரு.ஜெகதீஸ்வரன் பூபாலசிங்கம் நிகழ்த்தினார். உதயன் சிறப்பு விருது ஐரோப்பா - 2015க்கு கல்லாறு சதீஸ் என்னும் அருள்ராசா நாகேஸ்வரன் மட்டக்களப்பு - கோட்டைக் கல்லாறில் பிறந்து.1990இல் சுவிஸ் நாட்டிற்கு புலம்பெயர்ந்து பல உயர்பதவிகளை பெற்றவர். பத்துக்கு மேற்பட்ட விருதுகளை பெற்று அங்கு பல நூல்களை வெளியிட்டு வைத்தவர். ஜேர்மனி, தமிழ்நாடு போன்ற பல நாடுகளுக்கு சென்று இலக்கிய பாலம் கட்டியவர். இவருக்கு இச்சிறப்பு விருது கிடைத்துள்ளது. இறுதியாக ஒரு முக்கிய நிகழ்வு இடம்பெற்றது. தமிழ்நாட்டில் சுப்பர் சிங்கர் பாட்டுப்போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற செல்வி ஜெசிக்கா யூட் கௌரவம் பெற்றார். சனிக்கிழமை பகல் ரொறோன்ரோவுக்கு வந்த அவரை மறுநாள் மேடையில் ஏற்ற சாதுரியம் உதயன் நிறுவனத்திற்கு உரியதாயிற்று.

விருது பெறும் பெருந்தகையினர்:

1. திரு. ஈழத்து சிவானந்தன் அவர்கள்
2. கலைமாமணி ஏர்வாடி எஸ். ,ராதாகிருஷ்ணன் அவர்கள்
3. திரு. செல்வமாணிக்கம் பிரபாகரன், திருமதி ஜோதீஸ்வரி பிரபாகரன் அவர்கள்
4. திரு. குலா செல்லத்துரை அவர்கள்
5. திரு. கல்லாறு சதீஷ் அவர்கள்
6. திரு. தோமஸ் எஸ். சராஸ் அவர்கள்

உதயன் பிரதம ஆசிரியர் திரு. லோகேந்திரலிங்கம் அவர்களைப் பற்றி ஒன்று சொல்லவேண்டும். மனிதர் சூரியனின் சொந்தக்காரராக ,இருக்கவேண்டும். அத்தனை காலம் தவறாமை, சுறுசுறுப்பு! அதனால்தான் பத்திரிகைக்கு “உதயன்” என்று பெயர்சூட்டினாரோ? மகத்தான விழாவொன்றை வெற்றிகரமாக நடத்தியுள்ளார்.


வவுனியாவில் காணி விற்பனை!

60 Acres of Private Land for Sale

வவுனியாவில் காணி விற்பனைக்கு உண்டு!தாயகத்தில் வவுனியாவில் தமிழ் பகுதியில் 60 ஏக்கர் வயல் தோட்டம் செய்யக்கூடிய, நீர் வளமுள்ள குடி இருக்கக்கூடியதுமான காணி விற்பனைக்கு உண்டு.

Only Genuine Buyers call.Preferable Charitable organization Tel: 0044 79 32 45 64 64 - K.Ramanathan



பரத நாட்டிய அரங்கேற்றம்






இராஜேஸ் நர்த்தனாலய ஆசிரியர் பரதசூடாமணி திருமதி துஷ்யந்தி ஜெகதீஸ்வரன் அவர்களின் மாணவனும். திரு.திருமதி சிவராஜா தெய்வானை தம்பதிகளின் செல்வப்புதல்வனுமான நாட்டியகலாஜோதி செல்வன் தனுசன் சிவராஜா (Dip in Dance)அவர்களின் பரத நாட்டிய அரங்கேற்றம் 09.05.2015 சனிக்கிழமை மாலை 16.00 மணிக்கு நடைபெறவுள்ளது. விழாவிற்கு வருகைதந்து செல்வனை ஆசீர்வதித்து ஏகும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.திருமதி சிவராஜா தம்பதிகள்

விழா மண்டபம்
Jahn Halle
Jahn Platz 1 ( Alteland Str)
50171 Kerpen/Germany

0152 14 35 74 96



திருக்கணித ஜோதிடம்

ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி







சிவஶ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450





உங்களுக்கு தேவையான அனைத்து விதமான வரைகலை(Graphic Design) சேவைகளையும், அனைத்து அச்சுப்பதிப்புக்களையும் நாங்கள் செய்து தருகின்றோம்.
(அலுவலகத்திற்குரிய அச்சுப்பதிவேடுகள், துண்டுப் பிரசுரங்கள், அரங்கேற்ற மலர்கள், சுவரொட்டிகள், நினைவு மலர்கள்... மற்றும் பல)

இணையத்தள வடிவமைப்பு
உங்கள் வர்த்தக ஸ்தாபனத்துக்கேற்றவாறு இணையத்தள வடிவமைப்புக்கள்...

நேர்த்தியான வரைகலை * தரமான அச்சுப்பதிப்பு
நியாயமான விலை * விரைவான சேவை

தொடர்புகளுக்கு:
Th. Gobinath
Rheinische Str. 72, 44137 Dortmund
0152/53961138
0231/10876361
0231/13029415




யாழ். மாவட்டத்தின் சனத்தொகையில் 50 வீதமானவர்கள் பெண்களாக உள்ளனர் என யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் மகளிர் தின நிகழ்வுகள் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. அதில் அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தின் மொத்த சனத்தொகை 6 இலட்சத்து 15 ஆயிரமாக உள்ள நிலையில் பெண்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சமாக உள்ளது.

எனவே யாழ். மாவட்டத்தைப்பொறுத்தவரையில் மொத்த சனத்தொகையில் 50 வீதமானவர்கள் பெண்களாகவே உள்ளனர்.எனவே இங்கு ஆண்களது எண்ணிக்கையும் பெண்களின் எண்ணிக்கையும் சமனாகவே உள்ளது.

இதேவேளை, கடந்த கால போரினாலும் இயற்கையினாலும் கணவனை இழந்தவர்கள் என 28 ஆயிரத்திற்கு மேற்பட்ட பெண்கள் வாழ்ந்து வருகின்றனர்.

எனவே இவர்களில் வாழ்வாதாரத்தில் மிகவும் பின்தங்கியவர்களாக இருப்பவர்களுக்கு மருதங்கேணி பிரதேச செயலகத்தின் ஊடாக இல்லம் அமைக்கப்படவுள்ளதுடன் அவர்களுக்கான வதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# யானைகளால் கன்னி வெடியை கண்டறிய முடியும்: விஞ்ஞானிகள் தகவல்

நிலத்தில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் கன்னி வெடிகளை யானைகள் தங்கள் மோப்ப சக்தியை பயன்படுத்தி கண்டுபிடிப்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

பொதுவாக வெடிப்பொருட்களை கண்டறிவதற்கு போலீஸ் மற்றும் ராணுவத்தில் நாய்கள்தான் பயன்படுத்தப்படும். ஏனெனில், அவற்றை கண்டுபிடிக்கும் திறன் அதற்கு அதிகமாக காணப்படுகிறது.

தென் ஆப்பிரிக்கா நாடான அங்கோலாவில் நடைபெற்ற போரின்போது அங்கிருந்து வெளியேறிய யானைகள் மீண்டும் தங்கள் காட்டிற்கு திரும்பியபோதுதான் யானைகளாலும் கன்னி வெடிகளை மோப்பம் பிடிக்க முடியும் என்பதை கண்டறிந்தார்கள்.

கண்னி வெடிகளை மறைத்து வைத்து யானைகளை கொண்டு கண்டுபிடிக்கும் சோதனையை தென் ஆப்பிரிக்காவின் வடக்கு தலைநகரான பிரிட்டேரியாவில் விஞ்ஞானிகள் மேற்கொண்டார்கள்.

இதில் யானைகள் 96 சதவீதம் மிக சரியாக அசிட்டோன் வெடிப்பொருள் நிரப்பப்பட்ட பைகளை கண்டுப்பிடித்தன. இந்த பரிசோதனைகளுக்கு அமெரிக்க ராணுவம் பெரிய அளவில் நிதியுதவி செய்துள்ளது.

இதுபற்றி அமெரிக்க ராணுவ அதிகாரி கூறும்போது, யானைகளை போர் நடைபெறும் இடங்களில் பயன்படுத்தும் நோக்கம் இல்லை. ஆனால் அது பயன்படுத்தும் வழிமுறைகளை கண்டறிந்து அவற்றை நவீன சென்சார்



தொழிற்நுட்பத்தில் பயன்படுத்த முடிவு செய்யப் பட்டுள்ளதாக தெரிவித்தார்.

# இசையால் செவித்திறன் பாதிப்பு!



தற்போது பலரும் காதுக்குள் செருகிய ஹெட்போனுடன்தான் அலைகிறார்கள். ஆனால் ஒரு நாளில் ஒரு மணி நேரத்துக்கு மேல் இசை கேட்டால் கேட்கும் திறன் பாதிக்கும் என்று எச்சரிக்கிறது உலக சுகாதார நிறுவனம். ஒரு நாளைக்கு ஒரு மணி நேரத்துக்கு மேல் இசை கேட்பதைத் தவிர்க்குமாறும் அந்த நிறுவனம் பரிந்துரைத்துள்ளது.

தற்போது உலகெங்கும் இசையை அதிக மாகவும், பேரிரைச்சலாகவும் கேட்பதால் பல கோடி இளைஞர்கள் தமது கேட்கும் திறனை நிரந்தரமாக இழக்கும் அபாய நிலையில் உள்ளனர்.

அதிரும் ஆடியோ பிளேயர்கள், இசை நிகழ்ச்சிகள் மற்றும் பிற பொது இடங்களும் ஒலி விஷயத்தில் கடுமையான அச்சுறுத்தலாக உள்ளன. இதனால் 12 முதல் 35 வயதுக்கு உட்பட்ட 4 கோடிக்கும் மேற்பட்டோர், கேட்கும் திறனை இழக்கும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளில் இந்த வயதுக்கு உட்பட்டவர்களில் 50 சதவீதத்தினர் தமது தனிப்பட்ட ஆடியோ சாதனங்களில் பாதுகாப்பற்ற அளவுகளில் சத்தத்தை கேட்பதாகவும் உலக சுகாதார அமைப்பு கூறுகிறது.

டீனேஜ் வயதினரின் கேட்கும் திறன் குறித்து அமெரிக்காவில் நடத்தப்பட்ட ஆய்வில் 1994-ல் 3.4 சதவீதம் பேர் கேட்கும் திறனை இழந் திருந்தனர். அதுவே கடந்த 2006-ம் ஆண்டு 5.3 வீதமாக அதிகரித்துவிட்டது.

தினமும் ஒரு மணி நேரத்துக்குக் குறைவாக இசை கேட்பதுடன், ஒலி அளவையும் குறைத்துக் கேட்டால் காதுகளைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்பது இந்த ஆய்வுகள் தெரிவிக்கும் கருத்து.



# எமது இதய அஞ்சலி

**அமரர். சிவசூரியமூர்த்தி தங்கராசா**

யாழ் சாவகச்சேரி மீசாலையைப் பிறப்பிடமாகவும் யேர்மனி Dissen ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சிவசூரியமூர்த்தி தங்கராசா அவர்கள் 03.03.2015 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

ஆன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சிவசூரிய மூர்த்தி தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான திரு.திருமதி. அருணாசலம் செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் தயாளரூபன் ரூபிகா எழில்ரூபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

கம் ஸ்ரீ காமாட்சி அம்பாள், கேவிலார் மாதா உற்சவங்களின் போது எல்லா வியாபார ஸ்தாபனத்துடனரும் அன்பாகப் பழகிய நாட்கள் என்றும் மறக்க முடியாதவை. அவர்தம் நினைவுகள் எம்மை விட்டகலாது.


அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

**Dortmund Goparagnanam** ஸ்தாபனம்



# லண்டனில் மகாத்மா காந்தி சிலை திறப்பு!





இங்கிலாந்தில் லண்டன் நாடாளுமன்றச் சதுக்கத்தில் மகாத்மா காந்தியின் வெண்கலச் சிலை சனிக்கிழமை 14.03.2015 திறக்கப்பட்டது. இந்தச் சதுக்கத்தில் இடம்பெறும் முதல் இந்தியர் சிலை இதுவாகும். அரசுப் பதவி வகிக்காத ஒருவருக்கு இங்கு சிலை வைக்கப்படுவதும் இதுவே முதல் முறையாகும்.பிரிட்டன் முன்னாள் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில், நிறவெறிக்கு எதிராகப் போராடிய நெல்சன் மண்டேலா ஆகியோரின் சிலைகளுக்கு அருகே காந்தி சிலை வைக்கப்பட்டுள்ளது. 9 அடி உயரமுள்ள இந்தச் சிலையை, பிரிட்டன் பிரதமர் டேவிட் கேமரூன், மத்திய நிதியமைச்சர் அருண் ஜேட்லி ஆகியோர் திறந்து வைத்தனர். அப்போது, காந்திக்குப் பிடித்தமான ”ரகுபதி ராகவ ராஜாராம்“ பாடல் இசைக்கப்பட்டது.

பின்னர், டேவிட் கேமரூன் கூறுகையில், ”உலகின் மிகப் பழமையான ஜனநாயக நாட்டுக்கும், மிகப் பெரிய ஜனநாயக நாட்டுக்கும் இடையிலான சிறப்பான உறவைக் கொண்டாடும் வகையிலும், மகாத்மா காந்தியின் கருத்துக்களின் வலிமையை பறைசாற்றும் வகையிலும் இச்சிலை நிறுவப்பட்டுள்ளது“ என்றார். ”இந்தச் சிலை மூலம், காந்தியின் கருத்துக்கள் குறித்து எதிர்கால சந்ததியினர் அறிந்து கொள்ள முடியும். இந்தியா-பிரிட்டன் இடையேயான நட்புறவு வலுப்படும்“ என்று அருண் ஜேட்லி கூறினார்.

நிகழ்ச்சியில், பாலிவுட் நடிகர் அமிதாப் பச்சன், மகாத்மா காந்தியின் பேரன் கோபாலகிருஷ்ண காந்தி உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்

# மீண்டும் ஜோதிகா

திருமணத்தின்பின் பிள்ளை, குடும்பம் என்று வேலையில் இருந்து ஒதுங்கும் பெண்கள் பலர் இருக்கின்றார்கள். ஆனால் திரைப்படத்தில் நடித்த நடிகைகள் அப்படி ஒதுங்குவது என்பது மிக மிகக் குறைவு. அன்று பத்மினி கே.ஆர்.விஜயா சுஜாதா, லக்சுமி, போன்றோர் முதல் இன்று சிம்ரன் வரை தொடர்கின்றது. அதன் தொடர்சியாக யாரும் எதிர்பாரமல் சூர்யாவின் மனைவியான ஜோதிகா மீண்டும் திரைக்குத் திரும்பியுள்ளார்.

திருமணத்துக்குப் பிறகு முதல் முறையாக சூர்யா தயாரிப்பில் ஜோதிகா நடிக்கும் புதிய படத்துக்கு 36 வயதினிலே என்று தலைப்பிட்டுள்ளனர். இப்படத்திற்கு முதலில் 16 வயதினிலே என்ற பெயரையே சூட்ட சூர்யா நினைத்தார். அப்படம் அன்றும் இன்றும் கமல் ரஜினி ஸ்ரீதேவி பெயர் சொல்லும் படமாக பாரதிராஜா இயக்கி வெற்றியீட்டிய படம்.

சூர்யாவை காதலித்து திருமணம் செய்த ஜோதிகா, இரண்டு குழந்தைகள் பெற்ற பிறகு, மீண்டும் சினிமாவில் நடிக்க ஆரம்பித்துள்ளார்.
முதல் படமாக, மலையாளத்தில் மஞ்சு வாரியார் நடித்து பெரும் வெற்றிப் பெற்ற How old are you படத்தை தமிழ் மீண்டும் தயாரிக்கின்றார்கள். ஜோதிகா நாயகியாக நடிக்கிறார். இந்தப் படத்தை சூர்யா தனது 2டி பட நிறுவனம் மூலம் தயாரிக்கிறார். ஒரு காட்சியில் சிறப்புத் தோற்றத்திலும் வருகிறார் (ஏற்கெனவே ஜூன் ஆர் படத்தில் இவ்வாறு தோன்றியுள்ளார்). இந்தப் படத்துக்கு இதுவரை தலைப்பு வைக்காமல் இருந்தனர். இப்போது 36 வயதினிலே என்று பெயர் சூட்டியுள்ளனர். மலையாளப் படத்தை இயக்கிய ரோஷன் ஆன்ட்ருஸ்தான் தமிழ்ப் பதிப்பையும் இயக்குகிறார். கோடையில் வெளியாகிறது 36 வயதினிலே.

அது வேறு! இது வேறு கதைகள்!!


கமல் –ஸ்ரீதேவி




உங்கள் மங்கலகர வைபவங்களை அலங்கரிக்க
நீங்கள் விரும்பும் தெரிவை ஒரே இடத்தில் பெற்று மகிழுங்கள்!

**Thushi -Deko**

Thushiyanthan.Thiruselvam
0176 608 108 13

1989 முதல் இன்றுவரை தொடரும் எங்கள் சேவை!
உங்கள் தெரிவுகள் அனைத்தும்
எங்கள் கையிருப்பில்.....




Graphic design Vettimaniy Ltd


Elephant Stage

Christal mandapa Set round
Rada Krishna Stage
and Raja Gopuram


Entrance Saal Dekoration

Tel:02305 - 85945 - 0176 608 108 13
facebook: thushi-deko




பேராசிரியர் அ.சண்முகதாஸ்

தந்தைக்கு எதிராகப் போரிடப் பிள்ளைகள் துணிந்தார்கள். அவர்களுக்கு எதிராகப் போரிடத் தந்தையும் தயாரானான். ஆனால் இந்நிகழ்வினைப் பார்த்து அதைத் தடுக்க முயன்றார் ஒரு சான்றோராகிய புலவர். தந்தையாகிய கோப்பெருஞ் சோழ மன்னனையே புல்லாற்றூர் எயிற்றியனார் என்னும் புலவர் அறிவுரை கூறித் தடுக்க முயற்சித்தார்.

மன்னனும் புலவருடைய அறிவுரைக்கு மதிப்பளித்தான். அந்த நேரமே மன்னன் தன்னுடைய உயிரை வடக்கிருந்து மாய்த்துக் கொள்வதற்குத் தீர்மானிக்கிறான். வடக்குத் திசை நோக்கி இருந்த வண்ணம் உண்ணா நோன்பிருந்து உயிர் துறப்பதே வடக்கிருத்தல் எனப் பழந்தமிழர் கொண்டிருந்தனர். இதில் வியப்பு என்னவென்றால் வடக்கிருத்தல் என்னும் இத் தற்கொலை முயற்சிக்கு பக்கத் துணையாக நண்பர்களும் சேர்ந்து இருத்தலாகும்.

கோப்பெருஞ்சோழன் வடக்கிருக்கும்போது மதுரையிலே இருக்கும் தன்னுடைய நண்பன் புலவர் பிசிராந்தை தான் வடக்கிருப்பதை அறிந்து வருவார் என்று கூறியபோது அவர் வரமாட்டார் என மற்றவர்கள் கூறினர். ஆனால் மன்னன் “இன்பமான காலத்திலே வராவிட்டாலும் துன்பமான காலத்திலே நண்பன் வருவான்” எனக் கூறித் தனக்கு அருகிலே பிசிராந்தைக்கும் ஓர் இடம் ஒதுக்கும்படி கூறி வடக்கிருக்கத் தொடங்கினான். என்ன விந்தை. பிசிராந்தை, மன்னன் வடக்கிருந்த இடத்துக்கு வந்தபோது மற்றைய புலவர்களெல்லாம் வியப்பிலே ஆழ்ந்தார்கள்.

# விசித்திரமான நட்பு



வருவான் என மிக நம்பிக்கையுடன் கூறிய மன்னனின் நட்புச் சார்ந்த நம்பிக்கையினையும் நட்பினை எண்ணி வந்த புலவரின் அறிவினையும் எண்ணி அவர்கள் வியந்தார்கள். கோப்பெருஞ் சோழனுடன் வடக்கிருக்க வந்தவர்களுள் பொத்தியார் என்ற புலவரும் இருந்தார். அவருடைய மனைவி பிள்ளைப்பேற்றுக்காகக் காத்திருக்கிறாள் என்பது மன்னனுக்குத் தெரியும்.

எனவே பொத்தியாரை தன்னுடன் வடக்கிருக்க வேண்டாம் என மன்னன் தடுத்துவிட்டான். நட்புக் காரணமாக தற்கொலைக்கும் உடன்போகும் இந்த விசித்திரமான வழக்கத்தினை நம்முடைய பண்டைய இலக்கியங்கள் பதிவுசெய்துள்ளன.

இன்று தற்கொலை செய்ய முயற்சி செய்தல் தண்டனைக்குரிய குற்றமாகும். எவரும் அதற்கு இன்று துணைபோகவும் மாட்டார்கள்.



# முயலாமை!

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களும் கவிஞர் வாலி அவர்களும் ஒரு நாள் சந்தித்தனர்.

அப்போது கலைவாணர் வாலியிடம் 'என்னப்பா! முயல் ஆமையால் தோற்றது என்ற கதையைக் கேள்விப்பட்டிருக்கிறாயா? என்று கேட்டார்.

கேள்விப்பட்டிருக்கிறேன் என்றார் வாலி.

என்ன காரணம்?

'முயல் தூங்கிவிட்டது ஆமை ஓடி ஓடி வந்து வெற்றிபெற்றுவிட்டது என்றார் வாலி.

அதன் அடிப்படைக்காரணம் என்ன? தெரியுமா? என்று கேட்டரார் கலைவாணர்.

'முயல் ஆமையால் தோற்றுவிட்டது” அவ்வளவு தான் எனக்குத்தெரியும்? என்றார் வாலி.
என்ன சொன்னாய்?

அந்த முயல் ஆமையால் தோற்றதை மூன்று முறை திருப்பிச் சொல் என்றார் கலைவாணர்.


முயல் ஆமையால் தோற்றது
முயல். ஆமையால் தோற்றது.

**முயலாமையால்** தோற்றது என்றார் வாலி.

“அதாவது முயல் ஆமையிடம் தோற்றதற்கு காரணம் முயலாமைதான்' என்றார் கலைவாணர்.

கலைவாணர் சொன்ன விளக்கத்தைக்கேட்டு பிரமித்தார் வாலி.

# வலியை உணரும் மூளையின் பகுதி கண்டுபிடிப்பு




வலியை உணரும் மூளையின் பகுதி கண்டுபிடிப்பு

மனித மூளையில், வலியை உணரச் செய்யும் பகுதியை இங்கிலாந்தின் ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானிகள் குழு கண்டுபிடித்துள்ளனர்.


இதன் மூலம், நோயை குணப்படுத்த முடியாத நிலையில், அதனால் ஏற்படும் வலியை மறக்க வைக்கவோ, வலியை மூளைக்கு எடுத்துச் செல் லாமல் தடுக்வோ முடியும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இது மட்டும் அல்லாமல், சுயநினைவின்றி கோமாவில் உள்ளவர்களுக்கு ஏற்படும் வலிகளையும் இதன் மூலம் தெரிந்து கொண்டு சிகிச்சை அளிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

யேர்மனியில் பிராங்பேட் நகரில்
JAFFNA BASAR
உரிமையாளர்: நடராஜா சுதன்
Tel: 069 25 62 63 53
மாதம் மாதம் மாதரைக்கவரும்
புத்தம் புது டிசைன்களில்
தங்க நகைகள்
ஒரே இடத்தில்
தரம் மிக்க தங்க நகைகள்
பயணங்களை இனிமையாக்கும்
குறைந்தவிலையில்
பயணச்சீட்டுக்கள்
மற்றும் இலத்திற்குத்
தேவையான மளிகைப் பொருட்கள்
அனைத்திற்கும் நாடுங்கள்
Kaiserstr.64 (ladan Nr.22) 60329 Frankfurt/Main



# பெண்கள் மத்தியில் வசீகரமானவர் எனத் தன்னை நினைத்துக்கொண்டவர் கிட்லர்



ர்இந்த வகையான மீசைக்கு உலகிலேயே இருவர் தான் சொந்தக்காரர்கள். ஒருவர் உலகையே குலுங்க குலுங்க சிரிக்க வைத்தவர், மற்றொருவர் உலகே குலுங்கும் அளவிற்கு சீரழித்தவர். கொடுமைக்கு டிக்ஸ்னரியில் அர்த்தம் தேடினால் 99மூ இவர் பெயர் தான் பொருளாக கூறப்படும். சிறு வயதில் மிகவும் புத்திசாலியாக இருந்தவர் தான். அவரது தந்தையின் கொடுமைகளை தாங்கிக் கொள்ள முடியாது அழுது கதறியவர். ஒருவேளை அந்த சிறு வயது சம்பவங்கள் தான் இவரினுள் ஆழமாக பதிந்து உலகையே தன் காலடிக்கு கொண்டு வரும் அளவு ஒரு கொடுங்கோல் ஆட்சி புரிய வைத்திருக்கலாம். ஹிட்லர்! உலக போரின் வரலாற்று பக்கங்களில், ஒவ்வொரு பக்கத்திலும் இவரது பெயர் பொறிக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு, நிமிடமும், ஏன் ஒவ்வொரு நொடியும் இரண்டாம் உலக போரில் இவரது பெயர் ஒலிக்காத தருணங்களே இல்லை. நாசிக் படையின் தலைவரான ஹிட்லரின் அளவிற்கு நாச வேலைகளில் வேறெந்த ஒரு தலைவராலும் ஈடுப்பட்டிருக்க முடியாது. ஓர் இனத்தையே அழித்திடவும், ஒரு நகரையே அழித்து அங்கு குளம்வெட்ட வேண்டும் என்ற எண்ணங்கள் யாருக்கு தான் வரும், ஹிட்லரை தவிர. ஒவ்வொரு படைப்பாளியும் அவரது வாழ்நாளில் ஒரு தலைசிறந்த படைப்பினை படைத்து விட வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருப்பார். அந்த வகையில் ஓர் சிறந்த ஓவியரான ஹிட்லரின் தனது துப்பாக்கி மற்றும் பீரங்கி குண்டுகளால் படைத்தது மாபெரும் இரண்டாம் உலக போர். பல்லாயிரக்கணக்கான உயிர்களை பலி வாங்கிய கொடூர சம்பவத்திற்கு வித்திட்டவரை பற்றிய அரிய விஷயங்கள் இங்கே உங்களுக்காக....

ஆயிரக்கணக்கான உயிர்களை பலி வாங்கிய கொடூர சம்பவத்திற்கு வித்திட்ட ஹிட்லர் பற்றிய அரிய விஷயங்கள்!

வசீகரமானவர் ஹிட்லர்: தன்னைத் தானே மகளிர் மத்தியில் தான் மிக வசீகரமானவனாக திகழ்வதை நினைத்திருந்தார். மற்றும் இவரை காதலித்த இரு பெண்களும் தற்கொலை செய்து கொண்டனர் என கூறப்படுகிறது.

மார்டின் லூதர் கிங் ஒருமுறை மார்டின் லூதர் கிங் ஹிட்லரை பற்றி குறிப்பிடும் போது, "யாரும் மறந்து விட வேண்டாம், ஹிட்லர் ஜெர்மனியில் செய்தவை எல்லாமே சட்டப்பூர்வமானவை" என்று கூறியிருந்தார்.

ஓவிய கலைஞர் சிறந்த ஓவிய படைப்பாற்றல் மிகுந்த ஹிட்லர் சிறுவயதில் தானொரு கட்டிட கலைஞராக வர வேண்டும் என விரும்பினார். ஆனால், நுழைவு தேர்வில் தோல்வியுற்றதினால் கட்டிடங்களை வெடி வைத்து அழிக்கும் பணியில் ஈடுப்பட வேண்டிய சூழ்நிலை உருவாகிவிட்டது.

ஹிட்லர் - சதாம் உசேன் ஹிட்லரின் பதுங்கு குழியை வடிவமைத்தவரின் பேரன் தான் சதாம் உசேனின் பதுங்கு குழியை வடிவமைத்து கொடுத்திருக்கிறார். (என்ன ஒரு ஒற்றுமையப்பா!!!!)

1936 ஒலிம்பிக் பெர்லின் 1936 ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக்கில் வென்றவர்களுக்கு ஓக் மர பரிசுகள் கொடுத்திருக்கிறார் ஹிட்லர்.




அமைதிக்கான விருது 1939-இல் சுவிட்சர்லாந்து பாராளுமன்றத்தில் ஹிட்லருக்கு அமைதிக்கான விருது வழங்க பரிந்துரைக்கப்பட்டது.


ஹிட்லரின் பயம் உலகையே தன்னை கண்டு நடுங்க வைத்த ஹிட்லருக்கு பல் மருத்துவர்களை கண்டால் பயமாம். இனிப்புகளை விரும்பி உண்ணும் ஹிட்லருக்கு அவர்களை கண்டாலே பிடிக்காதாம்.

காந்தி எழுதிய கடிதம் ஒரு முறை காந்தி தனது நண்பருக்கு, அன்பு தோழனே போரிட வேண்டாம், போரை நிறுத்திவிடு என கோரிக்கை வைத்து கடிதம் எழுதியிருக்கிறார். அந்த நண்பன் வேறு யாருமில்லை ஹிட்லர் தான்.





## ஹிட்லரையும் அன்புத் தோழனே என அழைத்த காந்தி!



of humanity. But I nave resisted their request, because of the feeling that any letter from me would be an impertinence. Something tells me that I must not calculate and that I must make my appeal for whatever it may be worth.

It is quite clear that you are today the one person in the world who can prevent a war which may reduce humanity to the savage state. Must you pay that price for an object however worthy it may appear to you to be ? Will you listen to the appeal of one who has seliberately shunned the method of war not without considerable success? Any way I anticipate your forgiveneas, if I have erred in writing to you.

Herr Hitler
Berlin
Germany.

I remain,
Your sincere friend
M.K. Gandhi




Milin Impex GmbH

இலங்கையர்களுக்கான எவ்வித உணவுப்பொருட்களையும்
மொத்தமாகப் பெற்றுக்கொள் எமது இணையத்தளத்தை நாடவும்

Dortmund நகரில்
அனைவருக்கும் எங்கள்
இனிய தமிழ் புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்

Web :www.milinimpex.de

Geschäftszeiten:
Dienstag, Mittwoch, Freitag
10:00 bis 19:00 Uhr
Montag & Donnerstag
07:00 bis 17:00 Uhr
Samstags 09:00 bis 16:00 Uhr
Sonn. und Feiertags: Geschlossen





Westendorf Str.41 - 44287 Dortmund Tel: 0231 45 96 17 /28 Fax: 0231 18 15 288

# திரை உலகம்

# இயக்கிய இயக்குநர்க்கே இலத்தரசியான இவர்கள்!!

நடிகர்களும், நடிகைகளும் ஒன்றாக ஊர் சுற்றுவது, திருமணம் செய்து கொள்வது என்பது ஆச்சரியப்படத்தக்க விஷயம் இல்லை. இதற்கு அவர்கள் இருவரும் ஒன்றாக இணைந்து பல படங்களை நடிப்பது காரணமாக இருக்கும். ஆனால் நடிகைகளும், இயக்குநர்களும் திருமணம் செய்து கொண்டால், பலருக்கும் எப்படி, எப்போதிருந்து என பல கேள்விகள் எழும். இப்படி நடிகைகளும், இயக்குநர்களும் ஜோடியானவர்கள் பல. அதில் பலருக்கு தெரிந்தது பாக்யராஜ்-பூர்ணிமா, குஷ்பு-சுந்தர்.சி, அமலா பால்-விஜய், சீதா-பார்த்திபன், தேவயாணி-ராஜகுமரன் போன்றோர் தான். ஆனால் இன்னும் பலர் உள்ளனர். இங்கு அப்படி தன் படத்தில் நடித்த நடிகைகளை திருமணம் செய்து கொண்ட இயக்குநர்களைப் பார்ப்போமா!!! பலர் இணைந்தே வாழ்கின்றனர். சோனியா அகர்வால்-செல்வராகவன், பார்த்திபன்-சீதா சுரேஷ் மேனன்-ரேவதி ஆகியோர் பிரிந்துவிட்டனர்.




தலைவன்: அமலா பால்-விஜய்

உள்ளத்தை அளித்தா: சுந்தர்.சி-குஷ்பு




சிங்கம்: ஹரி-ப்ரீத்தா -செம்பருத்தி: ரோஜா-செல்வமணி






சரண்யா- பொன்வண்ணன்-மேமாதம்: ரேவதி-சுரேஷ் மேனன் -கிருஷ்ண வம்சி-ரம்யா கிருஷ்ணன்





காதல்கோட்டை: தேவயாணி-ராஜகுமரன் -டாலிங் டாலிங் டாலிங்: பூர்ணிமா-பாக்யராஜ் -ஆயிரத்தில் ஒருவன் : சோனியா அகர்வால்-செல்வராகவன்



அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

19 வருட சேவையில் தங்கமாய் ஜொலிக்கும் நம்பிக்கை ஸ்தாபனம்

**LITTLE INDIA**

*Textile & Jewellery*

அழகான ஆடைகளுக்கும்
பஞ்சாபி வகைகளுக்கும்
தங்க நகைகளுக்கும்
பெயர் பெற்ற ஸ்தாபனம்



Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84

இதோ கோடை கால விடுமுறை உங்கள் விமானப் பயணத்திற்கு பதிவுக்கு முந்துங்கள்

**EurAsian - Tours**

VALUTRANS MONEY TRANSFER

துரித பண மாற்றுச் சேவை!

info@eurasian-tours.com
Rishi Ganeshamoorthy



Rishi 0174 96 44 965

Further Str. 156
41462 Neuss



**Jasmine Silk House**

தமிழ் புத்தாண்டை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை!
14.03.2015 முதல் 15.04.2014 வரை
பட்டுச்சேலைகள் பாட்டிசாறிகள் பஞ்சாபிகள்
சிறுவர் சிறுமிகளுக்கான அடைகள்
அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் பெற்றிட நாடுங்கள்

Jasmin Silk House
Fester Str.50
40882 Ratingen

HP:0173 1937 325



அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

ஜஸ்மின் சில்க் ஹவுஸ்

Tel:02102 844744 T.Mohanadas



**ASIA BAZAR**

Ria Money Transfer
MoneyGram

துரித பண மாற்றுச் சேவை!

ஆசிய, ஆபிரிக்க
உணவுவகைகள்
வியாழன்சனிக்கிழமை தோறும்
இலங்கை, இந்திய உடன்
மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள்.
இன்னும் பல...

VALUTRANS MONEY TRANSFER

உரிமையாளர்:
பா. கணேஷ்

An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282

அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

யேர்மனியில் டோட்மூட் நகரில் சுவையான உணவிற்கு

தரமும் சுவையும் தரும்...



**CEYLON IMBISS**
இலங்கை உணவகம்

அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

திங்கள் முதல் சனிவரை
காலை 11.30 முதல்
மாலை 22.00 மணிவரை
ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில்
16.00 -22.00 மணி வரை

Tel: 0231 72 52 859

Annen Str.1
44137 Dortmund



MAYRAA | Rheinische Str. 71a | 44137 Dortmund | Tel.: +49 231 5320421 - 0 | Web: www.mayraa.com

இனிய தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

உங்கள் MAYRAA
11.04.2015
அன்று
-50 % வரை

Heart Says...
உங்கள் இதயம் விரும்புவது...
MAYRAA

யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!

மரக்கறி கடலுணவுப் பொருட்களின் மொத்த இறக்குமதியாளர்கள்

**StaR - Impex**

Asia & Afro Großhandel & Einzelhandel

எமது விலைச் சலுகைகள் அறிய எமது இணையத்தளம்
Web.Star-impex.net



Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00
Mobil: 0172/2183703
e-mail: star-impex@live.de
StaR Impex : Inh :K.Sivasubramaniam



அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

Tel:0231 860 26 96 Fax: 0231/8602698 Kipper Str.3 44147 Dortmund Germany